

# உங்கள் பொது அறிவு gk



பிரியா பாலேந்திரன்



பூமியின் சுற்றளவில் இருபதில் ஒரு பகுதியை உள்ளடக்கியதைப் பகுதிச் சுவர்க்கடலிலிருந்து கோபிப்பாலைவனம் வரை சீனப் பெருஞ்சுவர் உலக அதிசயங்களில் ஒன்றாக நீண்டு கிடக்கிறது. 3700 மைல்கள் (5920 கி.மீ) நீளமானது. தோராயம் வளைவுகள் மிகுந்ததாகச் சுவேனிலே, பாறைக்கற்கள், செங்கற்கள், மரக் கட்டைகளைக் கொண்டு இது அமைக்கப்பட்டுள்ளது. 20 அடி உயரமான தளத்தில் 5 அடி உயரமான சுவர்கள் இரு பக்கங்களிலும் உள்ளன. இப்பெருஞ்சுவரில் 25000 க்கு மேற்பட்ட கோபுரங்களுள்ளன. இவை 40 அடி வரை உயரமானவை. இவை படைக்கொத்தளங்களை விளக்கியுள்ளன. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இச்சுவர் கட்டுமானப் பணி ஆரம்பமாகியது. சீன சக்கரவர்த்தியான சின் ஷீஹுவாங் என்பவர் தனது இராச்சியப் பாதுகாப்பிற்காக இந்தச் சுவரை எழுப்பினார். இலட்சக்கணக்கான சீன மக்கள் இச்சுவரைக் கட்டும் பணியில் கட்டாயப்படுத்தப்பட்டனர். கிராமங்களில் அடைத்து வைக்கப்பட்டு வேலை வாங்கப்பட்டனர். இப் பெருஞ்சுவரைக் கட்டும் பணியில் ஒருகாலத்தில் அரை மங்கோலியர் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்து வந்திருக்கின்றனர். இப்பெருஞ்சுவர், ஒரு கலாச்சாரச் சின்னமாக குறிப்பிடத்தக்கது எனச் சீனர் கூறுவர்.

# உங்கள் பொது அறிவு

# gk

தொகுப்பாக்கம்:

பிரியா பாலேந்திரன் B. A. Hons. (Jaffna)

மீள்பார்வை:

கலாநிதி க. குணராசா

கமலம் பதிப்பகம்,
75/10A பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

◆ முதலாம் பதிப்பு : ஜனவரி 2005
◆ © பதிப்புரிமை : கமலா குணராசா,
◆ வெளியீடு : கமலம் பதிப்பகம்.
75/10 A பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
◆ கணனி வடிவமைப்பு : இ. ஆத்மானந்தன்.
◆ அச்சுப்பதிப்பு : யூனி ஆர்ட்ஸ், கொழும்பு.
◆ விலை : ரூபா.

◆ gk
(A book of General Knowlwdge)
◆ Compiled by: Priya Balendran. B. A. Hons. (Jaffna)
◆ Supervised by : Dr. K. Kunarasa.
◆ (c) KAMALA KUNARASA,
◆ Published by : Kamalam Pathippakam.
75 / 10A. Brown Road, Jaffna.
◆ First Edition : January 2005.
◆ Type Setting & Cover Design : R. Athmananthan
Ram Graphics. Wellawatte.
◆ Printed by : Uni Arts, Colombo.
◆ Price : Rs.

விற்பனையாளர்கள்:

◆ **ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
யாழ்ப்பாணம், கொழும்பு.

◆ **பூபாலசிங்கம் புத்தகசாலை,**
யாழ்ப்பாணம், வெள்ளவத்தை, கொழும்பு - 13.

# முன்னுரை

பொது அறிவு என்பது ஒரு சிறு நூலிற்குள் அடக்கிவிட முடியாத சுரங்கமாகும். உலகம் பற்றிக் கற்கின்ற அனைத்தும் பொது அறிவு விபரங்கள்தாம். இன்றைய பரீட்சைகளில் பொது உளச்சார்பும், பொது அறிவும் ஒருவரின் நுண்ணறிவையும் ஆற்றலையும் மதிப்பிட உதவும் அளவுகோலாகக் கொள்ளப்பட்டு வருகின்றன. பொது அறிவு என்பது கற்க முடியாதளவு பரப்பினைக் கொண்டது. அதனைக் கூடியவரை தொட்டுக்காட்ட இந்நூல் முயல்கின்றது.

- ஆக்கியோன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வரலாற்றுச் சுவடுகள் | 001 |
| 2. | இலங்கை | 019 |
| 3. | பலதும் பத்தும் - 1 | 042 |
| 4. | உலக நிகழ்வுகள் | 069 |
| 5. | பலதும் பத்தும் - 2 | 088 |
| 6. | தொலைத் தொடர்புகள் | 098 |
| 7. | பலதும் பத்தும் - 3 | 102 |

மற்றும்
உலக சுதந்திரப் போராளிகள்
சர்வதேச நினைவில்

# gk-1 வரலாற்றுச் சுவடுகள் - உலகம்




1. நமது பூமி எக்காலத்தில் தோன்றியது?
*5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்.*

2. பூமியின் முதல் உயிரினங்கள் எவை? எப்போது தோன்றின?
*பக்ரீரியங்களும் நீல - பச்சை அல்காக்களும். 3 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் சமுத்திரங்களில் தோன்றின.*

3. பூமியின் முதலாவது மனித இனம் யாவர்? எப்போது தோன்றினர்? யாது செய்தார்கள்?
*ஒஸ்ரலோபித்திக்கன், ஹோமோஹபிலிஸ் ஆவார்கள். 1.7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றினர். வேட்டையாடுபவர்களாகவும் காய்கனி தேடுவோராயும் வாழ்ந்தனர்.*

4. நியாண்டதால் மனிதரிலும் விவேகமான மனிதர் எவர்?
*ஹோமோ சபியன்ஸ். உதாரணம்:குறோமக்னன் மனிதர். 18 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.*

5. பழைய உலகமான ஐரோப்பாவில் விவசாய நடவடிக்கைகள் எக்காலப்பகுதியில் ஆரம்பமாயின?
*10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.*



6. கரடுமுரடான கல்லாயுதங்களைப் பயன்படுத்திய மனிதர் யார்?
*ஹோமோ எறக்ரஸ். 5 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்.*

7. நெருப்பின் உபயோகத்தினை அறிந்து கொண்ட மனிதர் யார்?
*நியாண்டதால் மனிதர். 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.*

8. நிலையான குடியிருப்புகள், நகரங்கள், சில்லு, மண்பாத்திரங்கள் என்பனவற்றின் உபயோகம், எக்காலத்திற்குரியவை?
*௰ ஆயிரம் தொட்டு ௪ ஆயிரம் வரையிலான காலகட்டத்தில்.*

9. நகர நாகரிகத்தினை யூப்பிரட்டீஸ்-ரைகிறிஸ் நதிப்பள்ளத்தாக்கில் உருவாக்கியவர்கள் யார்?
*சுமேரியர். முதல் எழுத்து வடிவம் இங்கேயே ஆரம்பமாகியது.*

10. செம்பின் உபயோகத்தினை அறிந்து பயன்படுத்தியவர்கள் யாவர்? எக்காலகட்டத்தில்?
*எகிப்தியர்களும் சுமேரியர்களும். ३ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.*

11. சிந்துவெளி நாகரிகம் எவ்விடங்களில் நிலைத்திருந்தது?
*மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகியவிடங்களில்.*

12. உலகின் முதலாவது பிரமிட் எங்கு எப்பொழுது அமைக்கப்பட்டது?
*எகிப்தில். கி.மு ௨௯௦௦. காஸா பிரமிட்.*

13. 365 நாட்களைக் கொண்ட காலண்டரை யார், எப்பொழுது அறிமுகம் செய்து வைத்தனர்?
*எகிப்தியர். கி.மு. ௨௫௦௦*

14. பைப்பரஸ் (papyrus) என்றால் என்ன?
*பைப்பரஸ் என்ற நாணல் புல்லிலிருந்து செய்யப்பட்ட பண்டைய காகிதம்.*

15. ஜேருசலம் கோவில் எப்பொழுது யாரால் கட்டப்பட்டது?
*கி.மு ௯௦௦. டேவிட் மன்னனால்.*

16. சீன நாகரிகத்தை உருவாக்கிய அரச பரம்பரை எது?
*சாங் பரம்பரை. (Shang Dynasty)*

17. எகிப்திய காஸாவிலுள்ள ஸ்பிங்ஸ் (sphinx) என்ற சிலை கி.மு 2600ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டது. அவ்வடிவத்தின் விளக்கம் யாது?




*பிரமிட்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட இச்சிலை மனித முகத்தையும் சிங்க உடலையும் கொண்டது. கி.மு. ௨௯௦௦.*

# உலகின் சுதந்திரப் போராளிகள்



மாசேதுங்
(1893 - 1976)

சீனாவின் கம்யுனிசத் தலைவராக விளங்கியவர். சீனாவை மக்கள குடியரசாக்கியவர்.



சார்ள்ஸ் டிகோல்
(1890 - 1970)

பிரான்ஸினைச் சுதந்திரமடைய வைத்தவர். பிரான்சின் தலைவராகவிளங்கியவர். நெப்போலியனுக்குப் பிறகு பிரான்சில் சக்தி வாய்ந்த தலைவராக மலர்ந்தவர்.

பற்றிக் லுமும்பா
(1925 - 1961)

கொங்கோவின் விடுதலைக்காக உழைத்தவர். அந்நாட்டின் (சயர்) முதலாவது பிரதமர்.

குவாமி நக்டுமா
(1909 - 1972)

பிரித்தானியாவிடமிருந்து கானாவைச் சுதந்திர நாடாக்கிய போராளி. அதன் முதலாவது பிரதமர்.



நெல்சன் மண்டேலா
(1918)

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர். தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடியவர். அதற்காக 27 வருடங்கள் (1964 - 1990) வரை சிறையில் வாழ்நாளைக் கழித்தவர். 1994, மெ, 10 தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதியாக வந்தார்.

## உலகின் சுதந்திரப் போராளிகள்



அகமட் சுகர்னோ
(1901 - 1970)

இந்தோனேசியாவின் முதலாவது தலைவர். ஜனாதிபதி. 1967இல் ஜெனரல் சுகர்ட்டோவால் பதவி கவிழ்க்கப்பட்டவர்.



லெனின் (1870 - 1924)

சொவியத் ருசியாவின் விடுதலைக்காகப் போராடி வெற்றி கண்டவர் விளாடி மிர் லெனின். சோவியத் ருசியாவின் முதலாவது ஜனாதிபதி.

பீடல் காஸ்ரோ
(1927)

கியூபா நாட்டின் சர்வாதிகாரி. அரச ஆட்சியை நீக்கி மார்க்சிய மக்களாட்சியைக் கியூபாவில் உருவாக்கியவர்.

18. எகிப்தியர்களின் அடிமைகளாகவிருந்த இஸ்ரேலியர்களை அவர்களின் அடிமைத்தளை நீக்கி அழைத்துச்சென்ற மதவழிகாட்டி யார்?
*மோசஸ். அவரே இறைவனின் பத்துக்கட்டளைகளை உலகிற்கு வழங்கியவர்.*

19. கி.மு. 800 அளவில் கிரேக்க அறிஞர் ஹோமரால் படைக்கப்பட்ட காவியங்கள் எவை?
*இலியட், ஒடிசி.*

20. பதிவு செய்யப்பட்ட முதலாவது ஒலிம்பிக் விளையாட்டு எவ்வாண்டு ஆரம்பமாகியது?
*கி,மு. 776.*

21. இஸ்லாம் மதத்தின் ஸ்தாபகர் யார்?
*முகம்மது நபி. (கி.பி. 570 - 632)*

22. கிரேக்கத்தின் மாபெரும் மன்னன். ரைரே, ஜேருசலம், இந்தியா, பபிலோன் முதலான நாடுகளைத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டிருந்தவன். யார்?
*மகா அலெக்சாண்டர் (கி.மு. 356 - 323)*

23. கிரேக்கத்தின் தத்துவஞானி யார்?
*சோக்கிரட்டஸ். (கி.மு. 399) இன்னொருவர் அரிஸ்ரோற்றில் (கி.மு. 384)*


24. முதன்முதல் அடிமைகளின் விடுதலைக்காக ரோமிற்கு எதிராக ஆயுதக்கிளர்ச்சி செய்த வீரன் யார்?
*ஸ்பார்ட்டகஸ். கி.மு. 71.*

25. உலகில் முதன்முதல் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் எவை?
*பிரான்சில் பாரிஸ் பல்கலைக்கழகம், இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட். கி.பி. 1150, 1167.*

26. மங்கோலியாவின் மாமன்னன் யார்? அவன் சாதித்தவை யாவை?
*ஹெங்கிஸ்கான். அவன் சீனா, பேர்சியா, ருசியா ஆகிய நாடுகளைப் படையெடுத்துக் கைப்பற்றினான். (கி.பி. 1211)*

27. உலகப் புகழ் பெற்ற ஓவியம் யாது? அதனை வரைந்தவர் யார்?
*மோனாலிசா. வரைந்தவர் லியனாடோ டா வின்சி (1503)*

28. சீன அதிசயம் எது? அது எப்பொழுது கட்டப்பட்டது?
*சீனப் பெருஞ்சுவர். கி.மு 215இலிருந்து கட்ட ஆரம்பிக்கப்பட்டது.*






29. உலகினைச் சுற்றிவந்து உலகம் உருண்டையென நிருபித்த கடலோடி யார்?
*பேர்டினன்ட் மகெலன் (1519)*

30. ஆபிரிக்காவைச் சுற்றிவந்து இந்தியாவிற்குக் கடல்வழி கண்டவன் யார்?
*வாஸ்கொடகாமா(1497)*

31. கிறிஸ்தோபர் கொலம்பஸ் (1451 - 1506) என்பவன் யார்?
*ஒரு கடலோடி. ஸ்பெயினிலிருந்து புறப்பட்டு கரீபியன் தீவுகளை முதன்முதல் கண்டறிந்தவர். (1493). இரண்டாவது பயணத்தில் டொமினிக்கா, யமேய்க்கா, போட்டோறிக்கோ தீவுகளை உலகறியவைத்தவர் (1493 - 96). மூன்றாவது பயணத்தில் ஒறினோக்கோவையும் நான்காவது பயணத்தில் கொண்டூரஸ், பனாமா ஆகிய பிரதேசங்களையும் கண்டறியச் செய்தவர்.*

32. ஐரோப்பாவில் 1347 - 1351 காலகட்டத்தில் 25 மில்லியன் மக்களைப் பலிகொண்ட கொள்ளை நோய் யாது? அதனை எவ்வாறு அழைப்பர்?
*பிளேக் நோய். கருஞ்சாவு (Black Death) என அழைப்பர்*

33. பின்வரும் அறிஞர்களின் புகழ் வாய்ந்த நூல்கள் எவை? அடம்ஸ் சிமித், எட்வேர்ட் கிப்பன், தோமஸ்பெயின், பிறாக்கோளாட், மோசாட்.
*அடம்ஸ் சிமித் - Wealth of Nations*
*எட்வேர்ட் கிப்பன் - Decline and fall of the Roman Empire*
*தோமஸ்பெயின் - Common Sense*
*பிறாக்கோளாட் - Washerwoman*
*மோசாட் - Haffner Serenade*



34. ஈர்ப்புப் பற்றிய கோட்பாட்டின் தந்தை யார்?
*ஐசெக் நியூட்டன்(1664)*


35. அறிஞர் ஜோன் லொக்கின் புகழ்பூத்த நூல் யாது?
*ஹஜியூமன் அண்டஸ்ரான்டிங் (Human Understanding) (1690)*

36. மாக்கியவல்லியின் புகழ்பூத்த நூல் யாது?
*பிரின்ஸ் (Prince)(1532)*

37. பேரறிஞர் நிக்கலஸ் கொப்பநிக்கசின் புகழ்பூத்த நூல் யாது? அதன் முக்கியத்துவம் என்ன?
*ஒன் தி றெவலுசன் ஒப் தி ஹெவின்லி பொடிஸ் (On the Revolution of the Heavenly Bodies)(1543) பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது என்ற உண்மையைக் கூறியவர் அவரே.*

38. இந்திய மொகலாயச் சக்கரவர்த்தி யார்?
*அக்பர்(1556)*

39. சுயெஸ் கால்வாய் வேலைகள் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டு எப்பொழுது நிறைவு பெற்றன? அக்கால்வாய் இணைக்கும் கடல்கள் எவை?
*1859 இல் ஆரம்பிக்கப்பட்டு 1869 இல் முற்றுப் பெற்றது. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைக்கின்றது.*




40. டாஸ் கபிட்டல் (Das Kapital) என்ற நூலின் ஆசிரியர் யார்?
*கார்ல் மார்க்ஸ்*

41. யூரேனஸ் கோளினைக் கண்டறிந்தவர் யார்?
*ஹேர்செல (Herschell) (1781)*

42. இமானுவேல் கான்ற், வாப்பிலாஸ் ஆகிய அறிஞர்களின் நூல்கள் எவை?
*இமானுவேல் கான்ற் - Critique of Pure Reason*
*வாப்பிலாஸ் - Laws of the Planetary System*

43. பிரான்சியப் புரட்சி எப்பொழுது தொடங்கியது?
1788.

44. நெப்போலியன் போனபார்ட் எந்நாட்டின் சர்வாதிகாரி?
*பிரான்ஸ் (1769 - 1821)*

45. நெப்போலியனை எவ்விடத்தில் நிகழ்ந்த யுத்தத்தில் வெலிங்டன் வெற்றி கொண்டார்?
*வார்ட்டலு யுத்தத்தில் (1815)*

46. ‘சிம்போனி’ (Symphony) என்பது யாது?
*ஸ்வரங்களின் ஐக்கியம். பல் வாத்தியங்களின் இசைப்பொழிவு.*

47. கம்யூனிச அறிக்கையை (Communist Manifesto) வெளியிட்ட அறிஞர்கள் யார்?
*கார்ல்ஸ் மார்க்ஸ், பிறடறிக் ஏஞ்சல்ஸ் (1848)*

## பொது அறிவு

1. ஆர்க்டிக பிரதேசப் பழங்குடிகள் யாவர்?
2. தென்மேற் பருவக்காற்றை யாழ்ப்பாணப் பரப்பில் எப்படியழைப்பர்?
3. சுவீடனின் தலைநகர் யாது?
4. உலகின் மகவுயரமான மரம் யாது? எங்குள்ளது?
5. உலக சுற்றுச்சூழல் தினம் யாது?
6. டெசிபல் (Decibal - dB) என்பது என்ன அலகு?
7. 50 வருட விழாவை எவ்வாறு அழைப்பர்?
8. மத்தியதரைக் கடலின் திறவுகோல் யாது?
9. டீசல் இயந்திரத்தை அமைத்தவர் யார்?
10. ADB என்ற சர்வதேச நிறுவனத்தின் விரிவுப் பெயர் யாது?
11. ஷுமேக்கர் லெவி என்பது விண்வெளியடன் சம்பந்தப்பட்டது. யாது?
12. எந்த இரு கண்டங்கள் பிரிவுறாது ஒன்றாக இணைந்துள்ளன?
13. லீப் வருடத்தில் எத்தனை நாட்கள் உள்ளன?
14. பூமியின் விட்ட அளவு யாது?
15. உலகின் ஆழமான சமுத்திரப் பகுதி யாது?
16. இலங்கையின் உயரமான மலை யாது?
17. உலகின் மிக ஆழமான நதிப்பள்ளத்தாக்கு யாது?
18. பயிலேரியா என்ற யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்பு யாது?
19. சோதனைக் குழாய் மூலம் பிறந்த முதற் குழந்தை எது?
20. செவாலியர் விருதினை நிறுவியவர் யார்? நாடு எது?

**விடைகள்:**


1. எஸ்கிமோவர் 2. சோளகக்காற்று 3. ஸ்ரெக்கறாம்
4. றெட் ஓக் மரம், 113 மீற். உயரம், கலிபோர்னியா 5. ஜுன் 5
6. ஒலியின் அழுத்தத்தைக் கணக்கிடும் அளவு 7. பொன்விழா
8. ஜிப்றோஸ்ரர் 9. ருடோல்∴ப் டீசல் 10. Asian Development Bank
11. 1994 ஜுலை 17-22ஆம் திகதிகளில் வியாழனுடன் மோதிய வால்நட்சத்திரம்
12. ஐரோ - ஆசியா 13. 366 நாட்கள் 14. 12756.31 கி. மீ.
15. மரியானா அகழி -11522 மீற். - பசுபிக்சமுத்திரம் 16. பேருதுதாலகால - 2685 மீற். 17. கொலறாடோ நதிப்பள்ளத்தாக்கு
18. கியூலெக்ஸ் நுளம்பு 19. லூயிஸ் பிறவுண், 1978 ஜுலை 25, இங்கிலாந்து
20. நெப்போலியன் 1802, பிரான்ஸ்

48. மேடம் பவாரி என்ற (Madam Bovary) நாவலின் ஆசிரியர் யார்?
*பிளாபேர்ட்ஸ் (Flauberts) (1856)*

49. படுகொலை செய்யப்பட்ட அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி யார்?
*ஆபிரகாம் லிங்கன் (1865)*

50. ஆபிரகாம் லிங்கனைச் சுட்டுக் கொன்றவர் யார்?
*ஜோன் வில்கிஸ் பூத்*

51. இந்தியத் தத்துவருள் ஒருவர் 1892 இல் அமெரிக்க சிக்காகோவில் உரையாற்றி அமெரிக்க மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். அவர் யார்?
*சுவாமி விவேகானந்தர்.*



52. வெறிநாய்க் கடிக்கான மருந்தினைக் கண்டுபிடித்தவர் யார்?
*லூயிஸ் பாஸ்டர் (1895)*


53. நோபெல் பரிசு எப்பொழுது அல்பிரெட் நோபலால் தாபிக்கப்பட்டது? எவ்வெத்துறைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது?
1896. *சமாதானம், விஞ்ஞானம், இலக்கியம்.*

54. ருசியப் புரட்சி எப்பொழுது நிகழ்ந்தது?
1917.

55. எவரெஸ்டில் முதன்முதல் காலடி வைத்த வீரர்கள் யார்?
*எட்மன்ட் ஹிலாரியும் டென்சிங் நார்கோவும். (1953)*

56. வடமுனையைச் சென்றடைந்த ஆராய்ச்சியாளர் யார்?
*றொபேர்ட் ஈ பியரி, மத்தியு ஹென்சன் (1909)*

57. ருசியப்புரட்சியின் பின்னர் ருசியாவின் சர்வாதிகாரி யார்? அவர் பின்னர் அப்பதவியை வகித்தவர் யார்?
*லெனின். அவர் பின்னர் ஸ்டாலின்*




58. உலகின் மிகச்சிறந்த உளவியல் அறிஞர் யார்? அவரின் நூலின் பெயர் யாது?
*சிக்மன்ட்பிராய்ட் (1900). கனவுகளுக்கான விளக்கம் (Interpretation of Dreams)*

59. முதலாம் உலகப்போர் எப்பொழுது ஆரம்பித்தது? எப்பொழுது முடிவடைந்தது?
1914 *இல் ஆரம்பித்தது.* 1918 *இல் முடிவுற்றது.*



காான்பியூசியஸ்
(கி.மு. 470)



பிளேட்டோ
(கி.மு.300)



ஆர்க்கிமிடிஸ்
(கி.மு.200)



கொலம்பஸ்
(1415-1506)



மார்ட்டின் லூதர்
(1483-1546)




ஜோர்ஜ் வாஷிங்டன்
(1732-1779)



நெப்போலியன்
(1769-1821)



அலெக்சாண்டர் கமில்ரன்
(1755-1804)




ஜோன் லொக்
(1632-1704)



சார்ள்ஸ் டிக்சன்
(1812-1870)



ஆபிரகாம் லிங்கன்
(1809-1865)



மாக் ருவான்
(1835-1910)



தோமஸ் எடிசன்
(1847-1831)



அல்பேட் ஐன்ஸ்ரன்
(1879-1955)



ஹிட்லர்
(1889-1945)



மாசேதுங்
(1893-1976)



கென்னடி
(1917-1963)ஹ



மார்டின் லூதர் கிங்
(1929-1968)




யூரி ககாரின்
(1934-1961)



லெனின்
(1870-1974)



மார்கிரட் தட்சர்
(1925-)



அயத்துல்லா கொமேய்னி
(1902-1996)



இந்திரா காந்தி
(1917-1984)



றொனல்ட் றீகன்
(1911-2001)

60. ரூஸ்வெல்ட் (1932) அமெரிக்காவின் தலைநகராக விளங்கியபோது ஜெர்மனியின் சர்வாதிகாரியாக விளங்கியவன் யார்?
*ஹிட்லர் (1933)*

61. கிறிஸ் தேசத்தின் அதென்ஸ் நகரில் முதன்முதலாக நிகழ்ந்த நவீன ஒலிம்பிக் விளையாட்டு எவ்வாண்டு நிகழ்ந்தது?
1896.

62. 1903 இல் விமானம் ஒன்று விண்ணில் முதன்முதல் பறந்தது. அதனை உருவாக்கிய சகோதரர்கள் யாவர்? அவ்விமானத்தின் பெயர் யாது?
*ரைட் சகோதரர்கள். அவ்விமானத்தின் பெயர் கிற்றி ஹவாக். (Kitty Hawk)*

63. இரண்டாம் உலகப் போர் எப்பொழுது ஆரம்பமாகியது?
1939

64. 1500 பயணிகளுடன் 1912இல் தனது முதலாவது பயணத்தின்போது கடலில் மூழ்கிப்போன கப்பல் யாது?
*ரைற்றானிக்.*

65. 1949 இல் நிகழ்ந்த முக்கிய ஒப்பந்தம் யாது?
நேட்டோ ஒப்பந்தம்.

66. இந்தியச் சுதந்திரம் எப்போது வழங்கப்பட்டது?
1947.

67. 1948 ஜனவரி 30இல் சுட்டுக்கொல்லப்பட்ட இந்தியப் பெரியார் யார்?
*மகாத்மா காந்தி.*

68. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தமைக்கான காரணம் யாது?
*ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய பிரதேசங்களில் அமெரிக்கா அணுக்குண்டுகளைப் போட்டு அழித்தமையே முதற்காரணம். (1948)*





69. 1945 இல் ஜேர்மன் வெற்றி கொள்ளப்பட் டதும் நிகழ்ந்த மகா நாடு யாது? அதில் கலந்துகொண்ட தலைவர்கள் யாவர்?
*யாவ்ரா மகாநாடு. ரூஸ்வோல்ற் (அமெ ரிக்கா), சேர்ச்சில் (பிரித்தானியா) ஸ்டாலின் (ருசியா)*

70. லண்டனில் முதல்முதல் ஐக்கியநாடுகள் சபையின் பொதுச்சபை எவ்வாண்டு கூடியது?
1946.

71. சோவியத் யூனியன் உருவாக்கிய முதல் செயற்கைக்கோள் யாது? எவ்வாண்டு?
*ஸ்புட்னிக்.1957.*

72. முதலாவது விண்வெளி வீரன் யார்? பயணப்பட்ட கலம் யாது?
*யூரி ககாரின்.ருசியர். வோஸ்டாக் 1.*

73. முதலாவது அமெரிக்க விண்வெளி வீரர் யார்?
*அலென் செப்பேர்ட்.*

74. சந்திரனில் முதல்முதல் இறங்கியவர்கள் யார்?
*நீல் ஆம்ஸ்ரோங், எட்வின் ஆல்டரின். (1969)*

75. றிச்சேர்ட் நிக்சன் அமெரிக்காவின் எத்தனையாவது ஜனாதிபதி?
37வது (1969)

76. இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமர் யார்?
*மார்கரெட் தட்சர். (1979)*

77. மனித உரிமைக்காகப் போராடி இறுதியில் அவமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்க அரசியல்வாதி யார்?
*மார்டின் லூதர் கிங் (1968)*

78. அப்போலோதசோயஸ் விண்கலன்கள் எந்த நாடுகளுக்குச் சொந்தமானவை?
*அமெரிக்கா, ருசியா.*

79. 1978ல் காம்ப் டேவிட் கருத்தரங்கின் நோக்கம் யாது?
*மத்தியகிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த, சவுதி அரேபியாவின் ஜனாதிபதி அன்வர் சதாமுக்கும் இஸ்ரேலியப் பிரதமர் மெனாச்சம் பெகின் அவர்களுக்கும் அமெரிக்க ஜனாதிபதி கார்ட்டர் ஏற்படுத்திய கருத்தரங்கு காம்ப் டேவிட் ஆகும்.*


80. அல்பேர்ட் ஜன்ஸ்ரனின் புகழ் பூத்த நூலின் பெயர் யாது?
*ஜெனரல் தியரி ஒப் றிலேற்றிவிற்றி. (General Theory of Relativity) (1915)*

81. சோவியத் விண்வெளி ஓடம் 1982இல் சுக்கிரனில் இறங்கியது. அக்கலத்தின் பெயர் யாது?
*வீனஸ் 13.*

82. முதலாவது சோதனைக் குழாய்க் குழந்தை எது? எங்கு எப்பொழுது பிறந்தது?
*லூயிஸ் ஜோய் பிரௌன். 1978 யூலை 25. இங்கிலாந்தின் ஒலட்ஹாம்.*

83. சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு எப்பொழுது தொடங்கியது?
*1979 ஜனவரி 1*

84. சர்வதேச ஊனமுற்றோர் ஆண்டு எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?
*1981 ஜனவரி1*



85. ஈரானின் புகழ்பூத்த பெருந்தலைவர் யார்?
*அயத்துல்லா கொமேனி.*

86. 1979இல் வியன்னாவில் சால்ட் 2 ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட அரசியல் தலைவர்கள் யார்?
*அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர். ருசிய ஜனாதிபதி பிரெஷ்னோ.*

87. 1977ல் காலமான உலகம் போற்றும் நகைச்சுவை நடிகர் யார்?
*சார்லி சாப்ளின்*

88. விண்கலம் தாங்கிச் சென்று ஏவிவிடும் கொலம்பியா கலம் முதன்முதல் எப்பொழுது ஏவப்பட்டது? அதன் சிறப்பு யாது?
*1981 ஏப்பிரல் 12. அது விண்ணில் கலத்தை ஏவிவிட்டுத் திரும்பத் தரைக்கு வரும் விமானம். இன்றில்லை.*

89. மெயின் காம்ப் (Main Kampf) என்ற நூலின் ஆசிரியர் யார்?
*ஆடொல்ப் ஹிட்லர் (1923)*

90. தனது பாதுகாப்புப்படை வீரர் இருவரால் சுட்டுக் கொல்லப்பட்ட இந்தியப் பிரதமர் யார்? அவரின் பின்னர் பிரதமராகப் பதவி ஏற்றவர் யார்?
*இந்திரா காந்தி (1984 அக்டோபர் 31) ராஜிவ் காந்தி*

91. 2500 உயிர்களைப் பலி கொண்ட விஷவாயுக் கசிவு இந்தியாவில் 1984 டிசம்பர் 3 ஆந்திகதி ஏற்பட்டது. இந்தியாவின் எந்த நகரத்தில் நிகழ்ந்தது?
*போபால்*

92. பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமர் யார்?
*பெனாசிர் பூட்டோ. (1988 டிசம்பர் 1)*

93. இலங்கைத் தீவிரவாதிகள் இயக்கம் ஒன்று மாலைதீவைக் கைப்பற்ற 1988 நவம்பர் 5 இல் முயன்றது. அதனை எந்த நாட்டின் உதவியுடன் மாலைதீவு அரசாங்கம் முறியடித்தது?
*இந்தியா*

94. எவரெஸ்ட் சிகரம் ஏறிய முதல் பெண்மணி யார்?
*ஜப்பானைச் சேர்ந்த ஜிங்கோட்பேய் (1974)*



95. பாலஸ்தீனத்தின் அதிபர் யார்?
*யாசீர் அரபாத் (2004 வரை)*

96. ஜனநாயகம் வேண்டிப் போராடிய நூற்றுக்கணக்கான மாணவர்களைச் சீன அரசு 1989 ஜூன் 4 இல் சுட்டுக் கொன்றது. அந்த நிகழ்வு நடந்தேறிய மைதானம் யாது?
*தினான்மென் சதுக்கம்.*



97. 28 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த தென் ஆபிரிக்கச் சுதந்திரத்திற்காகப் போராடிய தலைவர் யார்?
*நெல்சன் மண்டேலா. 1990 பெப்ரவரி 11ல் விடுதலையானார்.*

98. கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் எப்போது இணைந்துகொண்டன?
1990 ஜூலை 1ல்

99. பெண் பிரதமர்கள் நால்வரைக் குறிப்பிடுக.
*சிறிமாவோ பண்டாரநாயக்க (இலங்கை), மார்க்கிரட் தட்சர் (இங்கிலாந்து), பெனாசிர் பூட்டோ (பாகிஸ்தான்), பேகம் காலீதா ஜீயா (வங்காளதேசம்)*

100. உலகச் சுற்றுச்சூழல் மகாநாடு முதன்முதல் எங்கு கூடியது?
*பிரேசிலின் றியோ டி ஜெனிரோவில். 1992 ஜூன் 3.*

101. ஆம்ஜரடோமில் உயிர்கொல்லி நோய் ஒன்றிற்கான உலக மகாநாடு 1992 ஜூன் 20ல் கூடியது. அது எது?
*உலக எய்ட்ஸ் மகாநாடு.*

102. 1993ல் எதுவித போராட்டமுமின்றி இரண்டு குடியரசுகளாகப் பிரிந்து கொண்ட ஐரோப்பியநாடெது? அக்குடியரசுகளின் பெயர்களெவை?
*செக்கோஸ்லாவிக்கியா. செக் குடியரசு, ஸ்லாவாக்கியக் குடியரசு.*

103. கருணைக்கொலை என்பது யாது? அதனை முதன்முதல் சட்டபூர்வமாக அனுமதித்த நாடு எது?
*தீராத நோய் ஏற்படில் நோயாளியின் விருப்புடன் மரணத்தை வழங்கல். நெதர்லாந்து.*

104. மனித வெடிகுண்டால் கொல்லப்பட்ட இலங்கைப் பிரதமர் யார்?
*பிரேமதாஸ. (1993)*

105. இலங்கையின் முதல் பெண்ஜனாதிபதி யார்? எப்பொழுது பதவி ஏற்றார்?
*சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க. 1994 நவம்பர் 10.*

## திவேகி

1. இலங்கையின் பண்பாட்டு முக்கோணத்தின் இரு முனைகளாக அநுராதபுரம், பொலநறுவை என்பன அடங்குகின்றன. மற்ற முனையாக எந்த நகர் அமைகிறது?
2. 'வெள்ளை மாளிகை உதவி செய்ய இணங்குகிறது' என்பதில் வெள்ளை மாளிகை எந்த நாட்டைக் குறிக்கிறது?
3. 'திவேகி' என்ற பாஷையைப் பேசும் மக்கள் வாழும் நாடு எது?
4. கலை, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் மேதை எனத் திகழ்ந்தவர் கலிலியோவா? ஐசக் நியூட்டனா? லியனாடோ டாவின்சியா?
5. பசுபிக் சமுத்திரத்தையும் அத்திலாந்திக் சமுத்திரத்தத்தையும் இணைக்கும் கால்வாய் எது?
6. இன்சுலின் மருந்தினைக் கண்டுபிடித்தவர் யார்?
7. 'அவன் 500 றியால் அனுப்பியிருந்தான்' என்ற கூற்றில் றியால் எந்த நாட்டு நாணயம்?
8. சூரியமண்டலத்திலுள்ள மிகப்பெரிய கோள் எது?
9. இலங்கையில் மிகக் குறைவாக மழைபெறும் இடம் எது?
10. முசோலினி எந்த நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தான்?

| | |
|---|---|
| 1. கண்டி | 2. அமெரிக்கா |
| 3. மாலைதீவுகள் | 4. லியனார்டோ டாவின்சி |
| 5. பனாமா | 6. பிரெட்றிக் பன்சிங் |
| 7. ஈரான் | 8. வியாழன் |
| 9. மறிச்சுக்கட்டி | 10. இத்தாலி |

## மகா அலெக்சாண்டர் (கி.மு. 356 - 323)



உலக வரலாற்றில் மாபெரும் சக்கரவர்த்தியாகவும் வீரனாகவும் விளங்கியவன் மகா அலெக்சாண்டர். கிரேக்க நாட்டின் அரச குடும்பத்தினைச் சேர்ந்தவன். சிறுவயதிலிருந்தே பயமின்மையும் வீரதீரத்திறன்களும் அலெக்சாண்டரிடம் குடியேறியிருந்தன. அரிஸ்டோட்டிலின் மாணாக்கனாக விளங்கினான். இருபதாவது வயதில் கிரேக்க ஆள்புலங்களில் ஒன்றாகிய மசிடோனியாவின் அரசனாகத் தந்தைக்குப்பின் மாறினான். பின்னர் முழு கிரேக்கத்தையும் தன்னதிகாரத்தின் கீழ்க் கொண்டு வந்தான். மகாஅலெக்சாண்டர் தன் சாம்ராச்சியத்தை விஸ்தரிக்கும் விருப்புக்கொண்டு 35000 வீரர்களுடன் கி. மு. 334 இல் பேர்சியாவைக் கைப்பற்றினான். அங்கிருந்து கிழக்குப்புறமாகப் படைநடத்தி ஆப்கானிஸ்தான் ஊடாக இந்துநதிக்கரை வரை முன்னேறினான். இந்தியாவை வெற்றிகொள்ளும் அவாவுடன் இவனது படை நகர்ந்தது. இந்துநதிக்கரையோரம் இவனது ஆதிக்கத்திற்குட்பட்டது. அங்கிருந்து பபிலோன் (பாக்தாத்) மீண்டான். அங்கு சுகவீனமுற்று மரணத்தை கி.மு. 323 தழுவிக்கொண்டான். அவனது சாம்ராச்சியம் எகிப்து, சிரியா, சின்ன ஆசியா, பாரசீகம் உள்ளடக்கி கிரேக்கத்திலிருந்து இந்து நதிவரை பரந்திருந்தது.

# gk-2 இலங்கை

1. இலங்கைத் தீவின் வரலாற்றினைக் கூறும் பாளி இலக்கிய நூல்கள் மூன்றினைத் தருக.
*தீபவம்சம், மகாவம்சம், குளவம்சம்.*

2. மகாவம்சத்தின் ஆசிரியர் யார்?
*மகாநாமதேரர்*

3. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் ஏனைய சாதனங்கள் எவை?
*கல்வெட்டுக்கள் (கல்பொத்த), ஆதிப்பிராமிச் சாசனங்கள், நாணயங்கள், மட்பாண்டங்கள்.*

4. இலங்கையின் ஆதி மொழி யாது?
*எலு.*

5. இலங்கைத்தீவின் புராதன குடிமக்கள் யாவர்?
*இயக்கர், நாகர்.*

6. இலங்கையின் முதல் மன்னனாகக் கொள்ளப்படுபவன் யார்?
*விஜயன்.*

7. விஜயன் வருகைக்கு முன்னர் இலங்கையில் இருந்த நாக அரசுகள் எவை?
*நாகதீவு, கல்யாண், மகியங்கனை.*

8. எம்மன்னனுடைய காலத்தில் பௌத்தமதம் இலங்கைக்கு வந்தது?
*தேவநம்பியதீசன்.*


9. பௌத்த மதத்தை இலங்கைக்குக் கொண்டுவந்தவர்கள் யாவர்?
*மகிந்தன், சங்கமித்தை.*

10. விஜயனும் அவனது தோழர்களும் வந்திறங்கிய பிரதேசம் எப்பெயரால் அழைக்கப்பட்டது?
*தாமிரபரன் (தம்பபன்னை)*

11. இலங்கையின் தென்பகுதி தாமிர பரன் என அழைக்கப்பட்டபோது இலங்கையின் வடபகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?
*நாகதீபம் (நாகதீவு)*

12. இலங்கைத் தீவின் ஆதிக்குடிக ளான இயக்கர் நாகர் என்போர் திராவிட மக்கள் என நிரூபிக்கும் சான்றுகள் எவை?
*ஈமச்சின்னங்கள் (முதுமக்கள் தாழி), ஆதிப்பிராமியக் கல்வெட் டுக்கள், ஆதிமக்களது சமய வழிபாடு.*

13. இலங்கையின் புகழ் பூத்த முதல் மன்னன் யார்?
*தேவநம்பியதீசன்.*



கார்ல் மார்க்
**(1818 - 1883)**
ஜேர்மனியில் பிறந்த தத்து வஞானி. கம்யூனிசத்தின் தந்தை. Das Kapital என் பது (மூலதனம்) இவரது முக்கியமான நூல்.

14. அநுராதபுரத்தின் மேலாதிக்கத்திற்கு எதிராக நிகழ்ந்த முதல் தமிழரின் படையெடுப்பு எது?
*அநுராதபுரத்தின் மன்னனாக சூரத்தீசன் (கி.மு 187-177) விளங் கியபோது சேனன், குத்திக்கன் என்ற இரு தமிழ்மன்னர்கள் படையெடுத்து அநுராதபுரத்தினைக் கைப்பற்றி ஆண்டனர்)*

15. சேனன், குத்திக்கன் ஆகிய தமிழ் மன்னர்களை வெற்றி கொண்ட சிங்கள மன்னன் யார்?
*அசேலன்.*

16, இலங்கையின் புகழ் வாய்ந்த தமிழ் மன்னன் யார்?
*எல்லாளன். (கி.மு.145)*

17. எல்லாளன் கால வேறிரு சிற்றரசுகள் எவை?
*கல்யாணி, உருகுணை*

18. எல்லாளனைத் தனிச் சமரில் வெற்றி கொண்டு இலங்கை முழுவதற்கும் யார் மன்னனானான்?
*துட்டகாமினி*

19. மகாதூபம் அல்லது ரூவான்வெலிசாயாவைக் கட்டிய மன்னன் யார்?
*துட்டகாமினி*

20. ‘வடக்கே மகாவலி கங்கைக்கு அப்பால் தமிழரும் தெற்கே சமுத்திரமும் நெருக்கும்போது எப்படி நான் கால்களை நீட்டி நிமிர்ந்து படுக்கமுடியும்’ எனக் கேட்ட மன்னன் யார்?
*துட்டகாமினி*

21. புத்த தாதுச்சின்னங்களை வைத்து இலங்கையில் முதல்முதல் மகிந்ததேரரின் விருப்பப்படி கட்டப்பட்ட தாதுகோபம் யாது?
*தூபராம விகாரை.*

22. சங்கமித்ததேவியால் கொண்டுவரப்பட்ட வெள்ளரசுக்கிளை எங்கு எவ்விடத்தில் நாட்டப்பட்டது?
*அநுராதபுரத்தில் மகாமேகவன உத்தியாவனத்தில்.*

23. துட்டகாமினி அபயன் (கி.மு. 103) அநுராதபுரத்தில் கட்டிய விகாரை யாது?
*அபயகிரி விகாரை.*

24. இலங்கையின் நீர்ப்பாசனத்துறைக்குப் பெரும் பங்காற்றிய மன்னன் யார்?
*மகாசேனன்.*

## வரலாறு - சர்வாதிகாரிகள்

1. கர்சிகா தீவில் பிறந்த ஒருவன் பிரான்ஸ் நாட்டின் சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொள்ளப்பட்டான். வாட்டர்லூ சண்டையில் கைதாகினான். அவன் யார்?
2. ரோம சாம்ராச்சியத்தின் புகழ்பூத்த மன்னன், கிளயோப்பட்ரா என்ற அழகியின் காதலன் மார்க் அன்ரனியின் நண்பன். அவன் யார்?
3. சீனா, பாசியா, ரூசியா முதலான நாடுகளைக் கைப்பற்றி கிழக்காசியாவின் ஆக்கிரமிப்பாளனாக விளங்கிய மொங்கோலிய மன்னன் யார்?
4. ஜேத்மனியின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமான சர்வாதிகாரி யார்?
5. கியூபா நாட்டின் இன்றைய சர்வாதிகாரி யார்?

1. நெப்போலியன் 2. ஜூலியஸ்சீசர் (50 B.C. 3. ஜெங்கிஸ்கான்
4. ஹிட்லர் 5. பிடல் காஸ்ரோ

25. மகாசேனன் கட்டிய விகாரை ஜெதவனாராம விகாரையாகும். அவர் கட்டிய குளங்கள் இரண்டினைத் கூறுக.
*மின்னேரியாக் குளம், குறுலு வாவி, மகாகனதறா வாவி.*

26. சிகிரியாவை அமைத்த மன்னன் யார்?
*காசியப்பன்.*

27. சிகிரியாவின் தனிச் சிறப்புகள் எவை?
*சிகிரியா ஓவியங்கள், சிகிரியா சுவர்க் கவிதைகள்.*

28. பொலநறுவைக்கால மன்னர்கள் மூவரைக் குறிப்பிடுக.
*முதலாம் விஜயபாகு (1050 - 1110), முதலாம் பராக்கிரமபாகு (1115 - 1110), நிசங்கமல்லன் (1187 - 1196)*

29. பொலநறுவையில் தமிழ்க் கைதிகளைக் கொண்டு கட்டப்பட்ட துபி தெமழமகாசாயா ஆகும். இதனைக் கட்டுவித்தவன் யார்?
*முதலாம் பராக்கிரமபாகு.*

30. பொலநறுவையிலிருந்து தலைநகர் எங்கு மாறியது?
*தம்பதேனியாவுக்கு.*

31. 1215ல் பொலநறுவையைக் கைப்பற்றிய கலிங்க மன்னன் யார்?
*கலிங்கத்து மாகன்.*

32. யாழ்ப்பாண இராச்சியத்தின் பழைய பெயர்கள் எவை?
*நாகநாடு, சிங்கையரசு, மாவை, உத்தரதேசம்.*

33. யாம்ப்பாண அரசின் புராதன தலைநகரம் எது?
*கந்தரோடை (கதிரமலை)*

34. யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனாகக் கருதப்படுபவன் யார்?
*உக்கிரசிங்கன்.*

35. யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி யார்?
*விசயகாலிங்கன்.*

36. யாழ்ப்பாண வைபவமாலை நூலின் ஆசிரியர் யார்?
*மயில்வாகனப் புலவர்.*

37. சிங்கள ஆட்சியிலிருந்து யாழ்ப்பாண இராச்சியத்தை மீட்டு அரசகட்டில் ஏறியவன் யார்?
*சிங்கைப் பரராசசேகரன்.*

## சி. என் கோபுரம்



உலகின் மிகவுயர்ந்த கோபுரம் கனடாவின் ரொறன்டோ நகரத்திலுள்ள சி. என். ரவர் ஆகும். ரொறன்டோ நகர மக்கள் தொலைக்காட்சியைத் தெளிவாகப் பார்ப்பதற்காக அமைக்கப்பட்ட அன்ரனாக் கோபுரம் இதுவாகும். 1973 ஆம் ஆண்டு கட்டட அமைப்பு வேலைகள் ஆரம்பமாகின. அடித்தளம் 62000 தொன் நிறைகொண்ட கொங்கிறீட்டு உருக்குத்தளத்தில் அமைந்தது. 40 மாதங்களில் கட்டியெழுப்பப்பட்டது. இக்கோபுரம் 1976 அம் ஆண்டு யூன் மாதம் 26 அம் திகதி பொதுமக்களுக்காகத் திறந்துவைக்கப்பட்டது. மொத்தச்செலவு 63 மில்லியன் டொலர்கள். இக்கோபுரத்தின் மொத்த எடை 130000 தொன். பணிபுரிந்தவர்களின் எண்ணிக்கை 1537. 12500 சதுர அடி பரப்பினைக் கொண்டது அடித்தளம். அடித்தளத்தில் வர்த்தக நிலையங்களுட்பட பல பொழுதுபோக்கு அம்சங்களுள்ளன. 1122 அடி உயரத்தில் கண்ணாடி நிலத்தளம் உள்ளது. அதில் நிற்கும்போது காலடியில் அதளபாதாளம் தெரியும். 1136 அடி உயரத்தில் ஒரு தேநீர்ச் சாலையும், 1150 அடி உயரத்தில் சுழலும் தேநீர்ச்சாலை ஒன்றும் உள்ளன. கதிரையில் அமர்ந்தவாறே ரொறன்டோ நகரை இங்கிருந்து 72 நிமிடங்களில் சுற்றிப் பார்க்கலாம். 1645 அடி உயர 'Sky Pad' என்ற தளத்தில் நிற்கில் 160 கி. மீ வரை காட்சி தெரியும். காற்றின் வேகத்திற்குக் கோபுரம் சிறிது சாய்ந்து நிமிர்வதையும் உணரலாம். சி. என் ரவரின் மொத்த உயரம் 553 மீற்றர்களாகும்.

38. சப்புமல் குமரயா என்பவன் யார்?
*கோட்டை அரசனின் வளர்ப்புப் புத்திரனான சப்புமல்குமரயா யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி புவனேகபாகு என்ற பெயருடன் யாழ்ப்பாணத்திற்கு அரசனானான்.*

39. சப்புமல்குமரயாவிடம் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பறிகொடுத்த யாழ்ப்பாண மன்னன் யார்?
*கனகசூரிய சிங்கை ஆரியன்.*

40. கடைசிவரை போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாண அரசு பறிபோகாது ஆட்சி செய்த மன்னன் யார்?
*சங்கிலி செகராசசேகரன்.*

41. ஆங்கிலேயருடன் இறுதிவரை வன்னியின் சுதந்திரத்திற்காகப் போராடிய வன்னி வீரன் யார்?
*பண்டாரவன்னியன்.* (1811)

42. போர்த்துக்கேயர் இலங்கைக்குள் முதன்முதல் காலடி வைத்த ஆண்டு யாது?
1505

43. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் இருந்த இராச்சியங்கள் எவை?
*கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம்.*

44. போர்த்துக்கேயர்கால வருகையின்போது கோட்டை மன்னன் யார்?
*பராக்கிரமபாகு* (1484 - 1509)

45. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயத் தளபதி யார்?
*ஒலிவேரா.*


46. 1815 வரை அந்நியர் ஆட்சிக்குட்படாது சுதந்திர நாடாக விளங்கிய இராச்சியம் எது?
*கண்டி இராச்சியம்.*

47. ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்திய காலவேளையில் கண்டி மன்னன் யார்?
*கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்.*

48. கண்டி இராச்சியம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்த ஆண்டு யாது?
1796.

49. பிரித்தானியர் இலங்கையில் ஏற்படுத்திய இரட்டைஆட்சிமுறை யாது?
*கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியும் (ஆங்கில வர்த்தக சங்கம்) பிரித்தானிய ராணியும் இலங்கையில் ஒருங்கே பரிபாலித்தல் இரட்டைஆட்சிமுறை எனப்பட்டது. பொதுநிர்வாகம், நிதிநிர்வாகம், பாதுகாப்பு என்பன முடியிடமும், அரசிறை நிர்வாகம் வர்த்தகக் கம்பனியிடமும் ஒப்படைக்கப்பட்டு இரட்டை ஆட்சிமுறை நடைபெற்றது.*

## சீனப் பெருஞ்சுவர்



பூமியின் சுற்றளவில் இருபதில் ஒரு பகுதியை உள்ளடக்கிதாகப் பசுபிக் சமுத்திரத்திலிருந்து கோபிப்பாலைநிலம் வரை சீனப் பெருஞ்சுவர் உலக அதிசயங்களில் ஒன்றாக நீண்டு கிடக்கிறது. 3700 மைல்கள் (5920 கி.மீ) நீளமானது. நேராயும் வளைந்தும் மியாந்தராயும் சமவெளிகள், பள்ளத்தாக்குகள், இடுக்குகள், நதிகள் என்பனவற்றினூடாக இது அமைக்கப்பட்டுள்ளது. 20 அடி உயரமான தளத்தில் 5 அடி உயரமான சுவர்கள் இரு பக்கங்களிலும் உள்ளன. இப்பெருஞ்சுவரில் 25000 க்கு மேற்பட்ட கோபுரங்களுள்ளன. இவை 40 அடி வரை உயரமானவை. இவை படைக்கொத்தளங்களாக விளங்கியுள்ளன. கி. மு 3 ஆம் நூற்றாண்டில் இச்சுவர் கட்டுமானப் பணி ஆரம்பமாகியது. சீனச் சக்கரவர்த்தியான சின் சீகுயாங் என்பான தனது இராச்சியப் பாதுகாப்பிற்காக இந்தச் சுவரை எடுப்பித்தான். இலட்சக்கணக்கான சீன மக்கள் இச்சுவரைக் கட்டும் பணியில் கட்டாயப்படுத்தப்பட்டனர். முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டு வேலை வாங்கப்பட்டனர். இப் பெருஞ்சுவரைக் கட்டும் பணியில் ஒருதலைமுறை அழிந்தாலும் பலதலைமுறைகள் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக வாழ்ந்தள்ளனர். இப்பெருஞ்சுவர், ஒரு சுவருக்குள் சீனரை ஒற்றுமைப்படுத்தியுள்ளது எனச் சிலர் கூறுவர்.

50. இலங்கையின் முதலாவது தேசாதிபதி யார்?
*பிரெடறிக் நோர்த் (1798)*

51. 1798ல் நோர்த் தேசாதிபதி இலங்கையில் கரையோர மாநிலங்களை எவ்வாறு பிரித்தார்?
*நான்கு மாவட்டங்களாகப் பிரித்தார். கொழும்பு, காலி-மாத்தறை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முலைலைத்தீவு*

52. இராசகாரியமுறை என்றால் என்ன?
*அரசிடமிருந்து தாம் பெற்ற நிலத்தைப் பயன்படுத்திப் பயன் பெறுவதற்கு ஈடாக, வேதனம் பெறாது அரசுக்குச் சரீர ஊழியம் செய்தல்.*

53. நோர்த் தேசாதிபதிக்குப் பின்னர் இலங்கையின் தேசாதிபதியாக 1805ல் பதவி ஏற்றவர் யார்?
*சேர் தோமஸ் மெயிற்லான்ட்*

54. மாவட்டங்கள் கோறளைகளாகப் பிரிக்கப்பட்டன. கோறளைகள் பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டன. பற்றுக்கள் கிராமங்களாகப் பிரிக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றினதும் நிர்வாகி யார்?
*கலெக்டர், முதலியார், ஆராச்சி, விதானை.*

55. இரட்டை ஆட்சிமுறை எப்போது நீக்கப்பட்டது?
*1802ல் நீக்கப்பட்டு, முடிசார் குடியேற்ற நாடாகியது.*

56. இலங்கை அரசாங்க வர்த்தமானி முதன்முதல் எப்போது பிரசுரமாகியது?
*1802ல் நோர்த் பிரபு வெளியிட்டார்.*

57. கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் யார்?
*ஸ்ரீவிக்கரம இராஜசிங்கன்.*



**மார்டின் லூதர் கிங்**

**(1929 - 1968)**

அமெரிக்க நீக்ரோ குரு. மனிதவுரிமைகளின் தலைவர். சாத்வீகமான ஒரு போராட்டத்தின் மூலம் அமெரிக்கக் கறுப்பின மக்களின் மனிதவுரிமைகளுக்குப் போராடியவர். 1964 ஆம் ஆண்டு சமாதானதர்திற்கான நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1968, ஏப்பிரல் 5இல் ஒரு வெள்ளையினத்தவனால் கொல்லப்பட்டார்.

58. இலங்கை எப்பொழுது சுதந்திரம் அடைந்தது?
*1948 பெப்ரவரி 4.*

59. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
*ஆனந்த சமரக்கோன்.*

60. இலங்கையின் தேசிய மரம் எது? தேசியமலர் எது? தேசியப் பறவை எது?
*நாகமரம். நீலோற்பலம். காட்டுக்கோழி*

61. இலங்கையின் முதற் பிரதமர் யார்?
*டி.எஸ்.சேனநாயக்க*

62. இலங்கையின் முதல் தேசாதிபதி யார்?
*ஒலிவர் குணதிலக*

63. இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்? நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி யார்?
*வில்லியம் கோபல்லாவ. ஜே.ஆர்.ஜயவர்த்தனா.*

64. 1931ல் சர்வசன வாக்குரிமையை இலங்கையில் அறிமுகம் செய்த அரசியல் யாப்பு எது?
*டொனமூர் அரசியல் திட்டம்.*

65. 1947ல் சோல்பரி அரசியற்திட்டத்தின் பிரதான அம்சங்கள் எவை?
*பிரதிநிதிகள் சபை, செனற் சபை.*

66. 1972ம் ஆண்டின் ஜனநாயக சோஷலிச குடியரசு யாப்பின் முக்கிய அம்சம் யாது?
*ஜனாதிபதி ஏற்படுத்தப்பட்டது. மகாதேசாதிபதி முறை நீக்கப்பட்டது.*

67. இரண்டாம் ஜனநாயக சோஷலிச குடியரசு யாப்பு எப்பொழுது நடைமுறைக்கு வந்தது?
*1998.*

68. 1998ம் ஆண்டின் இலங்கைஅரசியல் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் எவை?
*பிரதமர் ஆட்சிமுறை நீக்கப்பட்டு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகமாகியது. விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை அறிமுகமாகியது.*

69. இலங்கையின் தேர்தல் மாவட்டங்கள் எத்தனை? உறுப்பினர்கள் தொகை என்ன? தேசியப்பட்டியல் உறுப்பினர் எண்ணிக்கை எத்தனை?
*௨௨ தேர்தல் மாவட்டங்கள். ௨௨௫ உறுப்பினர்கள். அதில் ௨௯ உறுப்பினர் தேசியப் பட்டியல் மூலம் தெரிவாவர்.*

70. நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் எத்தனை வருடங்கள்?
*ஆறு.*

71. இலங்கையில் எத்தனை மாகாணசபைகள் உள்ளன?
*எட்டு மாகாணசபைகள் உள்ளன. வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை*

72. இலங்கையின் நிர்வாக மாவட்டங்கள் எத்தனை? தேர்தல் மாவட்டங்கள் எத்தனை?
*25 நிர்வாக மாவட்டங்கள். ௨௨ தேர்தல் மாவட்டங்கள்.*

73. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் அடங்கும் மாவட்டம் எது?
*கிளிநொச்சி*

74. வவுனியாத் தேர்தல் மாவட்டத்தில் அடங்கும் மாவட்டங்கள் எவை?
*வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்.*

## பெரியார்கள்

1. 'பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே' என்ற அறிஞர் யார்?
2. அகிம்சை, சத்தியாக்கிரகம் என்னும் புதிய போராட்ட வடிவங்களை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் யார்?
3. அண்டத்தின் மையம் பூமி என்ற தவறான கருத்தை மாற்றியமைத்தவர் யார்?
4. 'உன்னையே நீ அறிந்துகொள்' என்ற அறிவுரை வழங்கிய அறிஞர் யார்?
5. அன்னா கரீனா என்ற உலகப் புகழ்பெற்ற நாவலின் ஆசிரியரின் பெயர் யாது?

**விடைகள்:**
1. கன்பியுசியஸ் 2. மகாத்மா காந்தி 3. கொப்பநிகஸ்
4. சாக்கிரட்டீஸ் 5. டால்ஸ்டாய்

75. இலங்கையின் கலாசாரமுக்கோண வலயம் எது?
*அநுராதபுரம், பொலநறுவை, கண்டி*

76. வடக்கு - கிழக்கு மாகாணசபையின் தலைநகரம் எது?
*திருகோணமலை.*

77. இலங்கையின் புராதனப் பெயர்கள் இரண்டினைக் கூறுக.
*தாமிரபரனி, செரன்டிப்*

78. இலங்கையின் மொத்தப் பரப்பு எத்தனை சதுரக் கிலோ மீற்றர்?
65610 *சதுர கி.மீ*

79. இலங்கையின் சனத்தொகை எவ்வளவு?
19,043,000. - 1.9 *மில்லியன்*

80. இலங்கையின் சனத்தொகை அடர்ந்த சதுர மைலுக்கு எவ்வளவு?
304 *பேர்.*

81. இலங்கையின் கல்வி அறிவில்லாதோர் வீதம் யாது?
*0.9%*

82. ஆண்களில் எத்தனை சதவீதத்தினர் கல்வி அறிவுடையோராவர்?
*92.5 %*

83. இலங்கையின் பிறப்பு வீதம் யாது? இறப்பு வீதம் யாது?
*ஆயிரத்துக்கு 17.5. ஆயிரத்துக்கு 6.0*

84. இலங்கையில் ஆண்களின் ஆயுட்காலம் எத்தனை ஆண்டுகள்?
70.7 *ஆண்டுகள். பெண்கள்* 75.4

85. நெல் செய்கை பண்ணப்படும் பருவகாலங்கள் எவை?
*மகாபோகம், யாலபோகம் (சிறுபோகம்), இடைப்போகம்.*

86. இலங்கையின் பிரதான பயிர்கள் எவை?
*தேயிலை, றப்பர், தென்னை.*

87. ஒரு கி.கிராம் தேயிலை உற்பத்திக்கு ஆகும் செலவு எவ்வளவு?
*ரூபா 100.82 (1998/99)*

88. இலங்கையில் வாழும் ஒருவருக்கு எவ்வளவு கலோரி உணவு கிடைக்கின்றது? எவ்வளவு புரத உணவு கிடைக்கின்றது?
2231 *கலோரி.* 54.2 *கிராம் புரதம்.*

89. இலங்கையில் எத்தனை மாநகராட்சி மன்றங்கள் உள்ளன? எத்தனை நகராட்சி மன்றங்களுள்ளன? எத்தனை பிரதேச சபைகளுள்ளன?
*14, 37, 258.*

90. இலங்கையில் எத்தனை மாவட்டங்களுள்ளன?
*25.*

91. இலங்கையில் பரப்பளவில் பெரிய மாவட்டம் எது?
*அநுராதபுரம் (7179 சதுர கி.மீ)*

## சர்வதேச தினங்கள்

1. தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படும் தினம் எது?
2. உலகச் சுற்றாடல் தினம் யாது?
3. சர்வதேச கூட்டுறவாளர் தினம் எது?
4. ஆசிரியர் தினம் யாது?
5. சர்வதேச சிறுவர் தினம் யாது?

விடைகள்
1. மே 01 2. யூன் 06
3. யூலை 07 4. செப்டெம்பர் 05
5. ஒக்டோபர் 01

92. இலங்கையில் பரப்பளவில் சிறிய மாவட்டம் எது?
*கொழும்பு 699 சதுர கி.மீ*

93. யாழ்ப்பாண மாவட்டத்தின் பரப்பளவு யாது?
*1025 சதுர கி.மீ*

94. வடமாகாணத்தில் அடங்கியுள்ள மாவட்டங்கள் எவை?
*யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்.*

95. கிழக்கு மாகாணத்தில் அடங்கியுள்ள மாவட்டங்கள் எவை?
*திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை.*

96. இலங்கையின் அதி உயரமான மலைச்சிகரம் யாது?
*பேதுருதாலகால. 2685 மீற்றர் உயரம்.*

97. சிவனொளிபாத மலை எம்மாவட்டத்திலுள்ளது?
*இரத்தினபுரி.*

98. நுவரெலியா மாவட்டத்திலுள்ள இன்னொரு மலைச்சிகரம் தருக.
*கிரிகாலப்பொத்தை (2577)*

99. கொக்காகலை, ரீட்டிகல, சிகிரியா என்பன யாவை?
*குன்றுகள்.*

100. இலங்கையின் மிகப்பழைமையான தேசப்படத்தினை வரைந்தவர்?
*தொலமி. அவரிட்ட பெயர் தாப்ரோபேன்.*

101. இலங்கையின் மிக நீளமான நதி யாது?
*மகாவலிகங்கை. 333 கி.மீ*

102. பம்பரகந்த நீர்வீழ்ச்சி எங்குள்ளது?
*வளவை கங்கையில்.*

103. சிங்கராஜாக் காடு எங்குள்ளது?
*சப்பிரகமுவாவில்.*

104. வட்டவளை, மறிச்சுக்கட்டி எனும் இடங்கள் காலநிலையைப் பொறுத்து எவ்வகையில் குறிப்பிடத்தக்கன?
*அதிக மழை பெறும் இடம் வட்டவளை (500 செ.மீ) மிகக்குறைந்த மழை பெறும் இடம் மறிச்சுக்கட்டி (70 செ.மீ)*

105. இராவண அல நீர்வீழ்ச்சி எந்த நதியில் அமைந்துள்ளது?
*கிரின்டி ஓயா.*

106. இலங்கையில் மிகக்கூடியளவில் நெற்செய்கை பண்ணப்படும் மாவட்டம் எது? குறைந்தளவில் செய்கை பண்ணப்படும் மாவட்டம்?
*குருநாகல், நுவரெலியா.*

107. ஜயகங்கை, மினிப்பே, எலகரா என்பன யாவை?
*புராதன நீர்ப்பாசன கால்வாய்கள்.*

108. இலங்கையின் கலாசார முக்கோணவலயம் யாது?
*அநுராதபுரம் - பொலநறுவா - கண்டி என்பனவற்றினை உள்ளடக்கியது.*


109. இலங்கையின் முதலாம் குடியரசு யாப்பு எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
*1972.*

110. இன்றைய இலங்கையின் அரசியல் யாப்பு யாது?
*1978 இன் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியல் யாப்பு.*

111. சிந்திப்பதற்கான சுதந்திரம், சமயம் சார்ந்த சுதந்திரம், சட்டத்தின் முன் முழுமையான நியாயம் என்பன ஒரு மனிதனின் எவ்வகையான நடவடிக்கைகள்?
*அவை மனிதனின் அடிப்படை உரிமைகளில் சிலவாம்.*

112. இலங்கையின் வாக்குரிமை வயது என்ன?
*18.*

## பூமராங்



அவுஸ்திரேலிய சுதேசிய மக்கள் வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தும் ஒரு முக்கிய ஆயுதம் பூமராங் என்பதாகும். இது வடிவத்தில் ஒரு வளைதடி. அவுஸ்திரேலியா எங்கும் வாழ்கின்ற பண்டைய மக்கள் பூமராங்கினைப் பயன்படுத்துகின்றனர். கிழக்கிலும் மேற்கிலும் வாழ்கின்ற இந்த ஆதிவாசிகள் பயன்படுத்துகின்ற பூமராங் வளைதடியை ஒரு இலக்கினைநோக்கிப் பிரயோகித்தால் அது இலக்கினைத் தாக்கிவிட்டு திரும்பவும் பிரயோகித்தவனிடம் திரும்பி வரும் திறன் நுட்பம் வாய்ந்தது. திரும்பிவரும் பூமராங்குகள் வடிவில் சிறியன. பெரியளவிலான பூமராங்குகள் இலக்கினைத் தாக்குவதோடு நின்றுவிடுகின்றன. 0.3 தொடக்கம் 2 மீற்றர் வரையிலான நீளத்தையும், 1 தொடக்கம் 12 செ.மீ அகலத்தையும் பூமராங் கொண்டிருக்கும். 30 தொடக்கம் 2300 கிராம் எடையைக் கொண்டிருக்கும். இலக்கினைத் தாக்கிவிட்டுத் திரும்பிவரும் பூமராங்குகள் சிலவேளை எய்தவனையே தாக்கிவிட வாய்ப்புண்டு.

113. மனித அடிப்படை உரிமை மீறப்படும்போது பாதிக்கப்பட்டவர் இலங்கையில் எந்த நீதிமன்றத்தில் முறையிடவேண்டும்?
*உயர் நீதிமன்றத்தில்.*

114. நிர்வாக விவகாரங்களுக்கு யாப்பின்படி நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர் யார்?
*ஓம்புட்ஸ்மன்.*

115. சொத்துக்கள், கல்வித்தகைமைகள் மட்டுமுள்ள நான்கு சதவீத மக்களுக்கு வாக்குரிமை வழங்கிய இலங்கையின் பழைய அரசியல் யாப்பு எது?
*1910 மக்கலம் அரசியல் யாப்பு.*

116. இலங்கையில் 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கிய அரசியல் யாப்பு எது?
*1931 டொனமூர் யாப்பு*

117. விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை எப்பொழுது அறிமுகமாகியது?
*1978 ஆம் ஆண்டு யாப்பின்படி.*

118. இலங்கைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் அங்கத்தவர்கள் எண்ணிக்கை யாது? தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகும் அங்கத்தவர்கள் எத்தனை?
196. 29.

119. பாராளுமன்றத்தை ஜனாதிபதி எச்சந்தர்ப்பத்தில் கலைக்கலாம்?
*ஜனாதிபதி தேவையெனக் கருதும்போது. ஒரு வருடத்தின் பின்பு.*

120. ஜனாதிபதியின் பதவிக்காலங்கள் எத்தனை தடவைகள்?
*இரண்டு தடவைகள்.*

121. இலங்கை அமைச்சரவையின் தலைவர் யார்?
*ஜனாதிபதி.*

122. இலங்கையில் எத்தனை மாகாணசபைகள் உள்ளன? அவை எவ்வாண்டு உருவாக்கப்பட்டன?
*எட்டு மாகாணசபைகள். 1987.*

123. வடக்கு கிழக்கு மாகாணசபைப்பிரிவில் அடங்கும் மாநகராட்சி மன்றங்கள் எவை?
*யாழ்ப்பாணம், மட்டக்களப்பு.*

124. இலங்கைக் குடியரசின் உயர்ந்ததும் இறுதியுமான நீதிமன்றம் எது?
*மீயுயர் நீதிமன்றம் (சுப்பிரீம் கோர்ட்)*

125. மாவட்ட நீதிமன்றத்தில் நீதி கிடைக்கவில்லையெனக் கருதில் எந்த நீதிமன்றத்தில் முறையிடலாம்?
*உயர் நீதிமன்றத்தில்.*

126. கட்டுக்கரைக் குளத்தின் வேறு பெயர் யாது? மல்வத்து ஓயாவின் வேறு பெயர் யாது?
*இராட்சதக்குளம், அருவியாறு.*

127. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியர் யார்?
*சுவாமி விபுலானந்தர்.*

128. சிங்கள நாடகத்துறைக்குப் பெரும் பங்கு ஆற்றிய பேரறிஞர் யார்?
*பேராசிரியர் சரத்சந்திர*

129. இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை எது?
உதயதாரகை (1805)

## அபுசிம்பெல் ஆலயங்கள்



நைல் நதிக் கரையில் நியூபியா என்ற இடத்தில் ஒரு பெரிய மலையைக் குடைந்து இரண்டு கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தப் புகழ் பெற்ற கோயில்களே அபுசிம்பெல் கோயில்களாகும். இவை சுமார் 3200 ஆண்டுகளுக்கு முன்னர் நைல் நதிக்கரை நாகரீகங்கள் செழித்து ஓங்கிய காலவேளையில் அமைக்கப்பட்டவையாகும்.

நியூபியா மலைக்குன்றில் இந்த இரண்டு கோயில்களை அமைப்பித்தவன் எகிப்தின் மாபெரும் மன்னனாக விளங்கிய இரண்டாவது ராம்சி ஆவான். கி. மு. 1200 அம் ஆண்டளவில் இந்த இரண்டு கோயில்களும் குடையப்பட்டன. உலகில் வேறெங்கும் இல்லாத வகையில் மலையைக் குடைந்து எடுத்து இரண்டு கோயில்களை அமைக்க அவன் விரும்பினான். ஒரு கோயில் அவனுடைய நினைவாக அமைக்கப்பட்டது. மற்றைய கோயில் அவனது மனைவியும் எகிப்திய சக்கரவர்த்தினியுமான நீபேராரி என்பவளின் நினைவாக அமைக்கப்பட்டது. அவனுடைய நினைவுக் கோயிலின் வாயிலில் 130 அடி அகலமும் 100 அடி உயரமும் கொண்ட நான்கு பாரிய சிலைகள் இந்த மலையில் செதுக்கப்பட்டுள்ளன. இவை நான்கும் ராம்சி மன்னன் வெவ்வேறு அலங்காரங்களுடன் அமர்ந்திருப்பது போன்ற காட்சியைத் தருகின்றன. இதில் ஒரு சிலையின் தலைப்பாகமும் மார்புப் பாகமும் இன்று காணப்படவில்லை. காலத்தின் அழிவுகளுக்கு அது உட்பட்டுவிட்டது. அவனுடைய மனைவியினுடைய கோயிலின் வாயிலில் அவன் மனைவியினுடைய வடிவம் சிலா ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளது. வாயிலில் அமைந்த நன்நான்கு சிலைகளுக்கும் இடையில் ஓர்புறம் இரண்டு சிலைகள் வீதம் அமைந்த இடைவெளியில் கோயிலுக்கான பிரதான வாயில் அமைந்திருக்கின்றது. இந்த வாயிலினூடாக உள்ளே நுழைந்தால் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய பெரியதொரு ஆலயம் அமைந்திருப்பதனைக் காணலாம். சுவர்களும் கூரைகளும் சிற்ப வடிவங்களினால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

130. தத்தம் மதமேன்மைக்காகவும் இலங்கையின் மறுமலர்ச்சிக்காக வும் தொண்டாற்றிய பெரியார்கள் யாவர்?
*ஆறுமுகநாவலர், அநகாரிக தர்மபால, சித்திலெப்பை.*

131. வர்த்தமானி (கசெற்) என்பது யாது? ஹங்சார்ட் என்பது யாது?
*அரசாங்கத்தின் நீதி நிர்வாகக் கட்டளைகளையும் அரசாங்க அறிவித்தல்களையும் தாங்கிவருவது கசெற் ஆகும். பாராளுமன்றத்தின் உரைகளைச் தாங்கி வருவது ஹங்சார்ட் ஆகும்.*

132. புத்தளம், காலி, திருகோணமலை முன்னர் காங்கேசன்துறை ஆகியவிடங்களில் இயங்கும் தொழிற்சாலை எது?
*சீமெந்துத் தொழிற்சாலை.*

133. முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் எங்கு தாபிக்கப்பட்டது? பின்னர் உருவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயங்கள் எவை?
*கட்டுநாயக்க, பின்னர் பியாகம, கொக்கலை, பள்ளேகல.*

134. பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபம் எந்த நாட்டின் அன்பளிப்பாகக் கட்டப்பட்டது?
*சீனா.*

135. இலங்கையின் பின்வரும் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையங்கள் எங்கு அமைந்துள்ளன? நெல், சோயா, தேயிலை, றப்பர், தென்னை.
*மகாஇலுப்பள்ளம, பல்லேகல, தலவாக்கலை, அகலவத்தை, லுணுவில.*

136. இலங்கையில் கட்டிப்பால் தொழிற்சாலை, பால் பதனிடும் தொழிற் சாலை, பால் பவுடர் தொழிற்சாலை என்பன எங்கெங்குள்ளன?
*பொலநறுவை, அம்பேவெல, வெலிசறை.*

137. கந்தளாய், ஹிங்குரன, பெல்வத்தை ஆகியவிடங்களிலுள்ள தொழிற்சாலைகள் எவை?
*சீனி உற்பத்தித் தொழிற்சாலைகள்.*

138. குமண, சுண்டிக்குளம், பின்னவெல, யால, வில்பத்து என்பன எவற்றின் சரணாலயங்களாக விளங்குகின்றன?
*குமணவும் சுண்டிக்குளமும் பறவைகள் சரணாலயம், பின்னவெல யானைகளின் சரணாலயம், யாலவும் வில்பத்துவும் விலங்குகளின் சரணாலயம்.*

## பொது அறிவு

1. 1997, நவம்பர் 19ஆம் திகதி அமெரிக்காவின் கொலம்பியா விண்வெளி ஓடத்தில் பறந்த முதல் தெற்காசியப் பெண்மணி யார்?
2. காட்ஸ் ஒப் சிமோல் திங்ஸ் (God of small things) என்ற நூலை எழுதி பூக்கர் பரிசு பெற்ற பெண்மணி யார்?
3. 1997இல் சாஹேப் பால்கே விருது பெற்ற இந்திய நடிகர் யார்?
4. ஈரான் நாட்டின் தலைவர் யார்?
5. சயர் என்ற ஆபிரிக்க நாடு மீண்டும் தனது பழைய பெயரை வைத்துக்கொண்டுள்ளது. அது யாது?
6. உலகம் முழுவதும் நிலக்கண்ணி வெடிகளைத் தடை செய்க என்னும் இயக்கத்தை நடாத்தி நோபல் பரிசு பெற்றவர் ஜாடி வில்லியம்ஸ் ஆவார். இந்த இயக்கத்திற்காகப் பிரசாரம் செய்த பெண்மணி கார் விபத்தில் பலியாகி உலகினைச் சோகத்தில் மூழ்கடித்தார். அவர் யார்?
7. ஐரோப்பியக் கட்டமைப்பின் ஒரே நாணயம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?
8. எட்டாம் உலகத் தமிழ் மாநாடு (1995) எந்நகரத்தில் நிகழ்ந்தேறியது?
9. செவ்வாய் கோளை ஆய்வு செய்ய ஏவப்பட்ட அமெரிக்காவின் விண்கலம் யாது?
10. குளோனிங் (பலபடியாக்கம்) மூலம் பிறந்த செம்மறி ஆட்டுக்குட்டியின் பெயர் என்ன?

**விடைகளுக்கான உதவுச்சுட்டுகள்.**

| | | |
|---|---|---|
| டயானா | சேர்பிய இளவரசி | ஈரோ |
| டாலர் | தஞ்சாவூர் | யாழ்ப்பாணம் |
| கல்பனா சௌலா | சுஷ்மிதா சென் | சிவாஜி கணேசன் |
| கொங்கோ | றொடீசியா | கமலகாசன் |
| சதாம் ஹுசைன் | பாத்பைன்டர் | அருந்ததி ராய் |
| அப்போலோ | சையத் முகம்மதுகடாபி | கொலம்பியா |
| இந்தியா | சென்னை | டொலி |

139. பேராதனை, ஹக்கல என்னுமிடங்களின் குறிப்பிடத்தக்க அம்சம் என்ன?
*இரண்டும் தாவரவியற் பூங்காக்கள்.*

140. இலங்கையின் செய்மதித்தொடர்புத் தகவல் நிலையம் எங்குள்ளது?
*பாதுக்கை*

141. இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியவர் யார்?
*சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா.*

142. இலங்கைப் பல்கலைக்கழகம் (கொழும்பு) எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?
1942. 1974.

143. இலங்கையின் முதலாவது பல்கலைக்கழகத் துணைவேந்தர் யார்?
*சேர் நிக்கலஸ் அட்டிகல*

144. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தலைவர் யார்? அப்பல்கலைக்கழகமாக தரம் உயர்ந்தபோது முதலாவது துணைவேந்தர் யார்?
*பேராசிரியர். க. கைலாசபதி. பேராசிரியர் சு. வித்தியானந்தன்.*

145. மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தை உருவாக்கிய அமைச்சர் யார்?
*அமைச்சர் அத்துலத்முதலி*

146. பண்டிதர் அமரதேவ இசைத்துறையில் செய்த பங்களிப்புக்காகப் பெற்ற பெரும் விருது எது?
*மாக்குசசே விருது.*

147. இலங்கைப் பிரதமருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரதான உடனடி நோக்கம் யாது?
*போர்நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தல்.*

**லியோ ரோல்ஸ்ரோய் (1828-1910):**

ருசியாவின் புகழ்பூத்த உலக எழுத்தாளர். அன்னா கரீனா, போரும் சமாதானமும் என்பன அவருடைய உலக முக்கிய நூல்கள்.

148. இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தில் காணப்படும் முக்கியமான அம்சம் யாது?
*நிறைவேற்று ஜனாதிபதி ஒரு அரசியற்கட்சி சார்ந்தவராகவும் பிரதமர் வேறொரு அரசியற்கட்சி சார்ந்தவராகவும் விளங்குகின்றமை.*

149. அரச வங்கிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
*இலங்கைவங்கி, மக்கள்வங்கி, தேசிய அபிவிருத்திவங்கி.*

150. தனியார் வங்கிகள் சிலவற்றினைக் குறிப்பிடுக.
*சம்பத் வங்கி, ஹற்றன்நாஷனல் வங்கி, கொமர்ஷல் வங்கி, யூனியன் வங்கி, செலான் வங்கி, நாஷனல்மேர்ச்சன்ற் வங்கி, பான் ஆசியா வங்கி.*

151. எவ்விடத்தல் நிலக்கரி வலுவினால் இயக்கப்படும் மின்பிறப்பி அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது?
*நுரைச்சோலை.*

152. இலங்கையின் கொழும்புத் தமிழ்த் தினசரிகள் எவை?
*தினகரன், வீரகேசரி, தினக்குரல், சுடரொளி.*

153. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரிகள் எவை?
*உதயன், வலம்புரி, ஈழநாடு, யாழ்தினக்குரல், ஈழநாதம்.*

154. லேக் ஹவுஸ் தாபனம் வெளியிடும் தினசரிகள்?
*டெயிலி நியூஸ், ஒப்சேவர், தினகரன், லங்காதீப.*

155. கிழக்கிலங்கைத் தினசரி எது?
*தினக்கதிர்.*

156. ஆறுமுகநாவலரிடம் தமிழ் கற்றுக்கொண்ட பாதிரியார் யார்?
*பீற்றர் பேர்சுவல்.*

**பெனாசீர் பூட்டோ யார்?**
பாகிஸ்தானின் முதலாவது பெண் பிரதமர். இஸ்லாமிய நாடுகளில் முதல் பிரதமரான பெண்மணியும் இவரே. முன்னாள் பிரதமராக விளங்கிய சுலிபிகார் அலி பூட்டோவின் மகளாவார்.

157. ஆறுமுகநாவலருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது எது?
*திருவாவடுதுறை ஆதீனம்.*

158. நாவலர் யாழ்ப்பாணத்தில் முதல் முதல் நிறுவப்பட்ட 'வித்யானுகூல யந்திரசாலை' எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?
*1949.*

159. 'புரட்டஸ்தாந்து பௌத்தர்' என்று குறிப்பிடப்படும் அறிஞர் யார்?
*அநகாரிக தர்மபால. ஐந்து புரட்டஸ்தாந்து பாடசாலைகளில் கல்வி கற்றும் மதம் மாறாதவர்.*

160. பௌத்த பிரம்மஞான சங்கத்தை இலங்கையில் தாபித்த மேல்நாட்டவர் யார்?
*ஸ்ரீல் ஒல்கோட்.*

161. நாவலரின் ஆரம்பப் பெயர் யாது? அநகாரிக தர்மபாலவின் ஆரம்பப் பெயர் யாது?
*கந்தர் ஆறுமுகம். டேவிற் ஹேவா விதாரனே.*

162. மகாபோதி சங்கம் என்ற நிறுவனத்தை வங்கியில் தாபித்தவர் யார்?
*அநகாரிக தர்மபால.*

163. சித்திலெப்பை வெளியிட்ட பத்திரிகை யாது?
*முஸ்லிம் நேசன் (1882)*

164. 'தமிழ் புருராக்' என்ற நூலின் ஆசிரியர் யார்? பாவலர் சரித்திர தீபகத்தின் ஆசிரியர் யார்?
*சித்தி லெப்பை. ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை.*

165. இலங்கைத் தமிழில் வெளிவந்த முதலாவது நாவல் எது?
*காவலப்பன் கதை. அடுத்து அசென்பேயுடைய கதை.*

166. ஆறுமுகநாவலருக்குப் பின்னர் ஓலைச்சுவடிகளைத் தேடிப்பெற்று ஆராய்ந்து வீரசோழியம், தொல்காப்பியத்தின் சில பகுதிகள், இலக்கணவிளக்கம், கலித்தொகை போன்ற நூல்களை வெளியிட்டவர் யார்?
*சி.வை. தாமோதரம்பிள்ளை.*

**மொஹமட் அலி ஜின்னா (1879 - 1948):**

இந்தியாவிலிருந்து பிரிந்த பாகிஸ்தான் என்ற முஸ்லிம் நாட்டினை உருவாக்கியவர். பாகிஸ்தானின் முதலாவது ஆளுநராக 1947 இல் பதவியேற்றார்.

167. அகில இலங்கைத் தேசிய காங்கிரசின் (1919) முதல் தலைவர் யார்?
*சேர் பொன் அருணாசலம்.*

168. முதல் முதல் 1873 இல் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட தலைவர் யார்?
*சேர் பொன் இராமநாதன்.*

169. சேர் பொன் இராமநாதன் நிறுவிய இரு புகழ் பூத்த பாடசாலைகளைக் குறிப்பிடுக.
*இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி.*


170. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்ற வரலாற்று நூலின் ஆசிரியர் யார்?
*சுவாமி ஞானப்பிரகாசர்.*

171. இலங்கையின் முதல் புவிச்சரிவியல் அறிஞர் யார்?
*கலாஜோதி ஆனந்தக்குமாரசாமி.*

172. இலங்கையின் வெண்கல உருவங்கள், இடைக்காலச் சிங்களக்கலை, சிவநடனம் ஆகிய நூல்களின் ஆசிரியர் யார்?
*ஆனந்தக்குமாரசாமி.*


173. யாழ்நூல் என்ற ஆய்வு நூலின் ஆசிரியர் யார்?
*சுவாமி விபுலானந்தர்.*

## அல்பேட் ஐன்ஸ்ரன்




அல்பேட் ஐன்ஸ்ரன் (1899 - 1955) என்பார் 20 ஆம் நூற்றாண்டின தலைசிறந்த விஞ்ஞானி. ஜேர்மனியில் பிறந்து சுவிற்சலாந்தில் கல்வி கற்றவர். "Theory of Reletivity" என்ற புரட்சிகரமான கருத்தினை 1905 இல் க்ண்டறிந்தார். 1921 இல் பௌதீகத் தறைக்கான நோபல் பரிசினைச் சுவீகரித்துக்கொண்டார். அமெரிக்காவில் 1955, ஏப்பிரல் 18 இல் மரணமடைந்தார்.

# ஒலிம்பிக் விளையாட்டு



சர்வதேச விளையாட்டுப் போட்டி. புராதன கிரேக்க நகரமான ஒலிம்பியாவில் முதன்முதல் நடைபெறத் தொடங்கியதால் அப்பெயரைப் பெற்றது. நான்கு வருடங்களுக்கு ஒருதடவை இது நிகழும். கி.மு. 776 இல் ஆரம்பமானது. நவீன ஒலிம்பிக் போட்டிகள் 1896 இல் ஏதென்ஸ் நகரில் ஆரம்பமாகியது. ஐந்து வளையங்கள் ஒலிம்பிக்கின் சின்னமாகும். ஒன்றுடன் ஒன்று இணைந்த இந்த ஐந்து வளையங்களும் ஒவ்வொரு கண்டத்தைக் குறிக்கின்றன. நீல வளையம் ஐரோப்பா, மஞ்சள் வளையம் ஆசியா, கறுப்பு வளையம் ஆபிரிக்கா, சிகப்பு வளையம் அமெரிக்கா, பச்சை வளையம் ஓசானியா, 'Swifter, Higher, Stronger' என்பது ஒலிம்பிக்கின் மகுட வாசகம். ஒலிம்பிக் தீபம் 1928 இலிருந்து ஏற்றப்பட்டு வருகின்றது. விளையாட்டில் முதல் மூன்றிடத்தினைப் பெற்றவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் என்பனவற்றால் ஆகிய பதக்கங்கள் முறையே வழங்கப்படும். விருதுகளும் வழங்கப்படும். பல்வேறு நாடுகளில் முறைவைத்து ஒலிம்பிக்ஸ் விளையாட்டு நடைபெறுகிறது. 1896 இல் அதென்ஸ் (கிரிஸ்), 1900 இல் பாரிஸ் (பிரான்ஸ்), 1932 இல் அம்ஸ்ரடாம் (நொர்லாந்து), 1944 இல் லண்டன் (ஐ.இ), 1968 இல் அற்றலான்ரா (அமெரிக்கா), 2000 சிட்னி (அவுஸ்திரேலியா), 2004 அதென்ஸ். 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் சீனாவில் பெஜ்ஜிங் நகரில் நடைபெறவுள்ளன.

# *gk-3* பலதும் பத்தும் - 1



1. ஹொலிவூட் திரையுலகின் குங்பூ வீரர் யார்?
*புரூஸ் லீ*

2. மனிதக் குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்ட இலங்கையின் தலைவர் யார்?
*பிரேமதாஸ*

3. இன்றைய பொப் இசைப்பாடகர் யார்?
*மைக்கல் ஜாக்சன்*

4. நவீன மருத்துவத்தின் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் யாது?
*உடலுறுப்பு மாற்றுச் சத்திர சிகிச்சை.*

5. எயிட்ஸ் நோயை உண்டாக்கும் வைரஸ் யாது?
*ஏச்.ஐ.வி HIV*

6. பின்வரும் மருந்துக் கண்டுபிடிப்புக்களின் கர்த்தாக்கள் யாவர்?
*அ. இரத்தஓட்டம் - வில்லியம் ஹார்வீ (1628)*
*ஆ. குளோரபோம் - ஜேம்ஸ் சிம்சன் (1847)*
*இ. ஆஸ்பிரின் - டி ரெசர் (1889)*
*ஈ. இன்சுலின் - பாண்டிங்ஈ பெஸ்ட் (1921)*
*உ. விட்டமின்கள் - சேர் எப்.ஜே. ஹாப்கின்ஸ்*

7. ஸ்புட்னிக், எக்ஸ்புளோரர், லூனா, மாரினர், வொயேஜர், அப்பல்லோ என்ற விண்வெளி ஆராய்ச்சிச் செயற்கைக்கோள்களில் எவை ருசியாவினுடையவை? எவை அமெரிக்காவினுடையவை?
*ருசியா - ஸ்புட்னிக், லூனா.*
*அமெரிக்கா - மாரினர், வொயேஜர், அப்பல்லோ*

8. அமெரிக்கா வானில் பவனிவர விட்டிருக்கும் விண்வெளித் தொலைகாட்டி எது?
*ஹாபிள்.*

9. கொஸ்மோகிரபி (Cosmography) என்றால் என்ன?
*பிரபஞ்ச அமைப்பியல்.*

10. யப்பானின் தேசியக்கொடியின் சின்னம் யாது?
*பெரியதொரு சிவப்பு வட்டம்.*

## ஈபிள் கோபுரம்



உலகின் மிகப் புகழ் வாய்ந்த ஒரு கட்டமைப்பாக ஈபிள் கோபுரம் (Eiffel Tower) விளங்கி வருகின்றது. ஆங்கில A எழுத்து வடிவானது. பிரான்சின் தலைநகரான பாரிஸில் அதன் ஒரு அடையாளமாக இக்கோபுரம் விளங்குகின்றது. குஸ்ராவ் ஈபிள் என்ற பொறியியலாளர் இக்கோபுரத்திற்கான திட்டவரைபை உருவாக்கினார். கோபுரத்தை அமைக்கின்ற பணி 1887, ஜனவரி 28 இல் ஆரம்பமாகியது. செயின் நதிக்கு அருகில் 46 அடிகள் ஆழமான அத்திவாரத்தில் 189 அடிகள் உயரமான முதல் தட்டு அமைக்கப்பட்டது. இது கோபுரத்தின் கால்களுடனான அடிப்பாகம். இரண்டாவது தளம் அடுத்த நான்கு மாதங்களில் அமைக்கப்பட்டன. மூன்றாவது தளம் 906 அடிகளில் கட்டிமுடிக்கப்பட்டது. அதற்குமேல் நான்காவது தளம் ஒன்றினைத் தனது ஆராய்ச்சிக்காக ஈபிள் அமைத்துக் கொண்டார். இத்தளத்திலிருந்து 50 மைல் சுற்றாடலை அவதானிக்க முடியும். இக்கோபுரம் 370.65 மீற். (986 அடி 4 அங்.) உயர்ந்து நின்றது. 1899, மார்ச் 16 அம் திகதி இக்கோபுரத்தின் கட்டுமானப்பணி முடிவடைந்தது. பதினையாயிரம் வெவ்வேறு வகையான உறுப்புக்களையும் 2.5 மில்லியன் ஆணி சுரைகளையும் கொண்டு இந்த இரும்புக் கோபுரம் கட்டிமுடிக்கப்பட்டது. உச்சிவரை 29922 படிகள் ஏறியிறங்கவுள்ளன. இன்று பாரந்தூக்கிகள் இயங்குகின்றன. தந்திக் கோபுரம், பணிமனைகள், ஹோட்டல்கள் என்பன இங்கு அமைக்கப்பட்டுள்ளன. வருடாவருடம் ஆயிரக்கணக்கான ஊர்காண் பயணிகள் இந்த இரும்புக் கோபுரத்தில் ஏறியிறங்குகின்றனர்.

11. பின்வருவன எந்த நாடுகளின் பாராளுமன்றப்பெயர்கள்?

1. *கொங்கிரஸ்,* ௨. *டெய்ஸ்*
3. *மஜ்ஜிலிஸ்* ௪. *லோக்சபா*
௫. *டயட்*

1. *அமெரிக்கா* ௨. *அயர்லாந்து*
3. *ஈரான்* ௪. *இந்தியா*
௫. *யப்பான்*

12. பிறையையும் நட்சத்திரத்தையும் சின்னமாகக் கொண்ட தேசியக்கொடிகளைக் கொண்ட இரு நாடுகள் எவை?
*அல்ஜீரியா, பாகிஸ்தான்.*

13. உலகின் முக்கியமான சமயங்கள் எவை? சிறு சமயங்கள் எவை?
*இஸ்லாம், கிறிஸ்தவம், இந்து, பௌத்தம் என்பன முக்கியமான சமயங்கள். சமணம், சீக்கியம், ஷிண்டோயிசம், டாவோயிசம் என்பன சிறு சமயங்கள்.*

14. கன்பியூசியஸ்ஸால் ஆக்கப்பட்ட சமயம் எது? சமண சமயத்தின் உருவாக்கத்திற்குக் காரணமானவர் யார்?
*கன்பியூசிய மதம். மகாவீரர்.*

15. உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி எது?
*சீன மொழி.*

16. தமிழ்மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை எவ்வளவு?
*67 மில்லியன்.*

## பாராளுமன்றம்

1. சோறா (Shora) எந்த நாட்டிற்குரிய பாராளுமன்றம்?
2. போகெற்றிங் (Foiketing) எந்த நாட்டிற்குரிய பாராளுமன்றம்?
3. லோக்சபா (Lok Saba) எந்த நாட்டிற்குரிய பாராளுமன்றம்?
4. காங்கிரஸ் (Congress) எந்த நாட்டிற்குரிய பாராளுமன்றம்?
5. மஸ்லிஸ் (Majlis) எந்த நாட்டிற்குரிய பாராளுமன்றம்?

**விடைகள்:**

1. ஆப்கானிஸ்தான் 2. டென்மார்க்
3. இந்தியா 4. ஐக்கிய அமெரிக்கா
5. ஈரான்

17. உலகில் அதிக மக்கள் தொகை நகரங்கள் மூன்றினை வரிசைப்படுத்துக.
*மெக்சிக்கோசிற்றி (௨௫.௬ மில்), சாவோபோலோ (௨௨.௧ மில்.), டோக்கியோ (௧௯ மில்)*

18. ஐக்கிய நாடுகள் சபையின் பின்வரும் அமைப்புக்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| 1. IAEA | 2. UNESCO | 3. ILO | 4. FAO |
| 5. WITO | 6. IMF | 7. IBRD | 8. IDA |
| 9. GATT | 10.UNICEF | 11. UNEP | 12. UNDP |

1. *International Atomic Energy Agency (AEA)*
2. *United Nations Educational Scientific and Cultural Organisation (UNESCO)*
3. *International Labour Organization (ILO)*
4. *Food and Agricultural Organization of the UN (FAO)*
5. *World Health Organization (WHO)*
6. *International Monetary Fund (IMF)*
7. *International Bank for Reconstruction and Development (IBRD)*
8. *International Development Association (IDA)*
9. *General Agreement on Tarrifs and Trade (GATT)*
10. *United Nations Childrens| Fund (UNICEF)*
11. *United Nations Environment Programme (UNEP)*
12. *United Nations Development Programme (UNDP)*

19. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB - Asian Development Bank) உறுப்பு நாடுகள் எத்தனை?
௩௨

20. 150 உறுப்பு நாடுகளையும், 11 இலட்சத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும் கொண்ட ஒரு முக்கியமான கழகம் பிரித்தானிய வழக்கறிஞர் பீற்றர் பேரன்சன் என்பவரால் உருவாக்கப்பட்டது. (1961) அது எது?
*மனித உரிமைகள் கழகம். (Amnesty International).*

21. பொதுநலவாய நாடுகளின் (காமன்வெல்த்) தலைவி யார்?
*பிரித்தானிய மகாராணி)*

## ரோம இலக்கங்கள்

*ரோம இலக்கங்கள் எழுத்துக்களால் வழக்கப்படுத்தப்படுகின்றன. ஓர் எழுத்து ஒரு தடவையோ இரு தடவையோ வரும்போது பெறுமதி அத்தனை தடவை அதிகரிக்கிறது. (உ-ம்: XXX= 30, CC = 200). ஒரு எழுத்துக்குப் பின்னால் வேறுசில எழுத்துக்கள் வரும்போது பெறுமதி அதிகரித்துக்கொள்கிறது. (உ-ம்: VI = 6, LXX = 70, MCC = 1200). அதேமாதிரி எழுத்துக்கு முன்னால் வரும்போது பெறுமதி குறைகிறது. (உ-ம்: IV = 4, XC = 90, CM = 900)*

| எழுத்து | பெறுமதி | எழுத்து | பெறுமதி | எழுத்து | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| I | 1 | XX | 20 | D | 500 |
| II | 2 | CCC | 30 | M | 1000 |
| III | 3 | XI | 40 | V | 5000 |
| IV | 4 | L | 50 | X | 10000 |
| V | 5 | LX | 60 | L | 50000 |
| VI | 6 | LXX | 70 | C | 100000 |
| VII | 7 | LXXX | 80 | D | 500000 |
| VIII | 9 | XC | 90 | M | 1000000 |
| X | 10 | C | 100 | | |

22. ஐரோப்பிய பொருளாதாரக் கட்டமைப்பின் (EEC - European Economic Community) அங்கத்துவ நாடுகள் எவை? இதன் வேறு பெயர் யாது?
*பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க், ஜேர்மன், இத்தாலி, பிரித்தானியா, அயர்லாந்து, டென்மார்க், கிரீஸ், ஸ்பெயின், போர்த்துக்கல்.*

23. போராலும் இயற்கையின் சீற்றத்தாலும் அல்லலுறும் மக்களுக்கு உதவுவதற்காக 1863ல் ஜே.எச்.பூனால்ட் என்பவரின் வேண்டுதலால் உருவாக்கப்பட்ட சங்கம் யாது?
*சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் (International Committee of Red Cross)*

24. சார்க் (SAARC - South Asian Association for Regional Co - Operation) தெற்காசிய நாடுகளின் கட்டமைப்பு நாடுகள் எவை?
*இந்தியா, மாலைதீவு, பூட்டான், நேபாளம், இலங்கை, பாகிஸ்தான், வங்காளதேசம்.*

25. ஆசியான் (ASEAN - Association of South East Asian Nations) தென்கிழக்காசிய நாடுகளின் கட்டமைப்பிலுள்ள நாடுகள் எவை?
*இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, புருணை.*

26. ஓபெக் (OPEC - Organization of Petroleum Exporting Countries) பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பிலுள்ள நாடுகளெவை?
*ஈராக், ஈரான், குவைத், சவுதி அரேபியா, வெனசுவெலா, அல்ஜீரியா, ஈக்வடோர், காபொன், இந்தோனேசியா, லிபியா, நைஜீரியா, கட்டார்.*

27. சாரண இயக்கத்தின் தந்தை யார்?
*ராபேர்ட் பேடன் பவுல். (1907)*

28. ரவீந்திரநாத் தாகூர், சி.வி.இராமன், ஹர்கோபிந் கோராயா, அன்னை தெரேசா ஆகியோருக்கு ஒரு விடயத்தில் ஒற்றுமையுள்ளது. அது யாது?
*நால்வரும் நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள்.*

29. மக்சேசே பரிசு யாரின் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது?
*பிலிப்பைன்ஸ் அதிபர் மறைந்த ராமன் மக்சேசே நினைவாக.*

30. மக்சேசே விருது பெற்ற இலங்கையர் யார்?
*மாரி.எச்.ரத்னம் (பொதுச்சேவை 1958), ஏ.டி.ஆரியரத்ன (சமுதாயத்தலைமை 1969), எம்.ஸி.ரஷ்மி (இதழியல் தொடர்பாடல் - 1977), என்.டி.பி. மஞ்ஞ்ரீ - 1979), எம்.ஜெயக்கொடி (1983), வி.இ.சரத்சந்திரா (இலக்கியம் - 1988)*

31. சாகித்ய ரத்னா என்ற இலக்கிய விருதினை முதன் முதல் பெற்ற ஈழத்து எழுத்தாளர் யார்?
*சி.ச.வரதராசன் என்ற வரதர். சிறுகதைப் படைப்பால் (2002)*

32. (அ) பெரிய விலங்கு, (ஆ) தரையில் வாழும் பெரிய விலங்கு, (இ) உயரமான மரம், (ஈ) பெரிய பாலைவனம் எவை?
*(அ) நீலத் திமிங்கிலம் (ஆ) ஆபிரிக்க யானை (இ) கலிபோர்னியாவின் றெட் மரம், (ஈ) சகாரா*

33. (அ) மிகவுயர்ந்த கட்டிடம் (ஆ) மிகவுயர்ந்த கோபுரம் (இ) அதிவேக விமானம் (ஈ) மிகப் பெரிய விமான நிலையம் எவை?
*(அ) சிக்காகோவிலுள்ள சீயர்ஸ் கட்டிடம் (៤៤3மீ)*
*(ஆ) கனடாவிலுள்ள சீனன் கோபுரம் (៩៩மீ)*
*(இ) கொன்கோர்ட் சூப்பர் சோனிக் விமானம் (மணிக்கு ௨333கி.மீ)*
*(ஈ) சவுதி அரேபியாவிலுள்ள மன்னர் காலித் சர்வதேச விமானத்தளம்.*

34. பின்வரும் சுருக்கப்பெயர்கள் / புனைபெயர்கள் எவரைக் குறிக்கின்றன?

அ) ...பெரர் — ஆ) அல்லா
இ) நாவலர் — ஈ) ராஜாஜி
உ) ஆசியஜோதி — ஊ) கல்கி
எ) சிவாஜி கணேசன்

*அ) அடால்ப் ஹிட்லர் — ஆ) சி.என்.அண்ணாத்துரை*
*இ) ஆறுமுகநாவலர் — ஈ) சி.ராஜகோபாலாச்சாரி*
*உ) ஜவஹர்லால் நேரு — ஊ) ரா.கிருஷ்ணமூர்த்தி*
*எ) எம்.கணேசன்*

35. மைக்கல் ஜோர்டான், ஸ்ரீகாந்த், விவியன் ரிச்சார்ட் என்பவர்கள் எத்துறை சார்ந்த விளையாட்டு வீரர்கள்? ஓய்வுபெற்றுள்ளனர்.
*கூடைப்பந்து, கிரிக்கெட், கிரிக்கெட்.*

36. விண்வெளியில் பறந்த இந்தியப்பெண்மணி யார்?
*கல்பனா சௌலா.*

37. புக்கர் பரிசிலைப் பெற்ற இந்தியர் யார்?
*அருந்ததி ராய். (Gods of small things)*

38. குளோனிங் முறை மூலம் டாலி செம்மறியாட்டுக்



ஸ்ராலின்
**(1879 - 195)**
சோவியத் சமவுடமைக் குடியரசின் ஸ்தாபகர். 1941 இல் ரூசியாவின் சர்வவல்லமைமிக்க பிரதமராக விளங்கியவர். இரண்டாம் உலக மகா யுத்தத்தினை முன்நடத்திய வரில் ஒருவர். மார்க்சிசவாதி.

குட்டியை உருவாக்கிய விஞ்ஞானி யார்?
*ஈயான் வில்மட் (ஸ்கொட்லாந்து)*

39. பூமியில் 1997ல் காட்சி தந்த வால்வெள்ளி எது?
*ஹேல்பாப் (Hale Bopp Comet)*

40. செவ்வாய்க் கோளைத் தெளிவாகப் படம் எடுத்து ஆராய்ந்த விண்கலம் (அமெரிக்கா) 1977 ஜுலையில் செவ்வாயின் ஆரஸ் வில்லிஸ் பகுதியில் தரையிறங்கியது. அதன் பெயர் என்ன?
*பாத் பைன்டர். இந்த விண்கலம் எடுத்துச் சென்ற சோஜர்னர் ரோபோ வண்டி செவ்வாயின் நிலப் பகுதிகளைத் தெளிவாகப் படம் எடுத்தனுப்பியது.*

41. பின்வரும் சாட்டுப் பெயர்கள் குறிப்பிடும் நாடுகள் எவை?
1) பொற்கதவு நகரம்　2) பொற்கோயில் நகரம்
3) ஏழுகுன்றுகளின் நகரம　4) இந்தியாவின் நுழைவாயில்
5) புனித பூமி
6) மத்தியதரைக்கடலின் திறவுகோல்
7) பொற்கோபுர நாடு　8) நள்ளிரவுச்சூரியன் நாடு
9) ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்
10) உலகத்தின் கூரை　11) சீனாவின் துயரம்
12) ஏரிகளின் நாடு

1. *சான்பிரான்சிஸ்கோ*　2. *அமிர்தசரஸ்*
3. *ரோமாபுரி*　4. *மும்பாய்*
5. *பாலஸ்தீனம்*　6. *ஜிப்ரோல்ரர்*
7. *மியான்மார் (பர்மா)*　8. *நோர்வே*
9. *சுவிற்சலாந்து*　10. *திபெத்*
11. *குவாங்கோ நதி*　12. *பின்லாந்து*

42. முக்கிய தினங்கள் எவை?
அ) தேசிய இளைஞர் தினம்
ஆ) சர்வதேச பெண்கள் தினம்
இ) உலக ஊனமுற்றோர் தினம்
ஈ) பூமி தினம்
உ) தொழிலாளர் தினம்
ஊ) உலக செஞ்சிலுவைத் தினம்
எ) உலகச் சுற்றுச்சூழல் தினம்
ஏ) தேசிய விளையாட்டு தினம்

ஐ) உலக முதியோர் தினம்
ஒ) ஐக்கிய நாடுகள் தினம்
ஓ) குழந்தைகள் தினம்
ஔ) மனித உரிமைகள் தினம்

| | | | |
|---|---|---|---|
| *அ)* | *ஜனவரி 12* | *ஆ)* | *மார்ச் 6* |
| *இ)* | *மார்ச் 15* | *ஈ)* | *ஏப்பிரல் 32* |
| *உ)* | *மே 1* | *ஊ)* | *மே 8* |
| *எ)* | *ஜூன் 27* | *ஏ)* | *செப்டெம்பர் 5* |
| *ஐ)* | *ஒக்டோபர் 1* | *ஒ)* | *ஒக்டோபர் 24* |
| *ஓ)* | *நவம்பர் 14* | *ஔ)* | *டிசம்பர் 10* |



**ஜோன் எஃப் கென்னடி**
**(1917 - 1963)**
ஐக்கிய அமெரிக்காவின் புகழ்பெற்ற ஜனாதிபதி. அமெரிக்காவின் முதலாவது ரோமன் கத்தோலிக்க ஜனாதிபதி. நூல்கள் பல எழுதியுள்ளார். 1963, நவம்பர் 23 ஆம் திகதி கொலையாளி ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

43. நூறாவது ஒலிம்பிக் விளையாட்டுவிழா எங்கு எப்பொழுது நிகழ்ந்தது?
*அட்லான்டாவில் - 1996ல்*

44. 2000 ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு விழா எங்கு நடந்தேறியது?
*அவுஸ்திரேலியாவில் - சிட்னியில்*

45. 1996ஆம் ஆண்டு இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு லாகூரில் கடாபி மைதானத்தில் உலகக்கோப்பை கிடைத்தது. வழங்கப்பட்ட அவ்வெற்றிக் கோப்பை யாது?
*வில்ஸ் உலகக் கோப்பை.*

46. சல்யூற், ஸ்கைலாப், மீர் (Salute, Skylab, Mir) என்பவை யாவை?
*அவை விண்வெளித் தளங்கள். சல்யூற்றும் மீர்ரும் ருசியாவின் விண்தளங்கள். ஸ்கைலாப் அமெரிக்காவினுடையது. மூன்றும் உடைந்து வீழ்ந்துவிட்டன. பதினைந்து ஆண்டுகளாக விண்ணில் உலாவிய மீர் விண்வெளித்தளம் மார்ச் 28, 2001 இல் பசுபிக் சமுத்திரத்தில் வீழ்ந்தது.*

## சூரிய மண்டலம் / ஞாயிற்றுத்தொகுதி எவ்வாறு தோன்றியது?

சூரியன் அதன் ஒன்பது கோள்கள், அவற்றின் துணைக்கோள்கள் என்பன எவ்வாறு தோன்றின என்பதற்குத் திடமான கருத்து என்று ஒன்றில்லை. ஆனால் பல்வேறு அறிஞர்கள் சூரியமண்டலத்தின் தோற்றம் குறித்து கருத்துக்களை, கருதுகோள்களைத் தெரிவித்துள்ளனர். அவை:

**மோதுகைக் கருதுகோள்:** ஆதிச் சூரியனுக்கும் பிறிதொரு நட்சத்திரத்திற்கும் ஏற்பட்ட மோதலில் அல்லது உராய்வின் விளைவாக கோள்கள் பிறந்தன என்ற கருத்தினை விபரிப்பன மோதுகைக் கருதுகோளாகும். பவ்பொன், பிங்கேட்டன் ஆகியோரது கருத்துக்கள் இப்பிரிவிலடங்கும்.

**புகையுருக் கருதுகோள்:** ஆதி அண்டத்தில் நிறைந்திருந்த பல்வகைச் சடப்பொருள்களின் புகையுருவிலிருந்து கோள்கள் உருவாகின என்ற கருத்தினைப் புகையுருக் கருதுகோள்கள் விபரிக்கின்றன. கான்ற், லாப்பிளாஸ், வைஸ்சாகர், ஒட்டோசிமிட், பிரெட்ஹொயில், குய்ப்பர், அலவ்வென் ஆகியோரது கருதுகோள்கள் இப்பிரிவிலடங்குவன.

**பெருக்குக் கருதுகோள்கள்:** ஆதிச் சூரியனுக்கருகில் வேறொரு நட்சத்திர வரவால் ஏற்பட்ட பெருக்கு விசையின் அல்லது ஈர்ப்பு விசையின் விளைவாக நிகழ்ந்த கக்குகைகளின் திரள்வே கோள்கள் என இக்கருதுகோள்கள் கூறுகின்றன.

நெபுலா என்ற புகையுரு சட்டியப்ப வடிவில் திரண்டு , மையநீக்க விசைக்குள்ளாகிக் கோள்களைத் தோற்றுவிக்கின்றது. (லாப்பிளாசின் கருத்து)

செட்ச்விச், சம்பர்லின், மோல்ரன், ஜீன்ஸ், ஜெப்றி, பனர்ஜி, லிற்றின்டன், பிரெட்ஹொவில் ஆகியோரது கருதுகோள்களை இப்பிரிவினுள் அடக்கி ஆராயலாம்.

ஏற்கனவே, பிரபஞ்சத்தின் பிறப்புக்குக் காரணமானதென விபரிக்கப்பட்ட 'Big Bang' கருதுகோளே, ஞாயிற்றுத்தொகுதியின் பிறப்புக்கும் பொருத்தமானதும் ஏற்றதும் என இன்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

47. 1) உலகின் உயர்ந்த மலைச்சிகரம், 2) நிலப்பரப்பில் ஆழமான பகுதி (கடல் மட்டத்திலும்), 3) ஆழமான சமுத்திரப்பகுதி, 4) உலகின் மிகப் பெரிய ஏரி, 5) மிக ஆழமான ஏரி, 6) மிக வெப்பமான பிரதேசம், 7) மக்கள் வாழும் மிக வரண்ட பிரதேசம், 8) மக்கள் வாழும் மிக ஈரலிப்பான பகுதி, 9) உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சி, 10) மிகப்பெரிய குடாநாடு, 11) உலகின் மிகப் பெரிய தீவு, 12) உலகின் மிக நீளமான நதிகள் இரண்டு, 13) மிக ஆழமான சமுத்திர ஆழி.

*1) எவரெஸ்ட் சிகரம் (8848மீற்), 2) சாக்டல் (கடல் மட்டத்திலிருந்து 396.8 மீற்றர் ஆழமானது), 3) பசுபிக் சமுத்திரத்தில் மரியானா அகழி, 4) கஸ்பியன் கடல் (371000 சதுர கி.மீ), 5) பெயிக்கால் ஏரி (1620 மீற்றர்), 6) டலோல் (எதியோப்பியா), 7) அஸ்வான் (எகிப்து வருடமழை 0.05 செ.மீ) 8) மாவ்சின்றாம் (அசாம் 11837 மி.மீமழை), 9) ஏஞ்சல நீர்வீழ்ச்சி (வெனசுவெலா 807 மீற்றர்), 10) அரேபியா குடாநாடு (3250000 சதுர கி.மீ), 11) அவுஸ்திரேலியா (7682300 சதுர கி.மீ) . கிறீன்லாந்து (2175600 சதுர கி.மீ), 12) நைல்நதி (6650 கி.மீ), அமேசன்நதி (6437 கி.மீ), 13. மரியானா ஆழி (10924 மீற்றர்)*

48. கிளிமஞ்சாரோ, போட்டோ ரீக்கோ, பெரிங், சுப்பீரியர், தங்கனீக்கா, கலகாரி, நயாகரா, அலாஸ்கா, மிசூரி மிசிசிப்பி, தொங்கோ கேமாஸ்டெக், கஞ்சன்யுங்கா, மரிச்சுக்கட்டி என்பன புவியியல் ரீதியில் எவையென எழுதுக.

*அ) கிளிமஞ்சாரோ என்பது ஆபிரிக்காவிலுள்ள மலைச்சிகரம். 5963 மீற்றர் உயரமானது.*

*ஆ) போட்டோ ரீக்கோ என்பது அத்திலாந்திக் சமுத்திரத்திலுள்ள ஆழமான பகுதி. 8605 மீற்றர் ஆழமானது.*

*இ) பெரிங் என்பது ஒரு தொடுகடல். ஆசியாவையும் வடஅமெரிக்காவையும் இணைப்பது. 226100 சதுர கி.மீ பரப்பினது.*

*ஈ) சுப்பீரியர் என்பது வடஅமெரிக்கப் பேரேரிகளில் ஒன்று. 82100 சதுர கி.மீ பரப்பினது.*

*உ) தங்கனீக்கா என்பது அபிரிக்காவிலுள்ள ஏரி. 32900 சதுர கி.மீ பரப்பினது.*

*ஊ) கலகாரி என்பது ஆபிரிக்கப் பாலைவனம். 582727 சதுர கி.மீ பரப்பினது.*

எ) அலாஸ்கா என்பது ஒரு குடாநாடு. 1500000 சதுர கி.மீ பரப்பினது.

ஏ) மிசூரி மிசிசிப்பி என்பது அமெரிக்க நதி ஒன்று. 6020 கி.மீ நீளமானது.

ஐ) தொங்கோ கொமான்டெக் என்பது தென் பசிபிக்கிலுள்ள சமுத்திர ஆழி. 10850 மீற்றர் ஆழமானது.

ஒ) கஞ்சன்புங்கா என்பது நேப்பாலிலுள்ள மலைச்சிகரம். 8597 மீற்றர் உயரமானது.

ஓ) மரிச்சுக்கட்டி என்பது இலங்கையில்குறைவாக மழை பெறும் பிரதேசம்.

49. சென்றவாண்டு (2001,ஜனவரி 26) இந்தியாவின் ஒரு மாநிலத்தில் புவிநடுக்கம் ஏற்பட்டது. அது எந்த மாநிலம்?
*குஜராத் மாநிலம். 20 ஆயிரம் மக்கள் பலியாகினர்.*

50. அதிக மக்களைப் பலி கொண்ட புவிநடுக்கம் எது?
*ஈரானில் 21 ஜூன் 1991இல் ஏற்பட்ட பூகம்பம். 35000 மக்கள் பலி.*

51. ஓசோன் படை எங்குள்ளது? அதன் முக்கியத்துவம் யாது?
*பூமியின் மாறன்மண்டலத்திற்கு மேல். 12கி.மீ - 30 கி.மீ மேல். வான்வெளியிலிருந்து வரும் மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கும் கதிர்வீச்சினைத் தடுத்து வருவது ஓசோன் படையாகும்.*


52. ஓசோன் படையில் துவாரம் ஒன்று ஏற்பட்டுவிட்டதாகவும் அதனால் பூமியின் வெப்பநிலை அதிகரிக்கப் போகின்றது எனவும் கூறப்படுகின்றது. ஓசோனின் துவாரத்திற்கு யாது காரணம்?
*சிஎ.ஃப்சி (CFC) எனப்படும் குளோரோ - புளோரோ ஹைட்ரோ காபன்.*

## விளையாட்டு

1. புருக்லான்ட் எந்த விளையாட்டிற்குப் புகழ் பெற்றது?
2. மெல்போன் / லீட்ஸ் எந்த விளையாட்டிற்குப் புகழ் பெற்றது?
3. விம்பிள்டன் எந்த விளையாட்டிற்குப் புகழ் பெற்றது?
4. ஹுலிங்ரன் எந்த விளையாட்டிற்குப் புகழ் பெற்றது?
5. டொன்காஸ்ரர் எந்த விளையாட்டிற்குப் புகழ் பெற்றது?

1. கால்பந்தாட்டம் 2. கிரிக்கெட் 3. ரெனிஸ்
4. போலோ 5. குதிரை ஓட்டம்

## ஐக்கிய நாடுகள் தாபனம் குறித்து யாது தெரியும்?



பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் T என்றும் பிழையாயின் F என்றும் குறிக்கவும்.

1. சர்வதேச அணுசக்திக் கழகம் (IAEA - International Atomic Energy Agency) 1957 இல் உருவாக்கப்பட்டது. அதன் தலைமைப்பீடம் வியன்னா (ஆஸ்திரியா) நகரிலுள்ளது.

   ☐

2. ஐ.நா. கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனம் (UNESCO - United National Educational Scientific and Cultural Organisation) 1946 இல் உருவாக்கப்பட்டது அதன் தலைமைப்பீடம் பாரிஸ் (பிரான்ஸ்) நகரிலுள்ளது.

   ☐

3. சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (ILO - International Labour Organisation) 1919 இல் அமைக்கப்பட்டது. ஜெனீவா (சுவிற்சலாந்து) நகரில் அதன் தலைமைப்பீடம் உள்ளது.

   ☐

4. உணவு மற்றும் விவசாய நிறுவனம் (FAO - Food and Agriculture Organisation) உலக உணவுத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. இதன் தலைமைப்பீடம் ரோம் (இத்தாலி) நகரில் இருக்கின்றது.

☐

5. 1948 இல் உருவாக்கப்பட்ட உலக சுகாதார நிறுவனம் (WHO- World Health Organisation) தனது தலைமைப்பீடத்தை ஜெனீவா (சுவிற்சலாந்து) நகரில் கொண்டுள்ளது.

☐

6. சர்வதேச நிதி நிறுவனம் (IMF - International Monitary Fund) 1945 இல் நிறுவப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் வாஷிங்டனில் உள்ளது.

☐

7. ஏழை நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்ற உலக வங்கி (IBRD- International Bank for Reconstruction and Development) தனது தலைமைப் பணிமனையை வாஷிங்டனில் கொண்டுள்ளது.

☐

8. உலக வங்கியால் நிருவகிக்கப்படும் சர்வதேச வளர்ச்சிக் கழகம் (IDA - International Development Association) ஒரு கடனளிக்கும் நிறுவனமாகும்.

☐

9. 1944 இல் உருவாக்கப்பட்ட சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனம் (ICAO - International Civil Aviation Organisation) தனது தலைமைப் பணிமனையை கியூபெக் (கனடா) நகரத்தில் கொண்டுள்ளது.

☐

10. உலக வாணிப நிறுவனம் (GATT - General Agreement on Tariffs and Trade) 1974 இல் நிறுவப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் ஜெனீவாவிலுள்ளது.

விடை எல்லாம் T சரியே.

53. அண்மைக்கால ஆய்வுகள் ஓசோன்படையின் துவாரத்திற்கு சிஎ.்.ப்சி வாயுவுடன் இன்னொன்றும் காரணமென்கின்றனர். அது யாது?

*சூரியனிலிருந்து எழுகின்ற புயல் காற்றின் விளைவாக மழை மின்னியல் தாக்கம் காரணமாக வளிமண்டல ஓசோன் படை தாக்கத்திற்குள்ளா கின்றது. சூரிய புயல்களின் பாய்ச்சலை ஆராய்ந்த நாசா (NASA) ஆராய்ச்சி நிறுவனம் இக்கருத்தினை வெளியிட்டுள்ளது.*

54. சூழல் மாசடைதலைத் தடுத்து நாம் வாழும் பூமியைப் பேணுவதற்கான முதலாவது மாநாடு (அ) எங்கு நடந்தது? (ஆ) எப்பொழுது நடந்தது? (இ) எத்தனை நாடுகள் கலந்து கொண்டன? (ஈ) அம்மாநாட்டில் பேசப்பட்ட பொருள் யாது? (உ) அம்மாநாட்டின் மகுட வாசகம் யாது?

*(அ) ஸ்ரொக்கோம்* *(ஆ)* 1972 ஜூன் 5 - 12

*(இ)* 114 *நாடுகள்*

*(ஈ) மானிடச் சூழலிற்கான சர்வதேச மாநாடு*

*(உ) ஒரு பூமி மட்டுமே (Only One Earth)*

55. ஐக்கியநாடு தாபனத்தின் சூழல் அதிகார சபையினால் கூட்டப்பட்ட இரண்டாவது சூழல் மாநாடு (அ) எங்கு நடந்தது? (ஆ) எப்பொழுது நடந்தது? (இ) அதில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை யாது?

*(அ) நைரோபி* *(ஆ)* 1982

*(இ) உலகச் சூழல்* 1972 - 1982

56. மூன்றாவது உலகச் சூழல் மாநாடு (அ) எங்கு நடந்தது? (ஆ) எப்பொழுது நடந்தது? (இ) அம்மாநாட்டின் சிறப்புப் பெயர் யாது? (ஈ) எத்தனை நாடுகள் கலந்து கொண்டன? (உ) எத்தனை அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் கலந்து கொண்டன? (ஊ) மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கை யாது?

*(அ) றியோ டி ஜெனீரோ*

*(ஆ)* 1992, ஜூன் 3 - 14

*(இ) புவி உச்சி மாநாடு (Earth Summit)*

*(ஈ)* 115 நாடுகள்

*(உ)* 30 *ஆயிரம்*

*(ஊ) அஜென்டா* - 21 *(Agenda - 21)*

57. அஜெண்டா - 21 இன் பிரதான அம்சங்கள் எவை?
*பச்சைவீட்டு விளைவு வாயு வெளியேற்றம், காடுகள், குடித்தொகை, தொழில்நுட்பப் பரிமாற்றம், நிதி வசதி, சூழல் தேய்வு.*

58. (அ) இருதயம் எவ்வளவு லீற்றர் இரத்தத்தை ஒரு நாளைக்கு இறைக்கிறது?
(ஆ) உடலிலுள்ள இரத்தக் குழாய்களின் மொத்த நீளம் யாது?
(இ) சராசரி மூளையின் நிறை யாது?
(ஈ) 70 வருடங்கள் வாழ்ந்த ஒருவரின் மூளை எவ்வளவு பைற் தகவல்களைச் சேகரித்திருக்கும்?
(உ) இரத்தத்தில் RBC என்றால் என்ன? றுடீஊ என்றால் என்ன?
(ஊ) ஒரு நிமிடத்தில் மனிதன் எத்தனை தடவை சுவாசிக்கிறான்?
(எ) ஒரு நாளில் சராசரியாக எத்தனை தடவை சுவாசிக்கிறான்?
(ஏ) மனிதனின் உடம்பிலுள்ள எலும்புகளின் எண்ணிக்கை யாது?
(ஐ) மனித உடலில் ஓய்வில்லாது உழைக்கும் உறுப்புக்கள் எவை?
(ஒ) உடலில் மிகக் கடினமான உறுப்பு எது?
(ஓ) சில உறுப்புக்கள் இல்லாமல் உடல் இயங்கும். அவை எவை?

*(அ) 27949.3 லீற்றர்.* *(ஆ) 99776.6 கி.மீ*
*(இ) 1.36 கி.*
*(ஈ) 100 றில்லியன் (Trillion) (ஒன்றுடன் பதினெட்டு பூஜ்யங்கள்.*
*(உ) RBC - Red Blood CellsWBC - White Blood Cells*
*(ஊ) 13 தொட்டு 17 தடவைகள்.* *(எ) 21600*

## ஆசிய விளையாட்டுகள் (Asian Games)

பிரதமர் ஜவகர்லால் நேருவால் 1951 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆசிய விளையாட்டு நான்க வருடங்களுக்கு ஒருமுறை நிகழும். 1951, 1982 ஆகிய இரு ஆண்டுகள் இந்தியாவிலும் 1954 பிலிப்பைன்ஸிலும், 1958, 1994 ஆகிய காலங்களில் யப்பானிலும் 1962 இந்தோனேசியாவிலும் 1966, 1970, 1978, 1998 ஆகிய ஆண்டுகளில் தாய்லாந்திலும் 1974 இல் ஈரான், 1986, 2002 தென்கொரியா, 1990 சீனா ஆகிய நாடுகளிலும் நடந்தேறியது. இந்த ஆசிய விளையாட்டில் எட்டுத் தடவைகள் யப்பானும், ஆறு தடவைகள் சீனாவும் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளன. ஆரம்பத்தில் (1951) 11 நாடுகளே கலந்துகொண்டன. 2002 இல் 42 நாடுகள் கலந்துகொண்டன.

*(ஏ) 206* *(ஐ) இருதயமும் சிறுநீரகமும்*

*(ஒ) பல்லின் எனாமல்*

*(ஓ) நாளமில்லாச் சுரப்பிகள் (ரொன்சில், குடல்வால் (அப்பெண்டிக்ஸ்)*

59. இன்சுலின் சரிவரச் சுரக்காமையால் ஏற்படும் வியாதி எது?
*நீரிழிவு (டயாபற்றிஸ் - னுயைடிநவநள)*

60. இரத்த வகைகள் எவை?
*A, B, AB, O.*

61. தென்னாசிய நாடுகளையும், தென்கிழக்காசிய நாடுகளையும் தாக்கி இரண்டரை இலட்சம் மக்களைக் காவுகொண்ட அனர்த்தம் யாது? எப்போது ஏற்பட்டது
*சுமாத்திராப் புவிநடுக்கம். ௯.0 றிச்டர் அளவிலானது. சுனாமி என்னும் ஆழிப்பேரலையைத் தோற்றுவித்தது. இலங்கையிலும் ௪0 ஆயிரம் மக்கள பலியாயினர்.*
*௨6, டிசம்பர் ௨00௪ ல் ஏற்பட்டது.*

62. அ) A4 அளவுப் பேப்பரின் அகல நீளம் யாது?
ஆ) A3 அளவுப் பேப்பரின் அகல நீளம் யாது?
*(அ) ௨1௦ ஓ ௨97 செ.மீ*
*(ஆ) ௨97 ஓ ௪௨0 செ.மீ*

63. 1) ஆசெந்தீனாவின் ஜனாதிபதி யார்?
2) அவுஸ்திரேலியாவின் பிரதமர் யார்?
3) வங்காள தேசத்தின் பிரதமர் யார்?
4) பூட்டான் மன்னர் யார்?
5) கம்போடியாவின் மன்னர் யார்?
6) கனடாவின் பிரதமர் யார்?
7) சீனாவின் ஜனாதிபதி யார்?
8) எகிப்தின் ஜனாதிபதி யார்?
9) பிரான்சின் பிரதமர் யார்?
10) ஜேர்மனியின் ஜனாதிபதி யார்?
11) இந்தியாவின் பிரதம மந்திரி யார்?
12) ஈரானின் முன்னைய ஜனாதிபதி யார்?
13) ஈராக்கின் ஜனாதிபதி யார்?
14) இஸ்ரேலின் பிரதமர் யார்?
15) ஜப்பானின் மன்னர் யார்?

16) மலேசியாவின் பிரதமர் யார்?
17) மாலைதீவுகளின் ஜனாதிபதி யார்?
18) நேபாளத்தின் மன்னர் யார்?
19) பாகிஸ்தானின் ஜனாதிபதி யார்?
20) ருசியாவின் ஜனாதிபதி யார்?
21) சிங்கப்பூரின் ஜனாதிபதி யார்?
22) ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் யார்?
23) ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி யார்?

## நூல்கள்

அதிக மொழிகளில் அச்சிடப்பட்டு வெளிவந்த நூல் பைபிள் ஆகும். முதன்முதல் யந்திர அச்சகத்தில் அச்சிடப்பட்ட நூலும் இதுவே. ஜேர்மனிய குற்றன்பேக் நிறுவனம் இதனைத் தன் அச்சுயந்திரத்தில் அச்சிட்டு வெளியிட்டது. பிற்மன் சுருக்கெழுத்திலும் பைபிள் வெளிவந்துள்ளது.

கி.பி. 868 இல் காகிதத்தில் அச்சிடப்பட்ட முதல் நூல் 'கிரகசூத்ர' என்பதாகும். இது சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு சீன மொழியில் வெளிவந்தது.

அதிக பக்கங்களைக் கொண்ட நூல் 'Man of Goodwill" என்பதாகும். லூயி ஹென்றி ஜீன் பரிகோவி என்பவர் பிரான்சிய மொழியில் எழுதி ஆங்கில மொழிபெயர்ப்பில் வெளிவந்தது. 14 தொகுதிகள். 4959 பக்கங்கள் (1933).

ஆபிரிக்க எழுத்தாளரான காத்லீன் லின்ட்சே என்பவர் 1903 - 1973 இடையில் 904 நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

உலகின் மிகப் பெரிய காவியம் 'மகாபாரதம்' ஆகும். வேதவியாசர் என்ற புலவர் கி.மு. 1000 ஆண்டளவில் 100000 வரிகளில் சமஸ்கிருதத்தில் பாடியுள்ளார்.

ஹோமர் என்ற கிரேக்கக் கவிஞனின் புகழ்பூத்த காவியங்கள் இலியட், ஒடிசி என்பனவாம்.

அரசியல் விஞ்ஞானத்தைக் கூறுகின்ற முதலாவது நூல் அஸ்தசாத்திரம் ஆகும். சமஸ்கிருதத்தில் கௌடில்யனால் எழுதப்பட்டது. கிமு. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

கி.மு 6 அம் நூ‍ற்றாண்டில் வாலிமிகி முனிவரால் பாடப்பட்டது 'ராமாயணம்' என்ற காவியமாகும்.

1) பெர்னான்டோ டி லா றுவா
2) ஜோன் வின்ஸ்ரன் ஹேவாட்
3) ஷேக் ஹாசீனா வாசிட்
4) ஜிக்மே சிங்யே வாங்சுக்
5) நோரோடெம் சிகனோக்
6) கீன் செரரீன்
7) ஜியாங் ஷேமின்
8) கொஸ்லி முபாரக்
9) லியனல் ஜொஸ்பின்
10) ஜொகனஸ் ரவு
11) மன்மோகன் சிங்
12) மொகமட் கட்டாம்
13) சதாம் ஹூசேன்
14) ஏரியல் ஷரொன்
15) சக்கரவர்த்தி அகிற்றோ
16) மகாதிர் பின் மொகமட்
17) மயுமூன் அப்துல் கயூம்
18) கஜனேந்திரா
19) ஜெனரல் பேர்விஸ் முஷாரப்
20) விலாடியீர் புற்றின்
21) எம்.ஆர்.நாதன்
22) ரொனி பிளேயர்
23) ஜோர்ஜ் டபிள்யு புஷ்

64. மனிதனின் கிட்னியில் பொதுவாக உருவாகும் கற்கள் என்ன?
கல்சியம் ஒக்சலேற் (*Calcium Oxalate*)

65. இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் (சீனி) அளவினை எவ்வாறு அளந்து குறிப்பர்?
தசம லீற்றரில் எத்தனை மில்லிகிராம்.

66. மூளைச்சலவை (Brain Wash) என்றால் என்ன?
ஒருவரின் கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் மழுங்கடித்துத் தமது கருத்துக்களை அவர் மனதில் ஏற்றுதல். அதற்காக உடல், உளச் சித்திரவதைகள் செய்யப்படலாம்.

68. ஹென்றி, றிச்சார்ட், ரோமியோ அன் ஜூலியற், மேர்ச்சன்ற் ஒப் வெனிஸ் ஆகிய நாடகங்களை எழுதியவர் யார்?
ஷேக்ஸ்பியர்



**நெப்போலியன் போனபாட்**
**(1769-1821)**

பிரான்சிய சர்வாதிகாரி. அக்கால வேளையில் மிகச் சிறந்த இராணுவத் தளபதியாக விளங்கினான். இங்கிலாந்து, ருசியா, ஆஸ்திரியா என்பவற்றிற்கு எதிரான யுத்தங்களில் பிரான்சுக்குப் பெரும் வெற்றிகளைச் சேர்த்தவன். வாட்டலூ யுத்தத்தில் 1815 யூன் மாதம் தோல்விகண்டு சென் ஹெலினா தீவுக்கு நாடுகடத்தப்பட்டு 1821 இல் இறந்தான்.

69. 1994, 1997, 1999, 2000 ஆகிய ஆண்டுகளில் உலக அழகிகளாக இந்திய மங்கைகள் தெரிவாகினர். அவர்கள் யார்?
*ஐஸ்வர்யா ராய், டயானா ஹேடன், புக்ரா மூக்கே, பிரியங்கா சோப்ரா.*

70. பின்வரும் நாடுகளின் அடையாளங்கள்/குறிப்பிடும் சின்னங்கள் எவை?


அ) இந்தியா, ஆ) கனடா, இ) கொலம்பியா,
ஈ) ஐக்கிய அமெரிக்கா, உ) ருசியா, ஊ) டென்மார்க்,
எ) கிரீஸ், ஏ) சீனா, ஐ) இங்கிலாந்து,
ஒ) ஸ்பெயின்

*அ) வங்காளப்புலி*
*ஆ) மேபிள் இலை (Maple Leaf)* *இ) ஓர்க்கிட் (Orchid)*
*ஈ) கழுகு* *உ) பழுப்பு கரடி*
*ஊ) பீர்ச் மரம்* *எ) ஒலிவ் மரக்கிளை*
*ஏ) டிரக்கன் (Dragon)* *ஐ) ரோசா*
*ஒ) சிவப்பு கார்னேசன்*

## உலக அதிசயங்கள்

உலக அதிசயங்கள் ஏழு என்பது யாவரும் அறிந்ததே. புராதன காலத்தில் ஏழு அமைப்புக்களை அதிசயங்களாக விவரிக்கத் தொடங்கியது கி. மு. 2 ஆம் நூற்றாண்டுகளினை அடுத்த லெக்சாண்டியாயனின் காலத்தில் ஆகும். சிடோவில் ஆண்டி பட்டரே ஏழு அதிசயங்கள் குறித்த பட்டியலை உருவாக்கினார். புராதன ஏழு அதிசயங்கள் வருமாறு:


1. எகிப்திய பிரமிட்டுகள்.
2. பபிலோனிய தொங்கு தோட்டம்.
3. ஜுப்பிட்டர் சிலை.
4. டயானா கோயில்.
5. மாசோலஸ் மன்னன் கல்லறை.
6. ரோட்ஸ் பேருருவச் சிலை.
7. லொக்சாந்திரியா கலங்கரை விளக்கம்.



**எகிப்திய பிரமிட்டுகள்.**


எகிப்தில் நைல் நதியின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. பரப்பு 12 ஏக்கர். கி.பி. 2690 இல்தான் இது கட்டப்பட்டது. இதற்குரிய இடத்தை ஒழுங்குபடுத்த மட்டுமே 10 வருடங்கள் ஆயின. ஒரு லட்சம் பணியாளர்கள் 20 வருடங்கள் தொடர்ந்து வேலை செய்து மன்னரின் கல்லறைப் பணியை (Tomb) முடித்தனர். இதன் உயரம் 481 அடி. மன்னரின் சடலம் கெட்டுப்போகாமலிருக்க பலவித தைலங்கள் சடலத்தில் பூசப்பட்டு பிரமிட்டின் உள்ளே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இடிபாடுகள் ஏற்பட்ட போதிலும் இன்றும் நிலைத்து நிற்கின்றது.

## பபிலோனியத் தொங்கு தோட்டம்.
## (The hanging garden of Babylon)




கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இரண்டாம் நெபுகத் நெஸர் என்ற மன்னரால் கட்டப்பட்டது. அக்காலத்தில் பபிலோன் மிகப் பெரிய நகரமாக இருந்தது. அடுக்கடுக்கான மாடிகளில் உருவாக்கப்பட்டதுதான் இந் தப் பூந்தோட்டம். உயரத்தில் உள்ள செடிகளை நனைப்ப தற்கு வசதிகள் செய்யப்பட் டிருந்தது. இப்பொழுது முழு மையும் அழிந்துவிட்டது. கூம்பு வடிவ ஐந்து மாடிகளைக் கொண்ட இந்த மாளிகையில் பூங்செடிகள் வளர்க்கப்பட்டன.

## யூப்பிட்டர் சிலை




யூப்பிட்டர் என்ற கடவுளுக்காக கி.பி 463 இல் கிரேக்க சிற்பி பீடியாஸ் என்பவரால் 40 அடி உயரமான சிலை ஒன்று உரு வாக்கப்பட்டது. பளிங்குக் கற் களால் செய்யப்பட்ட அச்சிலை தங்கத்தாலும் யானைத் தந் தங்களினாலும் அழகு செய் யப்பட்டது. கி.பி ஆறாம் நூற் றாண்டில் ஏற்பட்ட புவிநடுக்கத் தால் கீழே விழுந்ததையடுத்து இது கான்ஸ்டாண்டினோபிளுக் குக் கொண்டு செல்லப்பட்டது காலச் சுழற்சியில் மண்ணோடு மண்ணாகியது.




டயானா கோயில்

துருக்கியில் கி.பி. 350 இல் டயானா என்னும் தேவதைக்குச் சலவைக் கல்லால் ஒரு தேவாலயம் கட்டப்பட்டது. இதனை எபிஸஸில் அர்டிமிஸ் தேவாலயம் எனவும் அழைத்தனர். சுமார் 342 அடி நீளமும் 164 அடி அகலமும் 60 அடி உயரமும் கொண்டதாக டயானா கோயில் விளங்கியது. கி.பி. 262 இல் அழிந்துவிட்டது.




மாசேல்ஸ் மன்னர் கல்லறை

சின்ன ஆசியாவின் ஆர்டிமிசியா அரசி தனது கணவர் மாசேல்ஸ் மன்னனுக்காக ஒரு கல்லறை அமைத்தார். பளிங்காலான இக் கல்லறை 140 அடி உயரமானது. வட்டவடிவமுடையது. ஒரு பூகம்பத்தால் அழிந்து போனது. இதனை ஹாலிகர் நஸ்ஸார் கல்லறை எனவும் கூறுவர். இது கி.மு. 352 இல் கட்டப்பட்டது.



ரோட்ஸ் பேருருவச்சிலை

சூரியபகவான் ஹெலியோஸின் பித்தளைச் சிலை இதுவாகும். 105 அடி உயரமானது. கி.மு. 280 இல் உருவாக்கப்பட்டது. சுமார் 13 வருடங்கள் இதன் வேலைகள் நடைபெற்றன. கி.மு. 224 இல் ஒரு பூகம்பத்தால் இது மறைந்தது.



லெக்சாந்திரியா கலங்கரை விளக்கம்


எகிப்தில் அலெக்சாந்திரியா துறைமுகத்தின் அருகில் ∴ பரோஸ் தீவில் 2 ஆவது தொலமி மன்னனால் கட்டப்பட்ட 200 அடி உயரமான கலங்கரை விளக்கம் ஒன்றிருந்தது. இது கி.மு. 247 க்கு முன்பு கட்டப்பட்டது. இன்றில்லை.

**மத்திய காலத்தின் ஏழு அதிசயங்கள்.**

மத்திய காலத்து உலக அதிசயங்களாகப் பின்வரும் ஏழு கட்டமைப்புக்கள் கொள்ளப்பட்டன.

1. ரோமிலிருந்த கோலோசியம்
2. அலெக்சாந்திரியாவின் குகைகள்.
3. சீனப் பெருஞ்சுவர்
4. கற்களால் ஆன வட்டங்கள்
5. போர்சீலியன் கோபுரம்
6. பைசா நகரக் கோபுரம்
7. கொன்சாந்திநோபிலுள்ள ஹசியா சோபியா

1.ரோமிலிருந்த கோலோசியம்




உரோம மக்களின் குரூர விளையாட்டிற்காகக் கட்டப் பட்ட அரங்கு இதுவாகும். இதில் விலங்குகளும் அடிமைக ளும் சாகும்வரை சண்டை பிடித்து மாண்டனர். அரசனும் மக்களும் வேடிக்கை பார்த்த னர். இது ஒரு பயிற்சிக் களமாக வும் விளங்கியது. இன்று இது சிதைந்து காணப்படுகின்றது.

**2.அலெக்சாந்திரியாவின் குகைகள்**

லிபியன் பாலைவனத்தின் முடிவில் அமைந்திருந்தது. முன்பு கிறிஸ்தவ அகதிகள் இந்தப் பாதையை உபயோகித்து வந்தனர். தற்போது இது முழுமையாக அழிந்துவிட்டது.

**3.சீனப் பெருஞ்சுவர்**



கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இதன் வேலைகள் ஆரம்பமாயின. இதன் கட்டுமானப் பணிகள் மிக நீண்டகாலம் நடைபெற்றது. (கி.பி. 14 அம் நூற்றாண்டுவரை) இது வடக்கு சீனாவில் சுமார் 1500 மைல் வரை நீண்டு கிடக்கிறது. தற்போது இதைப் பழுதுபார்க்கப் பல நாடுகளின் உதவி கோரப்பட்டுள்ளது.


**4.கற்களால் ஆன வட்டங்கள்**

நியோதிலிக் காலத்தில் இங்கிலாந்தில் சாலீஸ்பரி சமவெளியில் சூரியபகவானை வழிபடுவதற்காக கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டில் இதன் சரித்திரம் நிர்ணயிக்கப்பட்டபோது மத்திய காலத்தின் அதிசயங்கள் பட்டியலிலிருந்து இது நீக்கப்பட்டது.

**5.போர்சீலியன் கோபுரம்**

சீனாவில் நான்சிங் என்ற இடத்தில் 260 அடி உயரமான ஒரு கோபுரம் இருந்தது. அதனைப் போர்சீலின் கோபுரம் என்பர். இது 1853 இல் தெய்விங்க் புரட்சியாளர்களால் அழிக்கப்பட்டது.

**6.பைசா நகரக் கோபுரம்**



இத்தாலியில் பைசா நகரத்தில் ஒரு கோபுரம் உள்ளது. இது கி.பி. 1174 இல் கட்டத் தொடங்கப்பட்டது. 1350 இல் கட்டி முடிக்கப்பட்டது. எட்டு அடுக்குகளைக் கொண்ட 176 அடி உயரமான பைசாக் கோபுரத்தின் சிறப்பு யாதெனில் அது இருப்பிலிருந்து சுமார் 1.6 அடி சரிந்து நிற்பதாகும்.

**7.ஹசியா சோபியா**

துருக்கியின் கொன்சாந்திநோபிளிலுள்ள ஒரு மாளிகை இது. ஐஸ்டினியன் சக்கரவர்த்தியால் அமைக்கப்பட்டது. கி.பி. 537 - 54 இல் அமைக்கப்பட்டது. துருக்கிய சுல்தான் இரண்டாம் முகம்மது கான்ஸ்டாண்டிநோபிளை கைவசப்படுத்தி இதை ஒரு முஸ்லீம் பள்ளியாக மாற்றினார். தற்போது இது ஓர் அருங்காட்சியகமாக உள்ளது.

## தற்காலதின் ஏழு உலக அதிசயங்கள்

1. எகிப்திய பிரமிட்டுகள்
2 ஹசியா சேபியா
3. பைசா நகரக் கோபுரம்
4. தாஜ்மகால்
5. வாஷிங்டன் நினைவு மண்டபம்
6. ஈபிள் கோபுரம்
7. எம்பயர் ஸ்ரொட் கட்டடம்

**4.தாஜ்மகால்**

இந்தியாவின் ஆக்ரா நகரத்திலுள்ள பளிங்கு மாளிகை. ஷாஜகான் சக்கரவர்த்தி தன்னுடைய மனைவி மும்தாஜின் நினைவாக எழுப்பிய கல்லறை. 1648 இல் கட்டப்பட்டது.

**5.வஷிங்டன் நினைவு மண்டபம்**

1885 இல் முன்னாள் அமெரிக்க அதிபரின் நினைவிற்காகக் கட்டப்பட்டது. 555 அடி 5 அங்குல உயரம் கொண்டது.

**6.ஈபிள் கோபுரம்**

1847 - 1889 இல் கட்டப்பட்டது. 948 அடி உயரமுடையது.

**7.எம்பயர் ஸ்டேட் பில்டிங்ஸ் (நியூயோர்க்)**

1931 இல் கட்டப்பட்டது. இதன் உயரம் 1477 அடி. 1951 இல் 222 அடி உயரமுள்ள ஒரு தொலைக்காட்சிக் கோபுரமும் இத்துடன் இணைத்து நிறுவப்பட்டுள்ளது.

உலக அதிசயங்களைத் தேர்ந்தெடுப்பதில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல் எதுவுமில்லை. காலம் காலமாக ஏதாவது ஒரு காரணம் பற்றி வழங்கப்பட்டன. இன்றும் இந்த நிலையே தொடர்கிறது.

## யாஸீர் அரபாத் (1929 - 2004)



பாலஸ்தீனத்தைத் தங்களது தாயகபூமியாக யூதர்களும் (இஸ்ரேலியர்) அராபியர்களும் (இஸ்லாமியர்) 1900களிலிருந்து கூறிவந்தனர். 1917 இல் ஏராளமான யூதர்கள் பாலஸ்தீனத்துள் இடம்பெயர்ந்தனர். ஐக்கியஇராச்சியம் பாலஸ்தீனத்தில் ஒரு யூத தாயகத்தை உருவாக்க ஆதரவளித்தது. அதேவேளை அராபியர்களுக்கும் பாலஸ்தீனத்தில் ஒற்றாமான மாகாணத்தில் ஒருபகுதியை உள்ளடக்கி ஒரு தாயகத்தை வழங்க ஐக்கிய இராச்சியம் சம்மதித்தது. அராபியர்களுக்கும் யூதர்களுக்குமிடையிலான முறுகல் நிலை உருவாகியது. 1947 இல் அமெரிக்கா இரண்டாகப் பிரிக்கத் திட்டமிட்டது. 1948 இல் அராபிய நாடுகள் பலவும் சேர்ந்து புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ரேல் மீது படையெடுத்தன. அதன்காரணமாக ஆயிரக்கணக்கான பாலஸ்தீன அராபியர் அகதிகளாக அயல் நாடுகளுக்கு ஓட நேர்ந்தது. பாலஸ்தீன அராபியர்கள் தமது நாடுகோரி பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை (PLO) ஆரம்பித்தனர். அதன் தலைவராக யாஸீர் அரபாத் விளங்கினார். போராட்டமும், இடையிடையே ஏற்பட்ட தற்காலிக ஒப்பந்த சமாதானத்திற்கும் இடையில் 1998இல் அரபாத் பாலஸ்தீனத்தின் ஜனாதிபதியானார். பாலஸ்தீனத்துக்கென ஒதுக்கப் பட்ட காஸா பிரதேசத்தையும், மேற்குக்கரைப் பிரதேசத்தையும் இஸ்ரேல் தங்களிடம் மீண்டும் கையளித்துவிட வேண்டும் என்பதற்காக முயற்சிகள் நடந்து வருகின்றன. வன்செயல்களால் இஸ்ரேலியர் பலர் மரணிக்க, அதன் எதிரொலியாக இஸ்ரேலிய இராணுவம் பாலஸ்தீனியப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்திப் பொதுமக்களை அழித்துவருகின்றது. 1994 இல் எட்டப்பட்ட இஸ்ரோல் - பாலஸ்தீன சமாதான உடன்பாட்டிற்காக யாஸீர் அரபாத்திற்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

# gk-4 உலக நிகழ்வுகள்

1. உலகில் இன்றைய குடித்தொகை யாது?
   6.06 *பில்லியன் /* 60.6 *மில்லியன் /* 606 கோடி.


2. இன்றைய உலகின் ஆண்டிற்குரிய சனத்தொகை வளர்ச்சி எவ்வளவு?
   75 *மில்லியன் / ஏழரைக்கோடி*

3. உலகில் அதிக குடித்தொகை கொண்ட நாடெது? அதன் குடித்தொகை எவ்வளவு?
   *சீனா.* 1266 *மில்லியன் /* 126.6 கோடி.


4. உலகில் குடித்தொகை கூடிய இரண்டாவது நாடெது? எவ்வளவு?
   *இந்தியா.* 1027 *மில்லியன் /* 102.7 கோடி.

5. இன்று இலங்கையின் சனத்தொகை எவ்வளவு?
   19000000 / 1.9 *மில்லியன் /* 1 கோடியே 90 *இலட்சம்.*

6. செப்டெம்பர் 11, 2001ல் உலகில் மிகமுக்கியமான ஒரு துயரச் சம்பவம் நிகழ்ந்தது. அது என்ன? எங்கு நிகழ்ந்தது?
   *அமெரிக்காவின் வர்த்தக நிலையக் கட்டிடங்கள் விமானங்களால் மோதித் தகர்க்கப்பட்டன. நியூயோர்க்கில் நிகழ்ந்தது.*



7. 2002, மார்ச் மாதம் மலைகளில் செதுக்கப்பட்டிருந்த இரண்டு புராதன புத்தர் சிலைகள் தகர்க்கப்பட்டன. அவை எங்கிருந்தன? தகர்த்தவர்கள் யார்? ஏன் தகர்க்கப்பட்டது?
*ஆப்கானிஸ்தான். தலீபான்கள். இஸ்லாமல்லாத தொல் சின்னங்களை ஆப்கானிஸ்தானிலிருந்து அகற்றுதல்.*



8. ஒசாமா பின்லேடன் யார்?
*இஸ்லாமியத் தீவிரவாதி. பெரும் செல்வந்தர். சவூதி அரேபியர். அமெரிக்க வர்த்தக கோபுரங்களைத் தகர்த்தமைக்கு இவரே காரணரெனக் கூறப்படுகிறது. ஆப்கானிச தலீபான்களுக்கு உதவுபவர்.*

9. இந்த மிலேனியத்தின் முதலாவது சூரியக்கிரகணம் எங்கு, எப்போது ஏற்பட்டது?
*அங்கோலா. ஜூன் 21, 2002.*

10. ஆசெந்தீனாவுக்கும் பிரித்தானியாவுக்கும் எத்தீவு சம்பந்தமாகப் பிணக்குள்ளது?
*போக்லாந்துத் தீவுகள்.*

11. அண்மையில் (பெப்ரவரி 2002) மறைந்த ஆஸ்திரேலியக் கிரிக்கெட் வீரர் யார்?
*டொனால்ட் பிராட்டன். இறக்கும்போது வயது 92.*

12. வங்காள தேசத்தில் தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்குப் பிரதமராகவிருந்தவர் யார்?
*ஷேக் ஹசீனா. (1998 - 2002)*

13. இந்தோனேசியப் பொருளாதாரச் சமூகம் எந்த நாட்டில் எந்நகரத்தில் ஆரம்பிக்கப்பட்டது?
*பெலாறஸ் குடியரசு, மிஸ்ஸ்க் நகரில்.*

14. பெல்ஜியத்தின் புதிய ஜனாதிபதி யார்?
*ஜக்குவ் றொக்.*

15. எந்த நாட்டில் மூன்றிலொரு பங்கு மக்கள் எச்.ஐ.வீ (HIV) கிருமித்தொற்று உடையவர்களாகவுள்ளனர்?
*பொத்ஸ்வானா*

16. மிகப்பெரிய எண்ணெய்க்கப்பலொன்று அண்மையில் தென் அத்திலாந்திக்குள் அமிழ்ந்து போனது. அது எந்த நாட்டினது?
*பிறேசில் (மார்ச் ௨00௨)*

17. கனடாவில் கௌரவப்பிரசையாக அங்கீகரிக்கப்பட்ட அந்நியப் பெருமகன் யார்?
*நெல்சன் மண்டேலா. தென் ஆபிரிக்கத் தலைவர்.*

18. தென் அமெரிக்காவின் தென் அந்தத்தில் இருப்பது டெல் பியூகோ தீவாகும். அதன் ஒருபகுதி சில்லி நாட்டிற்குரியது. மற்றைய பகுதி எந்த நாட்டிற்குரியது?
*ஆசெந்தீனா*

19. உலகிலேயே அதிக தரமானதும் அதிக எண்ணிக்கையுமான பியானோ வாத்தியக்கருவியை உற்பத்தி செய்துவரும் நாடு எது?
*சீனா. ௨000 ஆண்டில் ௨ இலட்சம் பியானோக்கள் உற்பத்தியாகின.*

20. இவ்வாண்டிலிருந்து (2002) உலகன் முக்கியமான வானொலி ஒன்று மீண்டும் தனது ஒலிபரப்பினை ஆரம்பிக்கச் சீனா அனுமதியளித்துள்ளது. இந்த வானொலி யாது?
*பி.பி.சி (B.B.C)*

21. பிரித்தானியராட்சியின் கீழிருந்து 1997 இல் சீனாவின் விசேஷமான நிர்வாக மாவட்டமாக வந்த நாடு எது?
*கொங்கொங்*

22. இந்தோனேசியாவின் ஜனாதிபதியாக அண்மைக்காலத்தில் பதவியேற்றவர் யார்?
*மேகவதி சுகர்னோ புத்ரி*

23. 2001, மே மாதத்தில் குற்றவாளிகளுக்கான மரண தண்டனையை இல்லாது செய்த நாடு எது?
*சில்லி.*

24. அமெரிக்காவுக்குச் சொந்தமான கடற்படை விமானம் ஒன்றினை தென்சீனக் கடலில் துணிச்சலாக வழிமறித்துத் தடுத்துத் தம் நாட்டில்இறக்கிய நாடு எது?
*சீனா. தன் வான்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்ததற்காக.*

25. சார்க் நாடுகளுடன் இணைய விருப்பந்தெரிவித்திருக்கும் நாடு எது?
*சீனா.*

26. அடுத்த ஒலிம்பிக் போட்டி சீனாவின் எந்த நகரத்தில் எவ்வாண்டு நிகழும்?
*பெஜிங் நகரத்தில், 2008 இல்.*

27. ஸிலிக்கன் உற்பத்தியில் இன்று முதலிடம் வகிக்கும் நாடு ஸிலிக்கன் குடியரசு என அழைக்கப்படுகிறது. அது எது?
*கோஸ்ரா றிக்கா.*

28. ஒரு புதிய நாணயத்தின் வருகையால் ஐரோப்பிய நாடுகளின் பழைய தாள்களையும் நாணயங்களையும் அழிப்பதற்குப் பல இயந்திரப்பொறிகள் ஐரோப்பிய நகரங்களில் நிறுவப்பட்டன. எந்த நாணயத்தின் வருகையால் இது நிகழ்ந்தது?
*யூரோ நாணயம்.*

29. சனநெருக்கடியால் 130 உதைபந்தாட்ட விசிறிகள் (ஆர்வலர்கள்) கொல்லப்பட்டனர். அந்த உதைபந்தாட்டம் எந்த நாட்டில் நிகழ்ந்தது?
*கானா.*

30. இந்த நூற்றாண்டின் பெரும் சிறையுடைப்பு எங்கு நிகழ்ந்தது? இதில் 78 ஆபத்தான குற்றவாளிகள் சிறையை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.
*குவாட்டமாலா.*

31. ஈராக் ஏவுகணைத்தளங்கள் மீது குண்டுவீச்சுக்களைச் செய்த நாடுகள் எவை?
*அமெரிக்கா, பிரித்தானியா.*

32. ஜனவரி, 1 2002இல் ஐரோப்பாவில் யூரோ நாணயம் அறிமுகப் படுத்தப்பட்டது.
   அ) யூரோவிலுள்ள நாணயத்தாள்கள் எத்தனை? எவை?
   ஆ) நாணயங்கள் எத்தனை?
   இ) எத்தனை ஐரோப்பிய நாடுகள் யூரோ நாணயத்தைப் பாவிக்கின்றன?
   ஈ) யூரோவோடு அவ்வவ்நாட்டின் பணமும் எத்தனை காலத்திற்குப் பயன்படுத்தப்படும்?

*அ) ஏழு - 5, 10, 20, 50, 100, 200, 500*

*ஆ) எட்டு நாணயங்கள்.*

*இ) 12 நாடுகள். 300 மில்லியன் மக்கள்.*

*ஈ) மூன்றாண்டுகள்.*

## நோபல் பரிசு



அல்பிரெட் பெம்ஹாட் நோபல் என்பவரினால் 1901 ஆம் ஆண்டு இப்பரிசு உருவாக்கப்பட்டது. பௌதிகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், சமாதானம், பொருளா தாரம், ஆகிய ஆறு துறைகளில் அவ்வாண்டு அளப்பரிய சேவை புரிந்தவர்களுக்கு இப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வோராண்டும் டிசம்பர் 10 ஆம் திகதி வழங்கப்படும். நோபல் (1833 -96) சுவீடிஷ் தேச விஞ்ஞானி, பிரமச்சாரி. 1866 இல் டைனமைற்றைக் கண்டறிந்தார். இப்பரிசு ஒன்றின் பெறுமதி 6.5 மில்லியன் குறோனர் (7கோடி) ஆகும். டாக்டர் லின்னஸ் கார்ல் போலிங் என்பவர் 1954 இல் இரசாயனத் துறைக்கும், 1962 இல் சமாதானத்துக்குமாக இருதடவைகள் நோபல் பரிசினைப் பெற்றார். மேடம் மேரி கியூரி 1903 இல் பௌதிகத் துறைக்கான நோபல் பரிசையும் அவரது கணவர் பியரி கியூரி 1911 இல் இரசாயனத் துறைக்கான பரிசினையும் பெற்றுள்ளனர். கீதாஞ்சலி என்ற இலக்கிய நூலுக்காக ரவீந்திரநாத்தாகூர் நோபல் பரிசு பெற்றார். 1979 இல் சமாதானத்திற்காக அன்னை தெரேசா பெற்றார்.





33. இத்தாலியிலுள்ள ஒரு முக்கியமான கட்டடம் 1999இல் பொது மக்களின் பாவனைக்கு மூடப்பட்டு, 2002இல் திருத்தத்தின் பின்னர் திறந்துவிடப்பட்டது. அது எது? அதன் முக்கியத்துவம் என்ன?
*பைசா கோபுரம். சாய்ந்த நிலையிலிருப்பதே அதன் சிறப்பு. இத்தாலியின் சாய்ந்த கோபுரம் அது.*

34. ஜி 8 நாடுகளெவை? அவற்றின் உச்சிமாநாடு கடைசியாக எங்கு எப்போது கூடியது?
*கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, யப்பான், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க, ருசியா. - இத்தாலி ஜெனீவா 2002.*

35. ஜுன் 1 2001 இல் நோபாளத்தின் அரசியல் வரலாற்றில் பெரும் கொடூரமான நிகழ்வு ஏற்பட்டது. அது யாது?
*நோபாள மன்னர் பிரேந்திராவும் ராணி ஐஸ்வரியாவும் ஏனைய ஆறு அரச குடும்ப உறுப்பினர்களும் முடிக்குரிய இளவரசர் திபேந்திராவால் சுட்டுக்கொல்லப்பட்டனர். பின்னர் திபேந்திராவும் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.*




36. பதினைந்து வருடப் பயணத்தை முடித்துக்கொண்டு பசுபிக்கில் வீழ்ந்த ருசியாவின் விண்கலம் எது?
*மீர்.*

37. விண்வெளியின் முதலாவது சுற்றுலாப்பயணி யார்?
*டெனிஸ் றிற்றோ.*

38. முதன்முதலாகப் பாப்பாண்டவர் போப் ஜோன் போல் இஸ்லாமியப் பள்ளி ஒன்றிற்குச் சென்றிருக்கிறார். எங்குள்ள இஸ்லாமியப் பள்ளிக்குச் சென்றார்?
*சிரியா.*

## பிக்பென்



உலகின் புகழ்பெற்ற கட்டமைப்புகளுள் பிக்பென் (Bigben) கடிகாரம் முக்கியமானதாகும். பிரித்தானியப் பாராளுமன்றக் கட்டடத்தோடு அமைந்திருக்கும் கடிகாரக்கோபுரம் இதுவாகும். நிலமட்டத்திலிருந்து 316 அடி உயரம். ஆறு அடுக்குகளைக் கொண்டது. ஆறாவது மாடத்தின் நான்கு பக்கங்களிலும் நான்கு மணிக்கூடுகளுள்ளன. அதற்குமேல் இரு மாடங்களும் கூம்புச்சியுமுள்ளன. கடிகாரத்தின் விட்டம் 23 அடி. நிமிடக்கம்பியின் நீளம் 14 அடியாகும். மணிக்கம்பியின் நீளம் 9 அடியாகும். கடிகார நேர எண்கள் ஒவ்வொன்றும் இரண்டரை அடி. பிக்பென் கடிகாரத்தின் புகழ் அதன் ஓசையில் தங்கியுள்ளது. வித்தியாசமான கம்பீரமான உலோக ஒலி எழுப்பும் பதின்மூன்றரை உலோகமணியில் ஆறரை அந்தர் நிறையுள்ள சுத்தியல் மோதி ஒலியெழுப்பும். இக்கடிகாரக் கோபுரத்தினை அமைப்பதற்குக் காரணம் சேர் பெஞ்ஜமின் ஹால் ஆவார். 1856ஆம் ஆண்டு இதற்கான திட்டத்தை வெளியிட்டார். 1858 இல் கட்டி முடிக்கப்பட்டது. இதற்கு இப்போது வயது 147 ஆண்டுகளாகும். 1941 உலகமகா யுத்தத்தின்போது இது குண்டுவீச்சுக்கு இலக்காகியது. அருகிலுள்ள பாராளுமன்றக் கட்டடத்தின்மீது குண்டு விழுந்ததால் அதிக சேதாரமின்றித் தப்பிக்கொண்டது. 1923 இலிருந்து பி.பி.சி வானொலி பிக்பென்னின் மணியோசையை அஞ்சல் செய்து வருகிறது.

39. ஜோர்ஜ் புஷ் அமெரிக்காவின் எத்தனையாவது ஜனாதிபதி?
*43.*

40. செப்டெம்பர் 11, 2001 இல் நியூயோர்க் நகரத்தின் வர்த்தகமையக் கட்டடங்களைத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட விமானங்கள் தாக்கித் தகர்த்தன.

அ) அந்த உலக வர்த்தக மையம் எத்தனை மாடிக் கட்டடம்?

ஆ) எத்தனை விமானங்கள் அதனைத் தாக்கின? அவ்விமானங்கள் எவை?

இ) உலக வர்த்தக மையத்துடன் விமானத் தாக்குதலுக்குள்ளான மற்றைய கட்டடம் எது?

ஈ) எவ்வளவு மக்கள் இத்தாக்குதலில் உயிரிழந்தனர்?

*அ) 110 மாடிக்கட்டடம்.*

*ஆ) இரு விமானங்கள். போயிங் 767, போயிங் 757*

*இ) பென்டகன் கட்டடம்.*

*ஈ) 10800 மக்கள்.*

41. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் யார்? அவர் எந்த நாட்டினைச் சேர்ந்தவர்?
*கோபி அனென். கானா நாடு.*

42. பேஜிங், சென்னை, மும்பை, மியான்மார், தாய்வான், சிம்பாவே என்பவற்றின் பழைய பெயர்கள் எவை?
*பீக்கிங், மட்ராஸ், பம்பாய், பர்மா, போர்மோசா, றொடிசியா.*

43. ஒசாமா பின்லேடனின் இயக்கத்திற்கு யாது பெயர்?
*ஆல் குய்டா.*

44. சுவிங்கம் ஆரம்பத்தில் எம்மரத்தின் பசையிலிருந்து செய்யப்பட்டது?
*சப்போடில்லா பிளம் மரம்.*

45. கினா எந்த நாட்டின் நாணயம்?
*பப்புவா நியூகினி.*

46. ஆபிரிக்காவின் காந்தி என்று அழைக்கப்படுபவர் யார்?
*குவாம் நிக்ருமா (கானா).*

47. நடிகை மார்லின் மன்ரோ, நாவலாசிரியர் ஏர்னஸ்ட் ஹெமிங்வே அகிய இருவருக்குமுள்ள பொதுத்தன்மை யாது?
*இருவரும் தற்கொலை செய்துகொண்டனர்.*

48. கிறிஸ்மஸ் தினத்தில் பிறந்த விஞ்ஞானி யார்?
*சேர் ஐசெக் நியூட்டன்.*



49. குச்சுப்பிடி நாட்டிய நாடகம் எப்பிரதேசத்திற் குரியது?
*ஆந்திர பிரதேசம்.*

50. ஹொலிவூட்டின் புகழ்பூத்த நகைச்சுவை நடிகர்கள் எவர்?
*லோறல், ஹார்டி.*

51. இந்தியாவிற்கு வெளியே இருக்கும் பெரிய கோயிலான ஸ்ரீ சுவாமி நாராயணன் கோயில் எங்குள்ளது?
*லண்டன்.*

52. லண்டனின் முக்கியமான விமானத்தளம் யாது?
*ஹீத்ரு.*

53. கபிலவஸ்துவில் அவதரித்த சமயப் பெரியார் யார்?
*கௌதம புத்தர்.*

54. அமெரிகாவினதும் கனடாவினதும் எல்லையிலுள்ள புகழ்பெற்ற நீர்வீழ்ச்சி எது?
*நயாகரா.*

55. டிஸ்னி உலகம் எங்குள்ளது?
*புளோரிடா. 30 ஆயிரம் ஏக்கரில்.*

56. லண்டனிலுள்ள மெழுகுச்சிலை மியூசியத்திற்கு யாது பெயர்?
*மேடம் ரிஸ்சர்ட்.*

57. ஸ்பில் பேர்க்கினுடைய புகழ்பெற்ற திரைப்படம் யாது?
*யுராசிக் பார்க்.*

58. முதலாம் உலக யுத்தத்தில் ‘பெரிய நால்வர்’ என அழைக்கப்பட்ட நாடுகள் எவை?
*அமெரிக்கா, இத்தாலி, பிரித்தானியா, பிரான்ஸ்.*

59. ‘சாகித்ய ரத்னா’ பட்டம் பெற்ற இலங்கைத் தமிழ் எழுத்தாளர் யாவர்?
*தி. ச. வரதராசன் (வரதர்), க. சொக்கலிங்கம் (சொக்கர்), கா. சிவத்தம்பி.*

60. ஒரு கலனில் எத்தனை லீற்றர்கள் இருக்கும்?
*4.546.*

61. இந்தோனேசியாவில் ஒரு மலைக்குத் தமது ஜனாதிபதியின் நினைவாகப் பெயரிட்டுள்ளனர். அந்த ஜனாதிபதி?
*சுகர்னோ.*

62. கப்பல் உடைந்ததால் ஒரு சிறு தீவில் வாழ நேர்ந்த ஒரு மனிதனின் கதையை டானியல் டிபோ என்பவர் எழுதினார். அக்கதையில் வரும் அப்பாத்திரத்தின் பெயர் யாது?
*றொபின்சன் குருசோ.*

63. 'கிறீஸ்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தாத விளையாட்டு கிரிக்கெட்டா, உதைபந்தாட்டமா, ஹொக்கியா?
*உதைபந்தாட்டம்.*

64. பஞ்சமர் வருகை நாவல்களைப் படைத்த ஈழத்து நாவலாசிரியர் யார்?
*கே. டானியல்.*

65. அதிபாரக் குத்துச்சண்டை வீரராக வெற்றிபெற்ற (1908) முதல் கறுப்பின வீரன் யார்?
*ஜோன் ஆர்தர் ஜோன்சன்.*

66. ஜோன் லில்லீஸ் பூத் என்பவனால் கொலை செய்யப்பட்ட புகழ்பூத்த மனிதர் யார்?
*அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன்.*


67. தமிழீழத் தேசியக் கவிஞர் யார்?
*புதுவை இரத்தினதுரை.*

68. விமானங்களில் பயணவிபரங்களைப் பதிவுசெய்து வைத்திருக்கும் சாதனம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
*கறுப்புப் பெட்டி (Black box)*

69. 'இரு நதிகளுக்கிடையே' என்ற கிரேக்க வார்த்தையில் அழைக்கப்படும் உலகப் பண்டைய நாகரிகம் எது?
*மொசபத்தேமியா.*

70. எவரெஸ்டில் ஏறிய முதலாவது குருடர் யார்?
*எரிக் வெய்கென்மேயர்.*

## வளைகுடா யுத்தங்கள்



1979 ஆம் ஆண்டு ஈராக், சதாம் ஹுசைன் என்ற சர்வாதிகாரியின் ஆட்சிக்குட்பட்டது. வளைகுடாப் பிரதேசத்தில் இராணுவ பலமிக்க ஒரு சக்தியாக ஈராக் விளங்கவேண்டுமென சதாம் அவாக் கொண்டார். முதற்கட்டமாக ஈரான் நாட்டினைக் கைப்பற்றும் நோக்குடன் மேற்கொண்ட முயற்சியில் தோல்விகாண் நேர்ந்தது. 1990 இல் பாரசீக வளைகுடா நாடான குவைத்தினைத் திடீரெனத் தாக்கித் தனதாக்கிக் கொண்டார். பொருளாதார, அரசியல் சுயநலன்கள் இந்த யுத்தத்தில் ஈராக்கிற்கு இருந்தது. அமெரிக்கப் படைகள் குவைத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டு, குவைத்திலிருந்து ஈராக்கினை விரட்டியடித்தன. இந்த முதலாவது வளைகுடா யுத்தத்திற்குப்பின், பத்து ஆண்டுகள் கழிந்த நிலையிலும் அமெரிக்காவிற்கும் ஈராக்கிற்குமிடையிலான நெருக்கடி நீடித்தது. ஈராக்கிலிருந்தும் சதாம் ஹுசைனைப் பதவியிலிருந்தும் அகற்றுவதென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எண்ணினார். ஈராக்கிடம் 150 கிலோ மீற்றர் தூரம்வரை பாயும் ஏவுகணைகளும், அணுஆயுதங்களும் உள்ளனவெனக் கூறி, அவ்வாறான ஆயுதங்கள் இருக்கின்றனவா எனப் பரிசோதனை செய்ய அமெரிக்கா விரும்பியது. ஈராக் 1998 வரை மறித்து இடமளிக்கவில்லை. 2001 செப்டெம்பர் 11 ஆம் திகதி இஸ்லாமிய பயங்கரவாதி களால் உலக வர்த்தக மையமும் பன்ரகனும் அழிக்கப்பட்டதும் அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் ஈராக் அகப்பட்டுக் கொண்டது. 2003, மார்ச் 20 அம் திகதி அமெரிக்கா ஈராக்கைத் தாக்கி, ஏப்பிரல் 14 இல் ஈராக்கினைக் கைப்பற்றிக் கொண்டது. சதாம் ஹுசைனும் சிறைபிடிக்கப்பட்டார்.

71. ஜேர்மனிகளை மேற்கு, கிழக்கு என இரு பிரிவுகளாகப் பிரித்திருந்த பேர்லின் சுவரின் நீளம் யாது?
*49 கி. மீ.*

72. சிங்கப்பூரின் அரச மொழிகள் எவை?
*ஆங்கிலம், மலே, மந்தரின், தமிழ்.*

73. 'உலகு எவ்வளவு ஜோதி மயமாக இருக்கின்றது' என்ற வார்த்தையைக் கூறிய விண்வெளி வீரர் யார்? 'நான் விண்ணை நேசிக்கின்றேன்' என்று கூறிய விண்வெளிப் பயணி யார்?
*யூரி ககாரின், டெனிஸ் ரிற்றோ.*

74. மார்க்கோனிக்கு ஒரு வருடம் முதலே வானொலி அலைகளை வெற்றிகரமாக ஒலிபரப்பியவர் யார்?
*கே. சி. பௌஸ்.*

75. பேர்ள் துறைமுகத்தில் யப்பான் அமெரிக்காவின் கடற்றளத்தை எப்பொழுது தாக்கியழித்தது?
*7, டிசம்பர், 1941.*

76. லெனின் கிராட்டிற்கு 1924 இல் வைத்த மறுபெயர் என்ன?
*பெற்றோகிறாட்.*

77. வாதம், பித்தம், கபம் என்ற வார்த்தைகள் எவ்வகை மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன?
*ஆயுள்வேதம்.*

78. அபின் தீவு என்றழைக்கப்படுவது எது?
*தஸ்மோனியா.*

79. விலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வேட்டையாடுவதற்குத் தடை செய்யப்பட்ட முதலாவது கடலுயிர் யாது?
*திமிங்கிலச் சுறா.*

80. வடதீவு, தென்தீவு என இரண்டு தீவுகளைக் கொண்டிருக்கும் நாடு எது?
*நியூசிலாந்து.*

81. லத்தீன் அமெரிக்காவில் அதிக எய்ட்ஸ் நோயாளிகளைக் கொண்டிருக்கும் நாடு கயானா. ஐரோப்பாவில் எந்த நாடு அதிக எய்ட்ஸ் நோயாளிகளைக் கொண்டிருக்கிறது?
*போர்த்துக்கல்.*

82. கொலம்பஸ்ஸின் கடல் பயணத்திற்கு உதவிய அவரின் சகோதரர் யார்?
*பார்த்தலோமியோ.*

83. நேட்டோ ஒப்பந்த நாடுகள் எத்தனை?
*19.*

84. பிரித்தானிய தொழிற் கட்சியின் மிக இளம் வயதான தலைவர் யார்?
*ரொனி பிளேயர்.*


85. 'யுத்தத்திற்கு ஆயத்தமாக இருப்பதன் மூலமே சமாதானத்தைதப் பேண முடியும் என்பது துரதிஷ்டவசமான உண்மை' என்று கூறிய அமெரிக்க ஜனாதிபதி யார்?
*ஜோன். எப்.கென்னடி.*

86. மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறு உலக தினங்களில் எது?
*அன்னையர் தினம்.*

87. விம்பில்டனில் ஐந்த தடவைகள் தொடர்ந்து வெற்றிவாகை சூடிய வீரர் யார்?
*பியோன் போர்க்.*

88. 'ஸ்ரான்லி வெற்றிக்கிண்ணம்' சம்பந்தப்பட்ட விளையாட்டு எது?
*பனிமேடையில் விளையாடும் ஹொக்கி.*

**பாபாப் மரங்கள் (Baobab) இலங்கையில் எங்குள்ளன?**



நெடுந்தீவிலும் மன்னாரிலும் இரு மரங்கள் உள்ளன. இவை அராபிய வர்த்தகர்களால் இங்கு எடுத்துவரப் பட்டு நடப்பட்டிருக்க வேண்டும். ஆபிரிக்காவில் சிறப்பாக மடகாஸ் காவில் இவ்வகை மரங்களுள்ளன. மிகப்பருத்த அடிமரப் பாகத்தையும் சிறிய கிளைகளையும் இம்மரம் கொண்டிருக்கும். அடிமரம் நிறைய நீரை உறிஞ்சி வைத்திருக்கும் தன்மையது. அடிமரத்தின் விட்டம் 9-15 மீற்றர்வரை காணப்படும்.

### சார்ள்ஸ் நொபேட் டார்வின்

சார்ள்ஸ் நொபேட் டார்வின் (1809 - 1882) என்ற இயற்கை விஞ்ஞானி, Theory of Solution பரிணாமக் கோட்பாட்டினை வெளியிட்டார். 1831 - 1836களில் தென்னமெரிக்காவையும் பசுபிக்கையும் சுற்றி மேற்கொண்ட பயணங்களின் பயனாக தாவரங்களையும், விலங்குயிர்ச் சுவடுகளையும் ஆராய்ந்து இந்தக் கோட்பாட்டினை வெளியிட்டார். Origin of Speuis (1859), Desent of Man (1871) என்பன அவரது நூல்களாம்.

89. இத்தாலியின் சாய்ந்த கோபுரத்தின் உச்சியையடைய எத்தனை படிகள் ஏற வேண்டும்?
297.

90. ரூசியாவின் மீர் விண்வெளித்தளத்தில் அதிக காலம் ஆராய்வு செய்வதற்காக அதில் வசித்த பெண்மணி யார்?
*சனொன் லுசிட்.*

91. பாராளுமன்றத்தின் தாய் என எந்த நாட்டுப் பாராளுமன்றத்தை அழைப்பர்?
*பிரித்தானியா.*

92. மனித உடலில் எத்தனை சோடி விலா எலும்புகள் உள்ளன?
12.

93. இரண்டாம் உலக யுத்த காலத்தில் தெகிறான் மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் யார்?
*ஸ்ராலின், ரூஸ்வோல்ட், சேச்சில்.*

94. அமெரிக்கச் சுதந்திரச்சிலை எந்த நாட்டின் அன்பளிப்பு?
*பிரான்ஸ்.*

95. 16ஆம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த சோதிடர் எக்காலத்தில் யாது நடக்குமென முன்கூட்டியே எழுதி வைத்துள்ளார். அவர் யார்?
*நொஸ்ரடாமஸ்.*

96. விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் அதற்கு முன் என்ன செய்தார்கள்?
*ஒரு சயிக்கிள் கம்பனியில் வேலை பார்த்தார்கள்.*

97. யப்பானின் புகழ்பூத்த புராதன நாடகம் எது?
*கபூக்கி.*

98. ஐரோப்பாவில் இயங்கு எரிமலை எது?
*எட்னா.*

99. அப்பறவையை எரித்தாலும் அது அதன் சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் என்ற புராணப் பறவை எது?
*பீனிக்ஸ் பறவை.*

100. நோபல் பரிசுக்கு நிகரான ஆசியப் பரிசு எது?
*மாக்சேசே பரிசு.*

101. போக்லாந்துத் தீவு யுத்தத்தில் ஈடுபட்ட இரு நாடுகள் எவை?
*பிரித்தானியா, ஆஜென்ரீனா.*

102. ஜேம்ஸ் பொன்டாக முதல் முதல் திரைப்படங்களில் நடித்தவர் யார்?
*சீன் கொனறி.*

## கோள்கள் பற்றி....

கோள்களில் மிகப் பெரியது வியாழன். அதன் மத்திய கோட்டு விட்டம் 142,984 கி. மீ. ஆகும். பூமயிலும் பார்க்க 317028 மடங்கு தியிவுடையது.

கோள்களில் மிகச் சிறியதும் குளிர்ச்சியானதும் புளுட்டோ ஆகும். இதன் விட்டம் 2320 கி. மீ. ஆகும். சூரியனிலிருந்து மிக்க தூரத்திலிருப்பதும் புளுட்டோவேயாகும். சூரியனிலிருந்து புளுட்டோ 5914 மில்லியன் கி. மீ. தூரத்தில் உள்ளது

பூமியிலிருந்து நோக்கும்போது மிகப் பிரகாசமாகக் கட்புலனாகும் கோள் வெள்ளியாகும். *(ஏநரௌ)*

மிக வேகமாகச் சூரியனைச் சுற்றிவரும் கோள் புதன் ஆகும். சூரியனிலிருந்து 5,79,09,200 கி.மீ. தூரத்திலுள்ள புதன் சூரியனைச் சுற்றிவர 88 நாட்கள் எடுத்துக்கொள்கிறது. எனவே அதன் வேகம் 172,248 கி.மீ.:மணி ஆகும்.

மிக அடர்த்தியான கோள் பூமி. அதன் அடர்த்தி அதே பருமனான நீர்க்கோளத்திலும் பார்க்க 5.515 மடங்கு ஆகும். மிகவும் அடர்த்தி குறைந்த கோள் சனி. அதன் அடர்த்தி 0.685 ஆகும்.

103. ஷேக்ஸ்பியரின் மிக நீளமான நாடகம் எது?
*ஹம்லெட்.*

104. ஆபிரிக்காவிலுள்ள மிகச் சிறிய நாடு எது?
*கம்பியா.*

105. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் வடகொரியாவை ருசியா கைப்பற்றியிருந்தது. தென்கொரியாவை எந்த நாடு கைப்பற்றியிருந்த்து?
*அமெரிக்கா.*

106. உலகின் மிகப் பெரிய ஆமைகள் எத்தீவில் இன்றும் வசிக்கின்றன?
*கலபாகோ தீவுகள்.*

107. ஜன்னல், துவாய், கப்பித்தான் என்பன எந்த மொழியிலிருந்து வந்தன?
*போர்த்துக்கேய மொழி.*

108. எந்தத் தென்னமெரிக்கநாட்டில் இரு பக்கங்களில் பசுபிக் சமுத்திரமும் அத்திலாந்திக் சமுத்திரமும் உள்ளன?
*கொலம்பியா.*

109. வேதங்களில் மிகவும் பழமையானது எது?
*இருக்கு வேதம்.*

110. அரக்க அரசன் ஹிரனியகசிபு யாரால் கொல்லப்பட்டான்?
*நரசிம்மர்.*

111. அமெரிக்காவின் நான்கு விண்வெளிக் கலங்கள் எவை? அவை விண்வெளிக்கு ஏவுகலங்களை எடுத்துச்சென்று உரியவிடத்தில் ஏவிவிட்டு வருவனவாகும்.
*கொலம்பியா, சலெஞ்சர், டிஸ்கவரி, அற்லான்ரிஸ்.*

112. பூமியின் நிலப்பரப்பில் மிகத் தாழ்வான இடம் எது?
*சாக்கடல்.*

113. பிரசாந்தி நிலையம் எங்குள்ளது?
*சாயிபாபாவின் ஆச்சிரமம். புட்டபர்த்தியிலுள்ளது.*

114. நரம்புகளின் அதிர்வில்லாமல் வேலை செய்யும் வாத்தியக் கருவி எது?
*ஓர்கன்.*

115. எங்கு எப்பொழுது முதலாவது மோட்டார் கார் ஓட்டப்பந்தயம் நிகழ்ந்தது?
*பிரான்ஸ், 1894.*

116. ஏ. கே 47 என்பது இன்று முக்கியமான சுடுகருவியாக உலகெங்கும் விளங்குகின்றது. அதில் குறிப்பிடப்படும் 47 என்பது எதைச் சுட்டுகிறது?
*அது உற்பத்தியாகிய ஆண்டை.*

117. ஊசிகளைக் குறித்த உடற்பாகங்களுள் குத்திச் செய்யும் சீனமுறைச் சிகிச்சை யாது?
*அக்குபஞ்சர்.*

118. சர்வதேச மகளிர் தினம் எது?
*மார்ச் 8.*


119. யூரோ நாணயத்தினை ஏற்றுச் செயற்படும் ஐரோப்பிய பதினொரு நாடுகள் எவை?
*ஜேர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரியா, பெல்ஜியம், பின்லாந்து, இத்தாலி, லக்சம்பேர்க், நெதர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின், அயர்லாந்து.*

120. அறுபது வயதினைக் குறிக்கும் விழா எது?
*மணிவிழா.*

### துங்கு அப்துல் ரஹ்மான்

மலேயாவின் முதலாவது சுதந்திரப் பிரதமர். மலேசிய சுதந்திரத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார். கேம்பிரிஜ்ட் பல்கலைக்கழகப் பட்டதாரி. 1951 இல் ஐக்கிய மலாயா தேசிய நிறுவனத்தின் (UMNO) தலைவராக விளங்கி மலேயாவின் சுதந்திரத்திற்காகப் போராடத் தொடங்கினார். 1957 இல் பிரித்தானியர் மலேயாவிற்கு சுதந்திரம் வழங்கினர். முதல் பிரதமரானர்ர். 1963இல் மலாயா, சிங்கப்பூர், சபா, சாரவாக் ஆகிய நாடுகள் இணைந்து மலேசியா என்ற கூட்டு நாட்டினை உருவாக்கின. 1965இல் சிங்கப்பூர் பிரிந்து தனி நாடாகிக் கொண்டது. ASEAN என்னும் தென்கிழக்காசிய நாடுகளின் ஒன்றியத்தை துங்கு அப்துல் ரஹ்மானே நிறுவினார்.

## எகிப்திய மம்மிகள்



உயிரற்ற சடலங்களைப் பேணிக் காக்கின்ற கலையைப் பண்டைய எகிப்தியர் அறிந்திருந்தார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இறந்தபோன அரச குலத்தின ரின் சடலங்கள் எகிப்திய பிரமிட்டுக் களில் சிதையாமல் பதப்படுத்தப்பட் நிலையில் கண்டெடுக்கப்பட்டுள் ளன. அவற்றை மம்மிகள் என்கின்றனர்.


எகிப்திய பாறோ (Paraohs) தமது சடலங்களைத் தாமே கட்டிய பிரமிட்களில் மம்மிகளாக அடக்கம் செய்தனர். கி. மு. 2500 ஆண்டுக ளுக்கு முற்பட்ட மம்மிகள் எகிப்தில் எடுக்கப்பட்டுள்ளன. வறண்ட காற்றி னால் சூடாக்கப்படும் எகிப்திய மணலில் 5000 ஆண்டுகளுக்கு முன் அடக்கம் செய்யப்பட்ட எதுவித பேழைகளிலும் இடப்படாத சடலங்கள்கூட அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கண்டெடுக்கப்பட்ட மம்மிகளில் ஆண் சடலங்களின் கரங்கள்மார்பில் வைத்திருந்த நிலையிலும் பெண் சடலங்களின் கரங்கள் நீட்டிய நிலையிலும் காணப்படுகின்றன. றாம் செஸ் II என்ற எகிப்திய மாமன்னனின் மம்மி எகிப்திய நுண்பொருட்காட்சிச்சாலையில் உள்ளது.

எகிப்திய மம்மியாக்கக் கலையைப் பற்றிக் கிரேக்க வரலாற்றாசிரிய ரான ஹேரட்டோடஸ், கி. மு. 5 அம் நூற்றாண்டில், தனது நூலில் எழுதியுள்ளார். அரச குலத்தவர் மரணமானதும் அவரின் சடலம் நைல் நதியின் மெற்குக் கரைக்கு மதகுருவின் தலைமையில் பதப்படுத்தப்படும் கூடாரத்துக்கு எடுத்துச்செல்லப்படும். சடலத்தைத் துப்பரவு செய்து படுக்கை ஒன்றில் வளர்த்துவர். பதப்படுத்துவோரின் குழுவின் தலைவர் நரியின் முகமூடி அணிந்து வருவார். அனுபிஸ் (Anuis) என்ற கடவுளின் வடிவம் அதுவாகும். சடலத்தின் உள்ளுறுப்புகள் அகற்றப்பட்டு புதைப்பதற்காக நான்கு கற்றாழிகளில்



இடப்படும். மூளை வெகு லாகவமாகப் பிரித்தெடுக்கப்படும். இருதயம் மட்டும் சடலத்துள் அகற்றாது விடப்படும். உள்ளுறப்புக்களற்ற சடலத்தின் உட்பகுதிகள் தாலமதுசாரத்தால் கிருமிகள் அழிய நன்கு கழுவப்படும்.

மனிதஉடல் முக்கால்பங்கு நீர் கொண்டதாகும். இந்த நீரைச் சடலத்திலிருந்து அகற்றும் முறை எகிப்தியருக்குத் தெரிந்திருக்கிறது.



இறந்தவரின் முகத்தோற்றம் வேறுபடாதிருப்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. உள்ளுறுப்புகளற்ற உடல் லினனால் அல்லது மரத்தூள் நிரப்பப்பட்டு, வயிற்றிலிடப்பட்ட வெட்டுவாய் ஒரு தங்கத் தகட்டால் மூடப்படும். கால் நகங்களும் விரல் நகங்களும் நிறந்தீட்டப்படும். கண்விழிகளாக ஓரளவு விலைமதிப்புள்ள கண்ணாடிக் கற்கள் பொருத்தப்படும். பின்னர் உடல் ஏறத்தாழ 150 யார் நீளமான நிற லினன் துணியால் சுற்றப்படும். முகம் தவிர்த்து உடல் முழுவதும் பட்டுப்பூச்சிக்கூடு போல லினன் துணியால் பின்னப்படும். கலைத்துவமான பின்னலாக அது அமையும். இவ்வளவும் நிறைவேற 70 நாட்களாகும்.

இறுதிச் சடங்கில் பொதியிடப்பட்ட மம்மி நிலைக்குத்தாக நிறுத்தி வைக்கப்படும். பின்னர் அடக்கம் செய்யப்படும். எகிப்திய மாமன்னர்கள் தமக்கென அமைத்துக் கொண்ட பிரமிட் கல்லறைகளில் அவர்களது மம்மிகள் அடக்கம் செய்யப்பட்டன.

# *gk-5* பலதும் பத்தும் - 2

1. நுண் கணனித் தொழிலை (Micro - Computer Industry) புரட்சிகரமாக்கிய நிறுவனம் எது?
*IBM, 1980 ஆம் ஆண்டு தனது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தத் தொடங்கியது.*

2. ஒரு கம்பியூட்டரில் உள்ளீடு செய்ய உதவும் சாதனம் யாது?
*ஸ்கானர் (Scanner).*

3. நீர்ப்பாசனக் குளம் ஒன்றிலிருந்து மேலதிகநீர் வெளியேற்றப் படுவதற்கு உதவுவது யாது?
*கலிங்கல்.*

4. மகாசேனனால் கட்டப்பட்ட குளங்களைக் கொண்ட தொகுதி எது?
*மின்னேரியாக்குளம், கவுடுலுவாவி, குறுலுவாவி.*

5. ஆகக்கூடிய நீர்மின்வலுவைப் பிறப்பிக்கும் ஆற்றல்மிக்க நீர்வலு நிலையம் எது?
*புதியலக்சபானா.*

6. இலங்கையில் உலகபாரம்பரியம் எனக்கருதப்படும் இயற்கை இடம் எது?
*சிங்கராஜவனம்.*

7. 2001 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட குடித்தொகைக் கணக்கெடுப்பின்படி இலங்கையின் சனத்தொகை எவ்வளவு?
*மில்லியன்.*

8. இலங்கையின் தொல்பொருளாய்வுக்கான இடங்கள் பலவற்றைக் கண்டுபிடித்து, ஒவ்வொரு இடமும் பற்றிய விபரங்களைப் பதிவுசெய்த பிரித்தானியரான தொல்பொருளியலாளர் யார்?
*ரெனன்ற்.*

9. இலங்கையில் பெருமளவு கைத்தொழில்கள் குவிந்திருப்பது எந்த மாகாணத்தில்?
*மேல்மாகாணம்.*

10. கலாவாவியிலிருந்து திஸ்ஸவாவிக்கு நீர் எதன்மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது?
*எலஹர யோத அல.*

11. தொடர்பாடல் தொழில்நுட்பவியலும் கணனித் தொழில்நுட்பவியலும் இணைந்ததினூடாக உருவான துறை எது?
*இன்றநெற்.*

12. பிரித்தானியாவின்கீழ் இலங்கையை ஒரு முடிக்குரிய குடியேற்ற நாடாக ஏற்படுத்திய கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது எப்போது?
*1815 மார்ச் 02.*

13. எச்சட்டத்தின்படி இலங்கையில் ஆங்கிலம் கைவிடப்பட்டு சிங்களம் நிருவாக மொழியாயிற்று?
*1956 ஆம் ஆண்டின் அரசகரும மொழிச் சட்டம்.*

14. சிலுவைப்போர் (crusade) எங்கு, ஏன் நடந்தது?
*இஸ்லாமியர் ஆதிக்கத்திலிருந்து ஜெருசலத்தை மீட்பதற்காக கிறிஸ்தவர்கள் நடத்திய போர்.*


15. புரட்டஸ்தாந்து மதப்பிரிவினை உருவாக்கிய பாதிரியார் யார்?
*மார்ட்டின் லூதர்.*

16. இலங்கையில் வண்ணம் தீட்டிய முகமூடிகளை மரத்தில் தயாரிக்கும் நிலையமெங்குள்ளது?
*அம்பலாங்கொடை.*


17. கல்லோயா அபிவிருத்தித் திட்டம் எந்த நீர்த்தேக்கத்தை அடிப்படையாகக் கொண்டது?
*சேனநாயக்க சமுத்திரம்.*


18. இலங்கையில் புகழ்பெற்ற கெச்சமலைப் பள்ளிவாசலையும், பாமரீன் கலங்கரைவிளக்கத்தையும் கொண்ட நகர் எது?
*பேருவளை.*

# கோலோசியம்




கோலோசியம் என்பது ரோமசாம்ராச்சியத்தின் ஒரு விளையாட்டு அரங்கு. அங்கு விலங்குகளும் விலங்குகளும் மோதிக் கொண்டன. விலங்குகளும் மனிதர்களும் மோதிக் கொண்டனர். மனிதர்களும் மனிதர்களும் மோதிக் கொண்டனர். அவர்கள் மோதி எவராவது ஒன்று அல்லது ஒருவர் இறக்கும் வரை வெறியோடு பார்த்து மகிழ்வது ரோமனியர்களின் பொழுதுபோக்காக அமைந்திருந்தது. கோலோசியம் ஒரு நீள்வட்டமான கட்டடம். அம்மையத்தின் தளத்தில் மணல் பரப்பிய தரை. வட்டவடிவில் அம்மைதானத்தைச் சுற்றியமைக்கப்பட்ட இருக்கைகளில் பார்வையாளர் குவிந்திருப்பர்.





அது ஒரு மையவட்டத் திறந்தவெளி அரங்கு. கி.பி. 80இல் பொம்பை என்றவிடத்தில் கோலோசியம் கற்களால் கட்டப்பட்டது. நீள் வட்ட வடிவில் 180 மீ x 157 மீ வட்டஅளவில் 50 ஆயிரம் இருக்கைகளுடன் அமைக்கப்பட்டது. நீரோ மன்னனின் தங்க மாளிகைக்கு அருகில் இது கட்டப்பட்டது. மத்தியகால ஏழு அதிசயங்களில் கோலோசியம் ஒன்றாகும். ரோமசாம்ராச்சியம் பரவியிருந்த நாடுகளிலும் இவ்வாறான கட்டமைப்புக்கள் இருந்தன. இன்று ஒரு இடிவுற்ற கோலோசியத்தின் எச்சம் ரோமாபுரியில் உள்ளது.

19. ரயில் எஞ்சினை நீராவி மூலம் ஓடத் தயாரித்த அறிஞர் யார்?
*ஜோர்ஜ் ஸ்ரீவன்ஸன்.*

20. ‘மோனலிசா’ என்ற உலகப் புகழ்பூத்த ஓவியத்தை வரைந்தவர் யார்?
*லியனார்டோ டாவின்ஸி.*

21. இலங்கையில் எட்டு மாகாண சபைகள் உள்ளன. மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் எந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?
1988.

**நீல் ஆம்ஸ்ரோங்**



அமெரிக்க விண்வெளி வீரர். 21 யூலை 1969 ஆம் ஆண்டு முதன்முதல் சந்திரனில் காலடி வைத்திறங்கியவர். அப்போலோ 11 விண்வெளிக் கப்பல் மூலம் இப்பிரயாணம் சாத்தியப்பட்டது.

22. இலங்கையில் தேசியக் கொடியைப் பறக்கவிடும் சந்தர்ப்பங்கள் எவை?
*தேசிய தினம், தேசிய நிகழ்ச்சிகள், ஜனாதிபதி, பிரதமர், பிரதம நீதியரசர், அமைச்சர்கள் கலந்துகொள்ளும் நிறுவன நிகழ்வுகள், அரசு பிரகடனப்படுத் தும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தினங்கள் மற்றும் வெளிநாட்டு அரச தலைவரின் வருகையின் போது.*

23. ‘பத்தேகம’ (A village in the Jungle) என்ற நூலின் ஆசிரியர் யார்? அவர் அம்பலாந்தோட்டை உதவி அரசாங்க அதிபராக (1908-1911) பதவி வகித்தவர்.
*லெனாட் வூல்ப்.*

24. காலணித்துவ ஆட்சியின்போது இறைவரி அறவிடுவதற்காகக் ‘கலெக்டர்’ (Collector) கள் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிராந்தியங்களுக்கு நியமிக்கப்பட்டனர். அவர்களே பின்னர் அரசாங்க அதிபர்களாக மாறினர். முதன்முதல் கலெக்டர் நியமனம் எந்த ஆண்டு நடந்தது?
1872.

25. முதன்முதல் இலங்கையில் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட இலங்கையர் யார்? (1931)
*சிறில் லெனாட் விக்கிரமசிங்க.*

26. செயற்கை றப்பர், செயற்கைப் பட்டு என்பனவற்றைக் கண்டுபிடித்தவரே டைனமற்றையும் கண்டுபிடித்தார். அவர் யார்?
*ஆல்பிரெட் நோபல்.*

27. உலகின் புகழ்பூத்த அரண்மனை, கலைப்பெட்டகமாக பிரான்சிய மன்னன் பதினான்நாம் லூயி அமைப்பித்தான். அது எது?
*வேர்ஸேய்ல்ஸ்.*

28. உலக வரலாற்றிலேயே ஏழைக்குடும்பத்தில் பிறந்த ஒருவன் முதன்முறையாகச் சக்கரவர்த்தியானான். அவன் யார்?
*நெப்போலியன்.*

29. உலகப் போர்களின் காரணமாக ஒலிம்பிக்ஸ் போட்டி மூன்று தடவைகள் நிறுத்தப்பட்டது. அந்த ஆண்டுகள் எவை?
1916, 1940, 1946.

30. எந்த நகரத்தில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் 1972 இல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் பதினொரு இஸ்ரேலிய வீரர்களைக் கடத்திச்சென்று படுகொலை புரிந்தது?
*மியூனிச்.*

31. இலங்கையில் முருகைக்கற்பார்ப் பூங்காவுக்குப் புகழ்பெற்ற இடம் எது?
*ஹிக்கடுவை.*

32. டச்சுக்கரரால் ஒரு சிறு தீவில் அமைக்கப்பட்ட 'ஹமன்கீல்' என்ற கோட்டை எங்குள்ளது?
*ஊர்காவற்றுறை. அருகிலுள்ள தீவு.*

33. இலங்கைக்குச் சர்வசன வாக்குரிமை எந்த ஆணைக்குழுவின் சிபார்சின் பேரில் வழங்கப்பட்டது?
*டொனமூர் ஆணைக்குழு.*

34. 1815 வோட்டர் லூ யுத்தத்தில் வெற்றிபெற்ற படை எது?
*பிரித்தானிய - பிரஷியப்படை.*

# 10 கேள்விகள்

1. சமையலுக்குப் பயன்படும் வினிகரில் உள்ள அமிலம் எது?
   ① சிட்ரிக் அமிலம் ② ஹைட்ரோகுளோரிக் அமிலம்
   ③ நைட்ரிக் அமிலம் ④ அசிடிக் அமிலம்

2. டிஸ்கவரி போன்ற விண்வெளி ஓடங்கள் இதுவரை எத்தனை முறை விண்ணில் ஏவப்பட்டுள்ளன?
   ① 85. ② 100 ③ 101 ④ 121

3. இடுக்கியைச் சேர்ந்த 25 வயதுப் பெண்மணி சிட்னி ஒலிம்பிக்ஸில் 400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் அரையிறுதிப் போட்டிவரை சென்றவர். அவர் யார்?
   ① பீனாமோல் ② மல்லேஸ்வரி
   ③ ஷைனி ஏபிரஹாம் ④ பி. டி. உஷா

4. J.M.M எம்.பிக்களுக்குலஞ்சம் கொடுத்த வழக்கில் பூட்டாசிங் குக்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட் டுள்ளது. நரசிம்மராவ் அமைச்சரவையில் பூட்டாசிங் எத்துறை அமைச்சராகவிருந்தார்?
   ① நிதி ② உள்துறை ③ வெளியுறவு ④ பாதுகாப்பு

5. இந்தியப் பெருங்கடலில் மிகப் பெரிய தீவு எது?
   ① இலங்கை ② மொரீஷியஸ்
   ③ மலகாசி (மடகாஸ்கர்) ④ சேஷல்ஸ்

6. மனித மூளையின் சராசரி அளவு என்ன? (மூளையின் அளவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் தொடர்பில்லை)
   ① 1.4 லிட்டர் ② 2.4 லிட்டர்
   ③ 2.8 லிட்டர் ④ 3 லிட்டர்

7. உலக சமாதானத்துக்காக 2000 அம் ஆண்டுக்கான நோபல் பரிசைப் பெற்றவர் யார்?
   ① கிம் டே ஜங் ② கிம் ஜோங்
   ③ காவோ சிங்கியான் ④ கன்டுவான்

8. உடலில் காயம் படும்போது ரத்தக் குழாய்கள் உடைந்து ரத்தம் வெளியேறும். ரத்தத்திலுள்ள ஒரு பொருள் மெல்லிய இழைகளை ஏற்படுத்தி ரத்தம் வெளியேறுவதைத் தடுத்து உறையச் செய்கிறது. இந்தப் பொருள் என்ன?
   ① வைட்டமின் ② பைப்ரின்
   ③ பைல் ④ ஹீமோ குளோபின்

9. சமீபத்தில் வெனிஸ் நடைபெற்ற உலக திரைப்பட விழாவில் சிறந்த இயக்குனருக்கான தங்க சிங்கம் (Golden Lion) விருதினைப் பெற்றார் புத்ததேவ்தாஸ் குப்தா. இந்த விருதினைப் பெற்றுத்தந்த படம் எது?

① பவானி ஜங்ஷன் ② பிரகார் ③ உத்தரா ④ குஷி

10. சமீபத்தில் மக்கள் புரட்சிக்குப்பின் யுகோஸ்லாவியாவின் புதிய அதிபராகப் பதவியேற்றிருப்பவர் யார்?

① கோஸ்டானிகா ② மிலோசவிக்

③ மிலுடினோவிக் ④ கோரிகா கஜேவிக்

விடைகள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 1 - 4 | 2 - 2 | 3 - 1 | 4 - 2 | 5 - 3 |
| 6 - 1 | 7 - 1 | 8 - 2 | 9 - 3 | 10 - 1 |

35. விஞ்ஞானரீதியாக மருத்துவத்தை அணுகிய கிரேக்க அறிஞர் யார்?
*ஹிப்போகிரேடஸ்.*

36. ஹாலிவூட்டில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படம் எது?
*In old California.*

37. அமெரிக்க ஜனாதிபதி, ரிப்பிளிக்கன் கட்சியின் சார்பாக இரசியலுக்கு வந்தவர், 1865 ஆம் ஆண்டு அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்கிய தலைவர் யார்?
*ஆபிரகாம் லிங்கன்.*

38. 75 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியின் வான்பரப்பில் தோன்றும் வால்நட்சத்திரம் எது?
*ஹேலிஸ் வால்நட்சத்திரம்.*

39. தோமஸ் அல்வா எடிசனின் கண்டுபிடிப்பு யாது?
*மின்சாரம்.*

40. பசுபிக் சமுத்திரத்தையும் அத்திலாந்திக் சமுத்திரத்தையும் இணைக்கும் கால்வாய் எது?
*பனாமா.*

41. பிரித்தானியராட்சிக் காலத்தில் இலங்கையை ஐந்து நிர்வாக மாகாணங்களாகப் பிரித்த தேசாதிபதி யார்?
*பிரடறிக் நோர்த்.*

42. ‘சார்க்’ உடன்படிக்கை எப்போது எந்நிகழ்ச்சியின்போது கைச்சாத்திடப்பட்டது?
*1985 இல் டாக்காவில் நடைபெற்ற தேசத்தலைவர்கள் மகாநாட்டில்.*

43. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படம் யாது? இதனைத் தாதா சாகிப் பால்கே தயாரித்திருந்தார்.
*ராஜா ஹரிச்சந்திரா.*

44. தென்கிழக்காசிய நாடுகள் நிறுவனத்தின் (ASEAN) தாபன உறுப்பு நாடுகள் எவை?
*இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன், சிங்கப்பூர்.*

45. முதலாம் உலகமகா யுத்தம் ஆரம்பமாகக் காரணமாயிருந்த நிகழ்ச்சி யாது?
*ஆஸ்திரிய நாட்டு இளவரசர் பேர்டினாணாட்டையும் அவரது மனைவியையும் செர்பிய நாட்டுத் தீவிரவாதி சுட்டுக் கொன்றமை.*

46. இலங்கை வானொலி கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டது எத்தினத்திலாகும்?
*1967 ஜனவரி 05.*

47. கம்யுனிசத் தலைவர்களின் தொகுதி எது?
*மார்க்ஸ், லெனின், ஸ்டாலின், ட்ராஸ்கி, மாவோ, ஹோசிமின்.*

48. ‘தான் வாழும்போது உலகிற்கு எந்தச் செய்தியையும் சொல்லாத முட்டாள்கள்தான் இறக்கும்போது கடைசியாக ஏதாவது சொல்ல வேண்டும்’ என்ற வார்த்தைகளின் உரிமையாளர் யார்?
*மார்க்ஸ்.*

49. 50 நாடுகளால், 1945 ஏப்பிரல் 25 முதல் ஜுன் 26 வரை சென் பிரான்ஸிஸ்கோவில் நடைபெற்ற மகாநாட்டின் முடிவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணம் எது?
*ஐக்கிய நாடுகளின் பிரகடனம்.*

50. இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை எந்த அரசியலமைப்பு விதிகளின் கீழ் ஏற்படுத்தப்பட்டது?
*1978 அரசியலமைப்பு யாப்பு விதி.*

51. ருசியப் புரட்சியை நடத்தியவர்கள் எவர்?
*லெனின், ட்ராட்ஸ்கி, ஸ்டாலின்.*

52. மைக்கல் ஏஞ்சலோ என்ற மாபெரும் ஓவியனின் புகழ்பூத்த ஓவியப் படைப்பு யாது?
*ஆதாமின் பிறப்பு.*

53. 1945 இல் ஹீரோஸிமா, நாகசாகி ஆகிய நகரங்களுக்கு அணுக் குண்டுகளைப் போடுவதற்கு அனுமதியளித்த அமெரிக்க ஜனாதிபதி யார்?
*ஹெரி. எஸ். ட்ருமன்.*

> **ஹென்றி கிஸிங்கர்**
>
> ஹென்றி கிஸிங்கர் அமெரிக்காவின் வெளிவிவகார ஆலோசகராக விளங்கியவர். 1923 இல் ஜேர்மனியில் பிறந்து ஹிட்லரின் நாஷிச வெறிக்குப் பயந்து அமெரிக்காவில் குடியேறியவர். ஜனாதிபதி நிக்ஷனின் வெளிவிவகார ஆலோசகராகப் பணியாற்றி வியட்நாம் யுத்தத்தை சமாதான வழியில் தீர்த்துவைக்கக் காரணமாயினார். அதற்காக 1973 ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசினைப் பெற்றவர்.

54. சுதந்திர வர்த்தக வலையத்தினுள் வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளின் வளர்ச்சியைக் கண்காணிப்பதற்காக 1978 இல் நிறுவப்பட்ட நிறுவனம் எது?
*பாரிய கொழும்புப் பொருளாதார அணைக்குழு.*

55. புகழ்பெற்ற வங்காள சினிமா இயக்குனர் யார்?
*சத்யஜித்ரே.*

56. $E = mc^2$ என்ற சார்பியல் கோட்பாட்டின் மூலகர்த்தா யார்?
*ஐன்ஸ்டீன்.*

57. இலங்கையின் வர்த்தக வீதமானது அதிகரித்து வருவதற்கான பிரதான காரணம் யாது?
*திறந்த பொருளாதாரக் கொள்கை.*

58. பிரித்தானியாவின் இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் நாடகாசிரியர் யார்?
*பெர்னாட் ஷா*

59. 30 ஆயிரம் திரைப்படப் பாடல்களுக்கு மேல் பாடிய இந்தியப் பின்னணிப் பாடகர் யார்?
*லதா மங்கேஸ்கார்.*

60. பென்சிலின் கண்டுபிடிப்பிற்காகப் 1945 இல் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி யார்?
*அலெக்சாண்டர் பிளமிங்.*

61. கார்ட்டூன் திரைப்படங்களில் 'மிக்கி மவுஸ்', 'டோனால்ட் டக்' என்பனவற்றை நடமாடவிட்டு உலகப்புகழ் பெற்ற திரைப்படத் தயாரிப்பாளர் யார்?
*வால்ட் டிஸ்னி.*

62. சார்ள்ஸ் டிக்கன்ஸின் புகழ்பூத்த நாவல் எது?
*ஒலிவர்ட்விஸ்ட்.*

63. இந்திய உளவுச் சேவைக்கு வழங்கும் பெயர் யாது?
*RAW.*

64. தற்கால உளப் பகுத்தாய்தலை உருவாக்கியவர் யார்?
*சிக்மன்ட் புறொயிட்.*

65. எதிர்காலத்தில் மனிதவினம் எதிர்நோக்கவேண்டிய கடும் பிரச்சினை எது?
*அதிகளவில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுதல்.*

66. தனது வரலாற்றுக் குறிப்புகளுக்காக இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய பிரதமர் யார்?
*வின்சன் சேர்ச்சில்.*

67. விஞ்ஞானத்திலும் ஓவியத்திலும் அறிஞராகத் திகழ்ந்த ஒருவர் யார்?
*லியனார்டோ டாவின்சி.*

68. அண்மையில் யப்பானில் உருவாக்கப்பட்ட மாயநாய் (virtual dog), புதிய இயந்திர மனித யுகத்திற்கக் கதவைத் திறந்துவிட்டுள்ளது. அம்மாய நாய்க்கு வழங்கப்படும் பெயர் யாது?
*விற்றோரியா.*

69. இலங்கையின் தேசிய விளையாட்டு யாது?
*எல்லே.*

# gk-6 தொலைத் தொடர்புகள்

1. ஒரு தசாப்தத்திற்கு முதல் எவ்வகைத் தொலைத்தொடர்பு முக்கியம் பெற்றிருந்தது?
*தபால் வழித் தொடர்புகள், தொலைபேசித் தொடர்புகள்.*

2. தொலைத் தகவல் தொடர்பில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது எது?
*மின்சாரத்தின் கண்டுபிடிப்பு.*

3. முதல் மின்சாரத் தந்தியை அறிமுகப்டுத்தியவர்கள் யார்?
*லஸ்வீட்ஸ் டொன், சேர் வில்லியம்.*

4. மோர்ஸ் 1833 இல் உருவாக்கிய தந்திமுறை யாது?
*முள்முறைத் தந்தி.*

5. முதன்முதல் தொலைபேசியை உருவாக்கியவர் யார்?
*அலெக்சாண்டர் கிரகம் பெல்.*

6. தானியக்கத் தொலைபேசிகளை அறிமுகப்படுத்தியவர் யார்?
*ஆல்மன் பி. ஸ்ரவ்யர்.*

7. ரெலெக்ஸ் (telex) என்றால் என்ன?
*செய்தியை டெலிபிரின்டர் என்ற சாதனத்தின் மூலம் அச்சுவடிவில் அனுப்பும் தொழில்நுட்பம் ரெலெக்ஸ் எனப்படும்.*

8. ஒரு செய்தித்தாளின் பக்கங்களை அப்படியே ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு அனுப்பும் முறை யாது?
*பெசிமிலி.*

9. 1956 இல் இரண்டு கண்டங்களை இணைத்து கடலடித் தொலைத் தொடர்புக் கேபிள்கள் இடப்பட்டன. எச்சமுத்திரத்தினூடாக இக்கேபிள் இடப்பட்டது?
*அத்திலாந்திக் சமுத்திரம்.*

10. தரைக்கடியில் பதிக்கப்பட்ட தொலைத் தொடர்புக் கேபிள்களை எவ்வாறு அழைப்பர்?
*இணையச்சுக் கம்பி வடங்கள் (கோ-ஆக்சியல் கேபிள்)*

11. கம்பியில்லாத் தகவல் முறையை எவ்வாறு அழைப்பர்?
*நுண்ணலைத் தகவல் தொடர்பு.*

12. செயற்கைக்கோள் மூலமான தகவல் பரிமாற்றம் எவ்வாண்டு ஏற்பட்டது?
1957.

13. தகவல் தொடர்பின் இன்றைய புரட்சி யாது?
*டிஜிற்றல்தகவல் தொடர்ப.*

14. பேச்சு அலைகளைச் சங்கேதக் குறியீடுகளாக மாற்றிக் கம்பிகளில் அனுப்பிவைக்கும் தொழில்நுட்பம் யாது?
*பிசிஎம்.*

15. நவீன தொலைத் தொடர்பின் புதுமைகள் பின்வருவன:
   1. *பேஜிங் - வயர்லெஸ் அடிப்படையில் செயற்படும் ஒருவழித் தொலைத் தொடர்பு சாதனம். சே விரும்புபவரின் தொலைபேசி இலக்கம் பேஜிங் கருவியில் பதியும். வேறொரு தொலைபேசி மூலம் தொடர்பை ஏற்படுத்திக் கௌ்ளலாம்.*
   2. *இ-மெயில் - இரண்டு கம்பியூட்டர்கள் மூலம் தகவல் பரிமாறிக்கொள்ளல்.*
   3. *மோபைல் செலுலர் தொலைபேசி - எங்கிருந்தாலும் எங்கு நடமாடிக்கொண்டிருந்தாலும் தகவல் பரிமாறிக்கொள்ள உதவும் கருவி.*
   4. *வீடியோ தொலைபேசி - கம்பியூட்டர் திரையில் அழைத்தவரின் உருவம் தெரியத் தொலைபேசியில் உரையாடல்.*
   5. *வீடியோ மாநாடு - தொடர்பாடலில் கலந்துகொள்வோரின் உருவங்களும் குரல்களும் வீடியோ மூலம் தொலைக்காட்சிப் பெட்டிகளில் தெரிதல், ஒலித்தல்.*
   6. *வாய்ஸ் மெயில் - தொலைபேசியில் தெரிவிக்கும் தகவல் ஒரு பதிகருவியில் பதிவாகியிருக்கும். வேண்டியபோது தகவலை அறிந்துகொள்ளலாம்.*
   7. *இன்டர் நெட் - உலகத்தினை ஒரு அறைக்குள் கொண்டுவந்திருக்கும் தொழில்நுட்பம். அமெரிக்காவின் ஒரு*

*நூலகத்தினை இன்டர்நெற் மூலம் தன் அறைக்குள் கொண்டுவந்து விடலாம். உலகின் அனைத்துத் தகவல்களையும் இன்டர்நெற் இணைப்புள்ள கம்பியூட்டர் மூலம் அறிந்துகொள்ள முடியும். உலகின் எந்த மூலையில் நடக்கும் செய்தியையும் ஒரு நிமிடத்தில் இன்டநெற் மூலம் உலகெங்கும் தெரிவித்துவிட முடியம்.*

16. கணிப்பொறிகளின் முன்னோடிகள் யாவர்?
*பாஸ்கல், பாபேஜ், லைப்னீஸ்.*

17. கம்பியூட்டரின் தந்தை யார்?
*பாபேஜ்.*

18. 1946 இல் முதலாவது மின்னணுக்கணிப்பொறியைக் கண்டுபிடித்தவர் யார்?
*மௌஸ்லியாஸ்.*

19. இன்றைய கம்பியூட்டர்கள் எத்தலைமுறையைச் சேர்ந்தவை?
*ஐந்தாம் தலைமுறையச் சேர்ந்தவை.*

20. கம்பியூட்டர்களில் வன்பொருட்கள் மென்பொருட்கள் என்பன யாவை?
*கீபோர்ட், மொனிற்றர், மதர்போர்ட், கபினெற், பிறின்டர், டிஸ்க்ஸ் என்பன வன்பொருட்கள். கம்பியூட்டரின் தட்டுகள், நாடாக்கள், என்பவற்றில் பதிவு செய்யப்பட்டிருப்பவை மென்பொருட்கள் எனப்படும்.*

21. 1962 இல் முதன்முதல் அமெரிக்க பெல் நிறுவனத்தினால் தகவல் தொடர்பிற்காக விணணில் நிறுவப்பட்ட செயற்கைக்கோள் எது?
*டெல் ஸ்ரார்.*

22. சின்காம், ஏர்லிபேர்ட், இன்டெல்சாட் என்பன யாவை?
*தகவல் பரிமாற்றத்திற்காக விண்ணில் பவனிவரும் செயற்கைக்கோள்கள்.*

23. அரபு நாடுகளின் தொலைத் தொடர்புச் செயற்கைக்கோள் யாது? இந்தியாவின் செயற்கைக்கோள் யாது?
*அராப்சாட், இன்சாட்.*

## பொது அறிவு

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகள் ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளன. சரியான விடைக்குரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் எழுதுக.

1. ஆபிரிக்கக் கலகாரியில் வாழும் ஆதிக் குடிமக்களை எவ்வாறு அழைப்பர்? ☐
2. பிக்மீஸ் மக்கள் எங்குள்ளனர்? ☐
3. மேற்கு இந்தியப்பகுதிச் சூறாவளியை எவ்வாறு அழைப்பர்? ☐
4. மத்தியதரைக் கடலிலிருந்து அல்ப்ஸ் மலையைக் கடந்து வீசுங்காற்றின் பெயர் யாது? ☐
5. தென்கொரியாவின் தலைநகர் யாது? ☐
6. கன்பரோ எந்த நாட்டின் தலைநகர்? ☐
7. உலகின் மிகப்பெரிய விலங்கு எது? ☐
8. உலகின் மிகப்பெரிய காடு எது? ☐
9. உலகின் ஊனமுற்றோர் தினம் யாது? ☐
10. பூமி தினம் யாது? ☐
11. காலிபர் (Calibar) என்பது யாது? ☐
12. காரட் (Carat) என்பது யாது? ☐
13. வெள்ளிவிழா எத்தனை ஆண்டுகள்? ☐
14. வைரவிழா எத்தனை ஆண்டுகள்? ☐
15. பொற்கதவு நகரம் என்பது யாது? ☐
16. நைலின் கொடை எது? ☐
17. 'மேஷம்' இராசியின் அடையாளம் யாது? ☐
18. 'தனு' இராசியின் அடையாளம் யாது? ☐
19. ஒன்றாகவிருந்த மூன்று கண்டங்களை இரண்டாக்கிய கால்வாய் எது? ☐
20. புதிய கண்டங்களைத் துண்டித்த கால்வாய் யாது? ☐

| | | |
|---|---|---|
| 1. சான்பிரான்சிஸ்கோ | 2. தைக்கா | 3. 25 வருடங்கள் |
| 4. ஹரிக்கேன் | 5. ஜனவரி 20 | 6. அவுஸ்திரேலியா |
| 7. 60 வருடங்கள் | 8. சுயெஸ் | 9. எகிப்து |
| 10. ஏப்பிரல் 22 | 11. புஸ்மன்கள் | 12. பனாமா |
| 13. சியோஸ் | 14. செம்மறிக்கடா | 15. நீலத்திமிங்கிலம் |
| 16. தங்கத்தரஅளவு | 17. போன் | 18. வில் |
| 19. கொங்கோ | 20. துப்பாக்கிக் குழலின் ஆரம் | |

# gk-7 பலதும் பத்தும் - 3

1. "SAARC" என்றால் என்ன?
*தென்னாசிய நாடுகளின் பிராந்திய ஒற்றுமையினை 'South Asian Association for Regional Corporation' என்பர். 1979 அம் ஆண்டு வங்காள தெசத்தின் ஜனாதிபதி அப்துல் ரஹ்மானின் இலங்கை விஜயத்தின்போது சார்க் பற்றிய கரு உதயமாகியது. இந்தியா, பாகிஸ்தான், வங்காள தேசம், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய ஏழு நாடுகள் இதில் உள்ளன. முதலாவது சார்க் மநாடு டாக்கா (வங்காளதேசம்) 1985 இல் நிகழ்ந்தது. ஆறாவது மநாடு 1991 இல் கொழும்பில் நடைபெற்றது. பத்தாவது மாநாடும் 1996 இல் கொழும்பிலேயே நிகழ்ந்தது. 2002 இல் பதினோராவது மாநாடு கத்மண்டுவில் (பூட்டான்) நிகழ்ந்தது.*

2. G7 நாடுகள் எவை?
*உலகின் செல்வந்த கைத்தொழில் நாடுகள் Group 7 என்பர். அமெரிக்கா, கனடா, யப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஐக்கிய இராச்சியம் என்பன அவையாம். G7 நாடுகளின் முதலாவது மாநாடு பாரிசில் நடந்தேறியது.*

3. இராணுவ பதவியணி ஒழுங்கு யாது?
*ஜெனரல், லெப்ரினன்ட் ஜெனரல், மேஜர் ஜெனரல், பிரிகேடியர், கேணல், லெப்ரினன்ட் கேணல், மேஜர், கப்ரின், லெப்ரினன்ட், செக்கண்ட் லெப்ரினன்ட்.*

4. இருபதாம் நூற்றாண்டில் சிறிதாயினும் இருபத்தொராம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் நிகழ்ந்த முக்கியமான யுத்தங்கள் யாவை?
   1. *இஸ்ரேல் - அராபிய யுத்தம் (1967) - ஆறுநாள் யுத்தம். எகிப்தின் தலைமையில் சிரியா, ஜோர்டான் தொல்வி கண்டன. இஸ்ரேல் வெற்றி பெற்றது.*

௨. வளைகுடா யுத்தம் *I* - அமெரிக்கத் துருப்புகள் குவைத்திலிருந்து ஈராக் துருப்புக்களை அகற்றுவதற்காகப் போரிட்டன. ஈராக் தோல்வி கண்டது.

௩. அமெரிக்கா - ஆப்கானிஸ்தான் யுத்தம் - தலிபன் ஆட்சியை ஆப்கானிஸ்தானிலிருந்து அகற்றுவதற் காக ௨00௧ இல் நிகழ்ந்தது. அமெரிக்காவில் செப்டெம்பர் ௧௧இல் வர்த்தக இரட்டைக்கோபுரங்களின் தாக்குதலின் எதிரொலியாக ஆப்கானிஸ்தான் கைப்பற்றப்பட்டது.

௪. வளைகுடா யுத்தம் *II* - ௨00௩ இல் சதாம் ஹுசைனின் ஈராக்கிய ஆட்சிக்கு எதிராக அமெரிக்காவும் நேசப்படைகளும் நடாத்திவரும் யுத்தம். ஈராக் கைப்பற்றப்பட்டுள்ளது.

5. உலகின் அரசியலை மாற்றியமைத்த புரட்சிகள் எவை?

௧. பிரான்சியப் புரட்சி (௧௭௮0 - ௯௩).
௨. ருசியப் புரட்சி (௧௯௧௭ - ௧௯௨௨).
௩. சீனப் புரட்சி (௧௯௧௧ - ௧௯௨௧).

6. புலிஸ்ரர் பரிசு (Puliztor Prize) என்றால் என்ன?

ஜோசெப் புலிஸ்ரர் (௧௮௪௭ - ௧௯௧௧) என்ற அமெரிக்க நூல் வெளியீட்டாளர் இதழியல், இலக்கிம், சங்கீதம் ஆகிய துறைகளுக்காக ஏற்படுத்திய பரிசு.

7. மக்சேசே பரிசு (Magsaysay Prize) என்றால் என்ன?

பிலிப்பைன் நாட்டின் ஜனாதிபதி ராமொன் மக்சேசே, ௧௯௫௭ இல் ஏற்படுத்திய பரிசுத்திட்டம். பொதுச்சேவை, சமூகத் தகைமைத்துவம், இதழியல், இலக்கிம், ஓவியம் என்பன வற்றிற்காக வழங்கப்படுவது. ௧௯௬௭ இல் சத்தியஜித்ரே, ௧௯௮௪ இல் *R. L.* லக்ஸ்மன் ஆகியோர் இப்பரிசைப் பெற்றுள்ளனர்.

8. புக்கர் பரிசு (Booker Prize) என்பது யாது?

௧௯௬௮ இலிருந்து புக்கர் கம்பனி (ஐ.இ) இப்பரிசினை உயர்ந்த இலக்கிய நூலிற்கு வழங்கிவருகிறது. இதன் பெறுமதி ௨0000 டொலர். *The English Patient* என்ற நாவலுக்காக இலங்கையில் பிறந்து கனடாவில் வாழும் மைக்கல் ஒண்டாரிஜி என்பர் ௧௯௯௨ இல் இப்பரிசினைப் பெற்றுள்ளார். *The God of Small things* என்ற பிரச்சினைக்குரிய நாவலுக்காக அருந்ததிரோய் ௧௯௯௭ இல் இப்பரிசினைச் சுவீகரித்தார். ௨00௩ ஆம் ஆண்டு *VemonGod Little* என்ற நாவலிற்காக *DBC. Pierre* என்பார் பெற்றார்.


## மனிதரில் மூதாதையர்

புமியில் மனிதன் தோன்றி 50 ஆயிரம் ஆண்டு காலமேயாகின்றது. மானிடவியலாளர்கள் உலகின் பலபாகங்களிலும் அகழ்ந்தெடுத்த மண்டையோடுகளை நுணுக்கமாக ஆராய்ந்து இன்றைய மனிதரின் மூதாதையர் யாவரென ஓரளவு நிரைப்படுத்தியுள்ளனர்.

அவ்வகையில் இன்றைய நவீன மனிதனின் முதாதையாக வானர மனிதன் அல்லது ஏப் (Ape) மனிதன் என அழைக்கப்படும் அஸ்ரலோபித்தி கஸ் (Australopithecus) என்பானுள்ளான். இந்த ஏப் மனிதன் உண்மையில் ஒரு வாலில்லாக் குரங்கு ஆவான். அகன்ற பின்னோக்கிச் சரிந்த நெற்றி, சிறிய மூளை, முற்றாக நிமிர்ந்து நிற்க முடியாத உடலமைப்பு, பெரிய பற்கள், உடல் மூடிய மயிர், கூனல் நடை என்பன ஏப் மனிதன் உடலமைப்பாகும்.

நவீன மனிதனுக்கு மிக நெருங்கிய இனமாக விஞ்ஞானிகளால் கணிக்கப்பட்டிருக்கும் இனம் ஹோமோ இராக்டஸ் மனிதனாவான். இவன் இரு கால்களில் நிமிர்ந்து கூனலுடன் நடந்துள்ளான். அஸ்ரலோபித்திகஸ் மனிதனிலும் பார்க்க மூளை சற்றுப் பெரிது. இத்தகைய அமைப்பைக் கொண்ட மனித எலும்புக்கூடுகள் ஜாவா (ஜாவா மனிதன்), பீக்கிங் (பீக்கிங் மனிதன்), ரொடீசியா (ரொடீசிய மனிதன்) முதலான இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நவீன மனிதன் மூதாதையாக நியான்டதல் மனிதன் (Neandarthal Man) கருதப்படுகின்றான். இவனுடைய எலும்புக்கூடு ஜேர்மனியில் டசல்டோர்ஃப் நகரத்திற்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.



இவன் தோற்றத்தில் கற்கால மனிதனை ஒத்திருந்தான். இவன் கை, கால்கள் கட்டையாகவும், உடல் நீண்டும் காணப்பட்டது. நவீன மனிதனைப் போல நடக்க முடிந்த போதிலும் சற்றுக் கூனலுடன்கூடிய நடையைப் பெற்றிருந்தான்.

நவீன மனிதனின் நேரடி மூதாதை ஹோமோ சபியன்ஸ் ஆவான். ஹோமோ சபியன்ஸ் என்றால் வேகமுள்ள அல்லது வளர்ச்சி பெற்ற மூளையுடைய மனிதன் என்று அர்த்தம். பிரான்சில் குரோமக்னன் என்ற இடத்தில் ஹோமோ சபியன்ஸ் மனிதனின் எலும்புக்கூடு கிடைத்தது. தட்டையான பாதங்கள், உடம்பின் உயரத்திற்கும் பருமனுக்கும் பொருந்தும் கரங்கள், நேரான முதுகெலும்பு, தட்டையான மார்பு, சிறிய மண்டையோடு, தடிப்பும் குறைவு, உருண்டையான தலை, அகன்ற நெற்றி, சிறிய பற்கள் - இவை இவனது அங்கலட்சணங்கள். ஹோமோ சபியன்ஸ் மக்களே படிப்படியாக உலகம் முழுவதும் பரவினர். நவீன மனிதர்கள் இவர்களிலிருந்து உருவாகினர்.

9. ஒஸ்கார் விருது (Oscar Awards) எதற்காக வழங்கப்படுகிறது?
*1929 இலிருந்து சிறந்த திரைப்படம், கலை, விஞ்ஞானம் என்பவற்றிற்காக வழங்கப்பட்டு வருகிறது. மதர் இந்தியா, காந்தி என்பன ஒஸ்கார் விருது பெற்ற இந்திய சினிமாக்கள். சத்தியஜித்ரே ஒஸ்கார் விருது பெற்ற இயக்குனர் (1992)இ பென்ஹர் (1959), ரைற்றானிக் (1997), காந்தி (1982) என்பன ஒஸ்கார் விருது பெற்ற சில சினிமாக்கள்.*

10. உதைபந்தாட்ட உலகக் கிண்ணப் போட்டியில் 2002 அம் ஆண்டு வெற்றிகொண்ட நாடு எது?
*பிறேசில். ஜேர்மனியை வெற்றிகொண்டது பிறேசில் 1958, 1962, 1970, 1994 ஆகிய ஆண்டுகளிலும் உலகக் கிண்ணத்தைத் தனதாக்கியிருந்தது. ஜேர்மனி 1954, 1974, 1990 ஆகிய மூன்றாண்டுகள் சுவீகரித்துக்கொண்டது.*

11. உலகக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி கடைசியாக எங்கு நடந்தது?
*2003. ஜொகனஸ்பேர்க் (தெ. ஆபிரிக்கா). இந்தியாவை அவுஸ்திரேலியா வென்றது. 1995 இல் லாகூரில் (பாகிஸ்தான்) நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலியாவை இலங்கை வெற்றி கொண்டது.*

12. உலகின் முக்கியமான விமான சேவைகளினை நடாத்தும் நாடுகளும் அவற்றின் சுருக்கப் பெயர்களும் A, B நிரல்களில் தரப்பட்டுள்ளன. சரியாக ஒழுங்குபடுத்துக.

| | *A* | | *B* |
|---|---|---|---|
| 1. | இலங்கை | *a)* | *AF* |
| 2. | ஐக்கிய இராச்சியம் | *b)* | *CPA* |
| 3. | ஐக்கிய அமெரிக்கா | *c)* | *QANTAS* |
| 4. | சிங்கப்பூர் | *d)* | *AL* |
| 5. | பாகிஸ்தான் | *e)* | *JAL* |
| 6. | யப்பான் | *f)* | *PIA* |
| 7. | இந்தியா | *g)* | *SIA* |
| 8. | அவுஸ்திரேலியா | *h)* | *PAN AM* |
| 9. | ஹொங்கொங் | *i)* | *BA* |
| 10. | பிரான்ஸ் | *j)* | *AL* |

விடை ஒழுங்கு: *j, i, h, g, f, e, d, c, b, a.*

13. SAF விளையாட்டுக்கள் என்றால் என்ன?
*South Asian Federation Games.* சார்க் திட்டத்தின் ஒரு பகுதி தென்னாசிய ஒன்றிய விளையாட்டுப் போட்டியாகும். 1984 இல் காத்மண்டுவில் (நேபாளம்) ஆரம்பிக்கப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம், நேபாளம், பூட்டான், மாலைதீவுகள் பங்குகொள்ளும் நாடுகளாகும். 1991 இல் கொழும்பில் *SAF* விளையாட்டுப் போட்டிகள் நடந்தன.

14. பின்வரும் வார்த்தைகள் உபயோகிக்கப்படும் விளையாட்டினைக் குறிப்பிடுக: Ashes, Cover Point, Dolly Catch, Duck, Hat Trick, Maiden over, Off spin.
*கிரிக்கெட்.*

15. பின்வரும் வார்த்தைகள் எந்த விளையாட்டில் பயன்படுத்தப் படுகின்றன? Back, Corner kick, Drible, Session kick.
*உதைபந்தாட்டம்.*

16. பின்வரும் வார்த்தைகள் பயன்படுத்தப்படும் விளையாட்டு யாது? Ace, Baseline, Fault, Set, Vimbledon.
*ரெனிஸ்.*

17. A நிரலிலுள்ளவற்றினை B நிரலிலுள்ளவற்றுடன் ஒழுங்குபடுத்தி இணைக்குக.

| | *A* | | *B* |
|---|---|---|---|
| *1)* | *Davis Cup* | *a)* | *கிரிக்கெட்* |
| *2)* | *Wimbledon Trophy* | *b)* | *உதைபந்தாட்டம்* |
| *3)* | *World Cup* | *c)* | *பாட்மின்ரன்* |
| *4)* | *Colombo Cup* | *d)* | *ரென்னிஸ்* |
| *5)* | *Thomas Cup* | *e)* | *Court* |
| *6)* | *பாட்மின்ரன்* | *f)* | *ரென்னிஸ்* |
| *7* | *கிரிக்கெட்* | *g)* | *Pitch* |
| *8)* | *மல்யுத்தம்* | *h)* | *Arena* |

விடை ஒழுங்கு: *e, e, a, b, c, e, f, g*

18. மகாத்மா காந்தி (1948), சொலமன் பண்டாரநாயக்கா (1959), மார்டின் லூதர் கிங் (1968), சிய. உ. ரஹ்மான் (1981), இந்திரா காந்தி (1984), ராஜிவ் காந்தி (1991), ரணசிங்க பிரேமதாச (1993) ஆகியோருக்கிடையிலான ஒற்றுமை யாது?
*அனைவரும் கொலையாளிகளால் கொல்லப்பட்டவர்கள்.*

19. பின்வருவோர் ஏதோ ஒரு வகையில், ஒரு தகுதியில் முதல்வர்.

1. *யூரி ககாரின் - (1961)*
   *- முதலாவது விண்வெளி வீரர்.*
2. *அல்டின் ஆம்ஸ்ரோங் - (1969)*
   *- சந்திரனில் முதன்முதல் காலடி பதித்தவர்.*
3. *வலன்ரீனா - (1963)*
   *- முதலாவது விண்வெளி வீராங்கனை.*
4. *ஜோர்ஜ் வாஷிங்டன்*
   *- முதலாவது அமெரிக்க ஜனாதிபதி.*
5. *ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க*
   *- முதலாவது பெண் பிரதமர்.*
6. *மார்க்கிரட் தட்சர்*
   *- முாலாவது பிரித்தானியப் பெண் பிரதமர்.*

20. பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு என்றால் என்ன?
*ஆரம்பத்தில் பிரித்தானிய சாம்ராச்சிய விளையாட்டு எனப்பட்டது. ஒலிம்பிக் போட்டிக்கு இடைப்பட்ட காலத்தில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்ந்து வருகிறது. 1930 இல் கனடாவில் ஹம்பில்டன் நகரில் பொதுநலவாய நாடுகளின் போட்டி முழுமையாக நடைபெற்றது. 1998 இல் கோலலம்பூரிலும் (மலேசியா), 2002 இல் மஞ்செஸ்ரர் (ஐ.இ) நடைபெற்று முடிந்தது.*

## பொது அறிவு

பின்வரும் வாக்கியங்களை அவதானித்து அவை உண்மையா (T) பொய்யா (F) எனக் கண்டு தரப்பட்ட கூட்டினுள் × இடுக.


| | T | F |
|---|---|---|
| 1. பொக்குளிப்பான பரவக்கூடிய நோய் ஆகும். | ☐ | ☐ |
| 2. பலவீனமான இருதயத்தை எடுத்துவிட்டு ஆரோக்கியமான இருதயத்தைப் பொருத்துதல் இருதய மாற்ற சிகிச்சையாகும். | ☐ | ☐ |
| 3. முகத்தோற்றத்தை மாற்றியமைக்க பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை உதவும். | ☐ | ☐ |
| 4. காச நோயை (TB)க் கட்டுப்படுத்த ஒழுங்கான நீண்டகாலச் சிகிச்சை முறை தேவை. | ☐ | ☐ |
| 5. ஆடவருக்கான கருத்தடை சிகிச்சைக்கு நீண்ட நேரம் எடுக்கும். | ☐ | ☐ |
| 6. X கதிர்கள் என்புகளை ஊடுருவிச் செல்லா. | ☐ | ☐ |
| 7. சுதந்திரத்திற்கு முன்னரிலும் பார்க்க இப்பொழுது மலேரியாவால் அதிகமானோர் மரணமடைகின்றனர். | ☐ | ☐ |
| 8. நிமோனியாக்காய்ச்சலை ஈக்களே பரப்புகின்றன. | ☐ | ☐ |
| 9. காலராவுக்கு நுளம்புகளே காரணமாகின்றன. | ☐ | ☐ |
| 10. பென்சிலினைக் கண்டுபிடித்தவர் ஜென்னர் ஆவார். | ☐ | ☐ |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 - T | 2 - F | 3 - T | 4 - T | 5 - F |
| 6 - T | 7 - F | 8 - F | 9 - F | 10 - T |

21. உலகில் புகழ்பூத்த சில நூல்களும் ஆசிரியர்களும் வருமாறு:

| | |
|---|---|
| *The war of the Worlds* | - எச். ஜி. வெல்ஸ். |
| *Ulysse* | - ஜேம்ஸ் ஜொய்ஸ். |
| *Twenty years after* | - அலெக்சாண்டர் டூமாஸ். |
| *Satamic Verses* | - சாலமன் ருஸ்டி. |
| *Principia* | - ஐசாக் நியூட்டன். |
| *Importance of Being Earnest* | - ஒஸ்காவைல்ட். |
| *Lajja* | - தஸ்லிமா நஸ்றீன் |

## மாமதம்




ஆக்டிக் பனிக்கட்டிக்குள் புதையுண்டு அழியாது கிடந்த 44000 ஆண்டுகளுக்கு முன் பூமியில் வாழ்ந்த மாமதம் (Mammoth) என்ற கம்பளி யானையின் உயிர்ச்சுவடு ஒன்றினை 1979 அம் ஆண்டு சைபீரியாவில் கண்டுபிடித்தனர். கடும் குளிர்ப்பிரதேசத்தில் வாழ்ந்ததால் இந்த யானைகள் உடல் முழுவதும் கம்பளி மயிரைக் கொண்டிருந்தன. நீண்ட வளைந்த தந்தங்களையும் கொண்டிருந்தன. ஆக்டிக் பிரதேசத்தில் பனிக்கட்டிக்குள் புதையுண்டு கிடந்த மாமதங்கள் பலவற்றின் உடல்கள் சைபீரிய சுதேசிகளால் கண்டெடுக்கப்பட்டன. தந்தங்கள் விற்கப்பட்டன. அவற்றின் உடல் இறைச்சி நாய்களுக்கு இரையாகியது. சைபீரிய பனிக்கட்டிகளிடையே இதுவரை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மாமதங்களும் பலநூறு எழும்புகளும் கிடைத்துள்ளன. 1901 ஆண்டு சென் பீற்றஸ்பேக் விஞ்ஞானக் கழகத்தினால் வடசைபீரியாவில் கிடைத்த ஒரு மாமதத்தின் உடல் 'காபன்டேற்றிங்' செய்யப்பட்டபோது அது 44000 ஆண்டுகளுக்குமுன் இறந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தைமூர் குடாநாட்டில் கண்டெடுக்கப்பட்ட இன்னொரு மாமதம் 12000 ஆண்டுகளுக்கு முன் இறந்திருந்தது.

22. ஜுட் பென்ஹர் என்ற பாத்திரத்தை அற்புதமான நாலவாக Lew Wallace என்பவர் படைத்துள்ளார். அந்த நாவலின் பெயர் யாது?
*பென்ஹர்.*

23. 'கீதாஞ்சலி' என்ற கவிதைத் தொகுதிக்காக இலக்கியத்துக்கான நோபல் பரிசினை 1913 இல் பெற்ற இந்தியக் கவிஞர் யார்?
*ரவீந்திரநாத் தாகூர்.*

## பிரமிட்டுக்கள்



எகிப்திய நைல் நதிக் கரையோர நாகரிகத்தின் எச்சமாகவும், உலகின் ஏழு அதிசயங்களில் இன்று நாம் காணக்கூடிய ஒரேயொரு உலகஅதிசயமாகவும் விளங்கி வருவது பிரமிட்டுக்களாகும். எகிப்திய மன்னர்களின் பிரமாண்டமான கல்லறைகளே பிரமிட்டுக்களாகும். லிபியன் பாலைவனத்தின் எல்லைப் பிரதேசமான கீசா என்னும் இடத்தில் மிக முக்கியமான மூன்று பிரமிட்டுக்கள் உள்ளன. அவை சதுரவடிவமான அடித்தளத்தில் நான்கு பக்கங்களும் முக்கோணங்களாகி உச்சியில் ஒன்றுசேரும் வடிவின.

கீசாவில், கி. மு. 2900 ஆண்டில் வாழ்ந்த கூபூ என்னும் எகிப்திய மன்னனால் கட்டப்பட்ட மிகப்பெரிய பிரமிட் ஒன்றுள்ளது. இந்தப் பிரமிட்டின் அடித்தளம் 13 ஏக்கர் பரப்புடையது. உச்சி தரையிலிருந்து 541 அடி உயரத்திலுள்ளது. இந்தப் பிரமிட்டை அமைக்க 23,00,000 கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கல்லும் 2½ தொன் எடையுடையது. பிரமிட்டின் உச்சியில் 36 அடிச் சதுரமுள்ள தட்டையான தளம் உள்ளது.

பிரமிட்டினுள்ளே மத்தியில் மன்னனதும், அரசியினதும் கல்லறைகளுள்ளன. அவற்றிற்குப் போகும் வழி குறுகியது. அங்கு

24. எந்த இரு நாவல்களுக்காக இஸ்லாமிய உயர்பீடம் இரு கதாசிரியருக்கு மரண தண்டனை விதித்தது? எழுதியவர்கள் யார்?
*Satanic Verses* - *சல்மன் ருஸ்டி.*
*Lajja (Shame)* - *தஸ்லிமா நஸ்றீன்.*

25. உலகில் அதிக மக்கள் பேசும் மொழி எது?
*சீனம்.*

26. இந்திய மொழிகளில் மிகவும் பழைமையானது எது?
*தமிழ்.*

27. ஆங்கில நாடகாசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் முக்கிய நாடகப் பனுவல்கள் சிலவற்றினைக் கூறுக.
   க. *அந்தொனியும் கிளியோபப்பட்ராவும்.*
   உ. *As you like it.*
   ௩. *King Lear.*
   ௪. *யூலிய சீஸர்.*
   ரு. *மக்பெத்.*

அரசனதும் அரசியினதும் மம்மிகள் பதப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. பண்டைய எகிப்தியர் மனிதன் இறந்தாலும் அவனுடைய ஆன்மா அவனது உடலை நாடிவரும் என்று நம்பினர். அதனால் அவர்கள் மன்னரின் உடலை அழிக்காமல் மருந்தூட்டிப் பாதுகாத்து வைத்தனர். அவையே மம்மிகள் எனப்டுகின்றன. இறந்த அரசனதும் அரசியினதும் உடல்களை மம்மிகளாக்கி உடை, உணவு, நகை முதலான பல பொருள்களையும் சேர்த்துப் பிரமிட்டுக்களின் மத்தியில் வைத்துள்ளனர்.

எகிப்தில் இன்று 75 பிரமிட்டுக்கள் வரையிலுள்ளன. அக்கால மக்கள் இவ்வளவு பிரமாண்டமான கல்லறைகளை எப்படிக் கட்டினர் என்று வியக்க வேண்டியுள்ளது. பெரிய பிரமிட்டைக் கட்ட ஒரு இலட்சம் மக்கள் 20 ஆண்டுகள் வரை வேலைசெய்திருக்க வேண்டுமென கிரேக்க வரலாற்றாசிரியரான ஹிராட்டஸ் கூறியுள்ளார்.

பிரமிட் கல்லறைகளுள் புதையுண்டிருக்கும் திரவியங்களைக் கொள்ளையடிப்பதற்காகப் பிரமிட்டுகள் சிதைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரமிட்டுக்கள் விளக்க முடியாத சில குறிப்பிட்ட சக்திகளைப் பெற்றிருப்பதாக விபரிக்கப்படுகின்றது. பிரமிட்டின் அமைப்பு அதனுள் இருக்கும் எப்பொருளையும் அழுகவோ துருப்பிடிக்கவோ விடாது என நிரூபித்துள்ளனர்.

28. ஜோர்ஜ் பேனார்ட்ஷாவின் நாடகங்கள் சிலவற்றினைத் தருக.

*1. Androles and the lion.*
*2. Arms and the man.*
*3. Birth and death of the sun.*
*4. Caesar and Celeopatra.*
*5. Candida*
*6. Doctors' Dilemma.*

29. 'Animal Farm' என்ற குறியீட்டு நாவலின் ஆசிரியர் யார்?
*George Owell.*

30. கார்ல்மாக்ஸின் புகழ்பூத்த நாவலெது?
*Das Kapital.*

31. A Farewell to Arms, For whom the bells toll, The old man and the sea முதலான உலகப் புகழ் பெற்ற நாவல்களின் ஆசிரியர் யார்?
*ஏர்னெஸ்ட் ஹெமிங்வே.*

32. அக்குபஞ்சர் (Acupancture) என்பது யாது?
*அது சீன மருத்துவம் ஒன்று. நுண்ணிய ஊசிகளை மனித உடலின் குறித்த சில மையங்களில் ஏற்றுவதன் மூலம் நோயைக் குணப்படுத்தும் முறையாகும்.*


33. ஹோமியோபதி (Homoeopathy) என்பது யாது?
*சிகிச்சை முறைகளில் ஒன்று. ஆயுள்வேதம், சித்தம், யுனானி போல ஹோமியோபதி முறையும் ஒன்று. ஜேர்மனியரான சாமுவேல் ஹக்னிமன் இதனை உருவாக்கினார்.*

34. உலகின் மிகப்பெரிய இயற்கையமைப்புக்களைக் கூறுக.

1. *மலைச்சிகரம்*
   *- எவரெஸ்ட் (இமயமலை) 8848 மீ.*
2. *நதி*
   *- அமேசன்*
3. *சமுத்திரம்*
   *- பசுபிக். (165760000 சதுர.க.மீ)*
4. *சமுத்திரஆழி*
   *- மிண்டானோ - (10918மீ)*
5. *ஏரி*
   *- கஸ்பியன்கடல் (394299 சதுர.கி.மீ)*

6. நீர்வீழ்ச்சி
- ஏஞ்சல் - 1000 மீ.
7. தீவு
- கிறீன்லாந்து (2175597 சதுர.கி.மீ)
8. பாலைவனம்
- சகாரா(ஆபிரிக்கா) 3500000 ச.கிமீ.

## சுதந்திரச் சிலை



அமெரிக்க நுழைவாயிலில் நியூ யோர்க்கிலுள்ள சுதந்திரச் சிலை மிகப் பிரமாண்டமானது. சுதந்திரப்பெண் ணொருத்தி கையில் தீப்பந்தமேந்திய நிலையில் நிற்பதாக இச்சிலை வடி வமைக்கப்பட்டுள்ளது. 1884 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு மக்களால் இச்சிலை அமெரிக்காவுக்கு பரிசாக வழங்கப்பட்டது. பிரெட்ரிக் ஏகஸ்டி பார்த் ஓல்டி என்ற பிரெஞ்சுச் சிற்பி இச்சிலைக் கான வடிவமைப்பினைச் செய்தார். வருடந் தோறும் 21 மில்லியன் மக்கள் இச்சிலை யைக் காணவருகின்றனர். கையில் ஒளி வீசும் பந்தம், தலையில் ஏழு கடல்களையும், ஏழு கண்டங்களையும் குறிக்கும் ஏழு முட்களைக் கொண்ட கிரீடம். இடது கரத்தில் ஒரு பட்டயம். அதில் அமெரிக்க சுதந்திரதினத்தைக் குறிக்கும் ‘யூலை .04.1776’ என பதிவிடப்பட்டுள் ளது. 5 ஹெக்டேயர் பரப்பி னைக்கொண்ட சுதந்திரத் தீவில் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சிலையின் 47 மீற்றர் உயரமான அடிப்பீடம் றிச்சார்ட் மொறிஸ் ஹன்ற் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. இச்சுதந்திரச் சிலை 46 மீற்றர் உயரமானது. இதன் நிறை 204 தொன்கள். 300 செப்புத் தகடுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு இச்சிலை ஆக்கப்பட்டது. சிலையின் செப்பு மேலுறைக்கான வடிவமைப்பு ஈபிள் கோபுரத்தை ஆக்கிய சிற்பி, அலெக் சாண்டர் குஸ்ரோவ் ஈபிள் என்பவரால் ஆக்கப்பட்டது. தீப்பந்தமானது அடித்தளத்திலிருந்து 93 மிற்றர் உயரத்திலுள்ளது. 16 சக்தி விளக்குகள் ஒளியைத் தீப்பந்தத்திலிருந்து உமிழ்கின்றன.

35. கொலம்பியா விண்வெளிக் கப்பல் குறித்துக் கூறுக.
*கொலம்பியா கப்பல், விண்வெளிக்கு செய்மதிகளையும் றொக்கட்டுக்களையும் காவிச் சென்று ஏவிவிட்டுத் திரும்பவும் பூமிக்கு மீளும விண்வெளிக் கப்பலாகும். 18 தடவைகள் ஒலியிலும் கூடிய வேகத்தில் 207000 அடி உயரத்தில் பறந்து செயற்பட்டுச் சாதனை படைத்துள்ளது. 2003 ஜனவரி 16 ஆம் திகதி ஏழு விண்வெளி வீரர்களுடன் விண்ணில் பயணப்பட்ட கொலம்பியாவின் வெளிக்கப்பல் பெப்ரவரி 1 அம் திகதி நிலைகுலைந்து விண்ணில் சிதைந்து அழிந்து போனது. அதில் ஏழுபேரில் ஒருவராகப் பயணம் செய்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சௌவ்லாவும் மரணத்தைத் தழுவிக்கொண்டார்.*

36. ஹலி வால் நட்சத்திரம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருதடவை விண்ணில் தோன்றும்?
*76 ஆண்டுகளுக்கு ஒருதடவை.*

37. யப்பானிய தேசிய உடை யாது?
*கிமோனோ (Kimono)*

38. உலகின் மிகவுயர்ந்த எரிமலையான எட்னா ஐரோப்பாவில் எங்கு அமைந்துள்ளது?
*சிசிலி தீவில்.*

39. 'ஸ்கொடா' (Skoda) என்பது யாது?
*இது ஒரு கார் கம்பனி. எழுத்தாளர் தேவன் - யாழ்ப்பாணம் அக்காலத்தில் ஸ்கொடா கார் ஒன்றினை வைத்திருந்த மையால் அவரை ஸ்கொடா மாஸ்டர் என்போம்.*

40. மைக்கேல் ஜாக்சனின் புகழ்பெற்ற பாடல் ஒன்று?
*I'm bad, I'm bad.*

41. உலகின் மிகப் பழைமையான கட்டமைப்பு யாது?
*எகிப்திய பிரமிட்.*

42. செலுலர் போனின் (Cellular Phone) தந்தை யார்?
*மார்டின் கூப்பர்.*

43. ஒட்டகங்கள் பொதுவாக முதுகில் ஒரு புடைப்புள்ளன. இரு புடைப்புக்களைக் கொண்ட ஒட்டகம் எது?
*பக்ரியன் ஒட்டகம்.*

## ஆசியாக் கண்டம்பற்றி உங்களுக்கு யாது தெரியும்?

1. பின்வரும் நாடுகளின் நாணயங்களின் பெயர்கள் யாவை?
   - அ) தாய்லாந்து
   - ஆ) இந்தோனேசியா
   - இ) பிலிப்பைன்ஸ்
   - ஈ) வங்காள தேசம்
   - உ) இந்தியா

2. பின்வரும் ஆசிய நாடுகளின் தலைநகரங்கள் எவை?
   - அ) லாசோஸ்
   - ஆ) வங்காளதேசம்
   - இ) நேபாளம்
   - ஈ) பூட்டான்
   - உ) மொங்கோலியா

3. வியட்நாமின் எல்லை நாடுகள் பின்வருவனவற்றில் எவை?
   - அ) கம்போடியா
   - ஆ) லாவோஸ்
   - இ) தாய்லாந்து
   - ஈ) மியன்மார் (பர்மா)
   - உ) சீனா

4. பின்வரும் நாடுகளின் பிரதான சமயங்கள் எவை?
   - அ) பர்மா
   - ஆ) இந்தியா
   - இ) இந்தோனேசியா
   - ஈ) பிலிப்பைன்
   - உ) வங்காளதேசம்

5. முக்கிய அரசியல்வாதிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. இவர்கள் எந்த எந்த நாட்டினைச் சேர்ந்தவர்கள்?
   - அ) சுகார்ட்டோ
   - ஆ) கே. ஆர். நாராயணன்
   - இ) ஒங்டெங்செயாங்
   - ஈ) லீ பெங்
   - உ) ஹசீனா வாஹித்

6. பின்வருவன எந்த எந்த நாடுகளில் அமைந்துள்ளன?
   - அ) அங்கோர் கோயில்
   - ஆ) தாஸ்மகால்
   - இ) பெருஞ்சுவர்
   - ஈ) பியூஜியாமா எரிமலை
   - உ) கதிர்காமம்

7. பின்வரும் நாடுகளின் பிரதான ஏற்றுமதிப் பொருட்கள் யாவை?
   - அ) மலேசியா
   - ஆ) ஹொங்கொங்
   - இ) இந்தோனேசியா
   - ஈ) தென் கொரியா
   - உ) பாகிஸ்தான்

விடைகள் மறுபக்கத்தில்

44. கிறிஸ்தவர்கள் வாழும் மிகப் பெரிய நாடு எது?
*ஐக்கிய அமெரிக்கா.*

45. வியட்னாமின் தலைநகர் எது?
*ஹோசிமின் சிற்றி.*

46. RAW என்ற இந்திய இரகசிய புலனாய்வுப் பிரிவின் விரிவுப் பெயர் யாது?
*Reaserch and Analysis Wing.*

47. 1994 ஆம் ஆண்டு இந்திய நகர் ஒன்றில் பெருமளவில் பிளேக் (Plague) நோய் தாக்கியது. அது எது?
*சூரத் நகர்.*

48. 2003 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் முறையும் hat - trick ஹற்றிச் பந்து எடுத்த வீச்சாளர் யார்?
*பிரெட்லீ (அவஸ்திரேலியா)*

முன்பக்க விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அ) | பாற் (Baht) | 2. | அ) | வியன்ரான் |
| | ஆ) | ருப்பியா (Rupiah) | | ஆ) | டாக்கா |
| | இ) | பேசோ (Peso) | | இ) | காட்மண்ட |
| | ஈ) | ராகா (Taka) | | ஈ) | திம்பு |
| | உ) | ரூபா | | உ) | உலான்பட்டூர் |
| 3. | அ) | கம்போடியா | 4. | அ) | பௌத்தம் |
| | ஆ) | லாவோஸ் | | ஆ) | இந்துசமயம் |
| | இ) | சீனா | | இ) | இஸ்லாம் |
| | | | | ஈ) | கிறிஸ்தவம் |
| | | | | உ) | இஸ்லாம் |
| 5. | அ) | இந்தோனேசியா | 6. | அ) | இந்தோனேசியா |
| | ஆ) | இந்தியா | | ஆ) | இந்தியா |
| | இ) | சிங்கப்பூர் | | இ) | சீனா |
| | ஈ) | சீனா | | ஈ) | யப்பான் |
| | உ) | வங்காளதேசம் | | உ) | இலங்கை |
| 7. | அ) | றப்பர் | | | |
| | ஆ) | நெசவுப் பொருட்கள் | | | |
| | இ) | பெற்றோலியம் | | | |
| | ஈ) | நெசவுப் பொருட்கள் | | | |
| | உ) | பருத்தி | | | |

49. உலகின் வடஅந்தத் தலைநகர் எது?
*றெஜக்யாவிக் (Rejkjarick).*

50. முதலாவது ஜேம்ஸ் பொன்ட் படம் யாது?
*Dr. No*

51. அலிபாபாவும் 40 திருடர்களும் என்ற புகழ்பூத்த கதையைக் கொண்டுள்ள நூல் எது?
*ஆயிரத்தெட்டு இரவுகள்.*

52. Wallaroo வல்லாரோ என்ற சுதேசிப் பெயரில் அழைக்கப்படும் விலங்கு யாது?
*கங்காரு.*

53. இந்தியாவின் முதலாவது சமஸ்கிருதத் திரைப்படம் எது?
*ஆதிசங்கராச்சாரியா.*

54. உலகிலேயே மிகச் செல்வம் நிறைந்த எழுத்தாளர் யார்?
*ஜே. கே. ரோலிங்.*

55. ஆங்கில எழுத்துக்கள் முதலில் 23 தான். பின்னர் சேர்க்கப்பட்ட மூன்று எழுத்துக்கள் எவை?
*J, U, W*

56. ஈராக் யுத்தத்திற்குப் பிறகு நான்கு நேட்டோவைச் சேர்ந்த ஐரோப்பிய யூனியன் நாடுகள் தமக்கெனத் தனியான இராணுவத் தலைமைப் பீடங்களை அமைத்துக்கொள்ள வுள்ளன. அவை எவை?
*பிரான்ஸ், ஜேர்மனி, பெல்ஜியம், லக்சம்பேர்க்.*

57. போர்த்துக்கல் நாட்டிலும் பார்க்க அதின போர்த்தக்கேயரைக் கொண்ட நாடு எது?
*பிறேசில்.*

58. எவரெஸ்டின் உச்சியை 17 மணி நேரத்திற்குள் அடைந்த வீரர் யார்?
*பாபு ஸ்ரீ சேர்பா.*

59. இந்தியாவில் வெளிவந்த நாவல்களில் மிக நீண்டத எது?
*மலையாளத்தில் விலாசினி எழுதிய அவகாசிகலா.*

60. $ 500 m வருமானத்தைப் பெற்ற 'யுராசிக் பார்க்' திரைப்படத்தின் இயக்குனர் யார்?
*ஸ்ரீபன் ஸ்பில்பேர்க்.*

61. அல்பிரெட் ஹிக்சொக்கின் முதலாவது திரைப்படம் எது?
*பிளாக்மெயில் (Blackmail).*

62. ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற முதலாவது இலங்கைப் பெண்மணி யார்?
*சுசந்திகா ஜயசிங்க.*

63. பசுமைப் புரட்சி எங்கு ஆரம்பமானது?
*மெக்சிக்கோ.*

64. ஊரோம யுத்தக் கடவுளின் பெயரால் வழங்கும் கோள் எது?
*செவ்வாய் (Mars).*

65. ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் எழுதிய நாவல் எது?
*Zabiba and the King.*

66. உலகின் பிரபல்யமான உணவு நிறுவனம் எது?
*மக் டொனால்ட்ஸ்.*

67. 1962 இல் நான்கு ஒற்றையர் டெனிஸ் ஆட்டத்தில் சம்பியனான அமெச்சூர் வீரர் யார்?
*Rod Laver.*


68. 'சிரோ வாற் லாம்ப்' (zero walt lamp) ஒன்றின் சக்தி எவ்வளவு?
*15 வாற்.*

69. EEG என்றால் என்ன?
*ELETROENCEPHALOGRAM.*

## உலகின் உயர் கோபுரங்கள்

உலகில் மிகவுயர்ந்த கோபுரம் சி என் ரவர் ஆகும். இது கனடாவில் ரொறண்டோ நகரத்திலுள்ளது. ௫௫௩ மீற்றர் உயரமானது. ஏனைய உயர் கோபுரங்கள் வருமாறு:

௧. ஒஸ்ராங்கினோ (*Ostangino*) கோபுரம், மொஸ்கோ (௫௫௩ மீற்.) ௨. எம்பயர் எஸ்டேட் கட்டடம் (*Empire State*) நியூயோர்க் (௪௪௩ மீற்.) 3. ரோக்கியோகோபுரம் ரொக்கியோ (333 மீற்.) ௪. ஈ.: பிள் கோபுரம் (*Eiffel*) பாரிஸ் (௩௨௦ மீற்.) ௫. சிட்னி கோபுரம் சிட்னி (௩௦௪ மீற்.) ௬. ஒலிம்பிக் கோபுரம், மூனிச் (*Munich*) (௨௯௦ மீற்.) 7. றான்ஸ்கோ கோபுரம் ஹவுஸ்ரன் அமெரிக்கா (௨77 மீற்.) ௮. சியோல் கோபுரம் வியோல் (௨௩௬ மீற்.)



CN 1 2 3 4 5 6 7 8

## மாதிரி வினாத்தாள்

# பொது அறிவு

எல்லா வினாக்களுக்கும் விடைதருக. தரப்பட்டுள்ள விடைத்தாளில் சரியான விடைக்கூட்டினை நிழற்றிக் காட்டுக.

1. நெருப்பின் உபயோகத்தினை அறிந்த ஆதி மனிதன்,
   1. ஒஸ்ரலோ பித்திகஸ்
   2. ஹோமோ எரக்ஸ்
   3. நியாண்டதல்
   4. ஹோமோ சபின்ஸ்

2. சுமேரியர்களின் நாகரிகம் சிறப்புற்றிருந்த நதிப்பள்ளத்தாக்கு எது?
   1. கங்கை நதி
   2. குவாங்கோ நதி
   3. தைக்கிரீஸ் நதி
   4. நைல் நதி

3. பத்துக்கட்டணங்கள் (Ten Commandment) என்ற திராப்படத்தின் புகழ்பூத்த இயக்குனர் யார்?
   1. சிசில்டி மெல்
   2. அல்பிரட் ஹிச்சொக்
   3. கேக் டக்கிளாஸ்
   4. ஸ்பிள் பேர்க்

4. இலியட் (Illiad), ஒடிசி (Odysse) ஆகிய இதிகாசங்களின் கர்த்தா யார்?
   1. பெர்னாட்ஷோ
   2. ஹோமர்
   3. ஜேம்ஸ் ஜோய்ஸ்
   4. ஷேக்ஸ்பியர்

5. லீப் வருடம் (Leep year) என்றால் என்ன?
   1. பெப்ருவரி மாதத்தில் 29 நாட்கள் வரும் ஆண்டு.
   2. 366 நாட்கள் வரும் ஆண்டு.
   3. நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை வரும் வருடம்.
   4. இவை அனைத்தும்.

6. முன்னய சோவித் சமவுடைமைக் குடியரசில் அடங்கியிருந்த நாடுகளின் தொகுதி,
   1. காசக்ஸ்ரான், போலாந்து, ஆமினியா, பொலீவியா.
   2. லத்விய, ஆமினிய, ஜோர்ஜியா, உக்கிரேயின்.
   3. ஆமினியா, பேரு, பெலிஸ், சென்பியர்.
   4. லர்தூய, தட்கிகிஸ்தான், பிஜி, தொங்கா.

7. பொன்வாயில் நகரம் (City of Golden Gate) என்பது எந்த நகரத்தைக் குறிக்கும்?
   1. ரோம் 2. அமிர்தசரஸ்
   3. பாலஸ்தீனம் 4. சான்பிரான்சிஸ்கோ

8. அவுஸ்திரேலியாவில் வீசும் சூறாவளி எப்பெயரினால் அழைக்கப்படுகிறது?
   1. ஹரிக்கேன் 2. தைபூன்
   3. வில்லிவில்லீஸ் 4. மோல்ட்றம்ஸ்

9. யூன் 5 ஆம் திகதியின் அகில உலக விஷேச தினம் யாது?
   1. உலக சுற்றாடல் தினம் 2. உலக குடிசனத் தினம்
   3. ஆசிரியர் தினம் 4. புவியின் தினம்

10. இத்தாலியின் பைசா (பீசா) நகரத்தில் அமைந்துள்ள கோபுரம் யாது?
   1. எம்பயர் 2. சாய்ந்த கோபுரம்
   3. ஈபிள் கோபுரம் 4. ரி. என். கோபுரம்

11. எட்மண்ட் கிலாரி என்பவர் யார்?
   1. கிரிக்கெட் வீரர்
   2. வாண்வெளியில் பயணம் செய்த முதல் இந்தியர்.
   3. எவரெஸ்ட் சிகரத்தை முதன் முதலில் ஏறியடைந்தவர்.
   4. உதைபந்தாட்டத்தில் போதைவஸ்து பாவித்துத் தடை செய்யப்பட்டவர்.

12. 'தாப்ரோபேன்' என இலங்கைக்குப் பெயரிட்டு முதலாவது உலகப் படத்தை வரைந்தவர் யார்?
   1. ஸ்ராபோ 2. தொலமி
   3. மேக்காட்டோ 4. வாஸஸ்கொடகாமா

13. கப்பல் பயணத்தை இலகுவாக்கி குறுந்தூரமாக்கிய பிரதான கால்வாய் எது?
   1. பனாமா 2. ஜிப்ரோல்டர்
   3. சென்லோறன்ஸ் 4. சுயெஸ்

14. சிங்கராஜவனம் எங்குள்ளது?
   1. ஊவா மாகாணம் 2. சப்பிரகமுவா மாகாணம்
   3. மேல் மாகாணம் 4. மத்திய மாகாணம்

15. இலங்கையின் தெங்கு ஆராய்ச்சி நிலையம் காணப்படும் இடம் யாது?

1. கன்னுறுவா
2. மஹாசிலுப்பள்ளம்
3. லுணுகல
4. அம்பாந்தோட்டை

16. இலங்கையின் பண்பாட்டு முக்கோணம் இணைக்கும் நகரங்கள் எவை?

1. பொலநறுவை - வவுனியா - குருநாகல்
2. அநுரதபுரம் - பொலநறுவை - கண்டி
3. அநுரதபுரம் - சிகிரியா - கொழும்பு
4. குருநாகல் - புத்தளம் - கொழும்பு

17. டைனமற்றைக் கண்டுபிடித்தவர் யார்?

1. ராற் சகோரார்
2. வில்ஹேம் ரொன்ஸ்யென்
3. அல்பிரெட் நோபல்
4. மார்க்கோணி

18. ஒளிப்படம் எடுக்கும்போது வெளித்தாள் நேரக் கணிப்பிற்கு உதவும் கருவி யாது?

1. Barometer
2. Exposuremeter
3. Photometol
4. Telemeter

19. ஒரு மின்சாரக் குமிழ் எவ்வளவு மின்சாரத்தை பயன்படுத்துகிறது என்பதை அளவிடும் அளவு யாது?

1. வோல்ற் (Volt)
2. அம்பியர் (Ampire)
3. வாற் (Walt)
4. பைற் (Bite)

20. மனித உடலில் ஓடும் இரத்த வகைகள் எவை?

1. A, B, C
2. A, B, AB, O
3. A, B, C, D, E, K,
4. A, AB, BO

21. பற்களைத் தாக்கும் நோய் எது?

1. எக்சிமா
2. கசம்
3. பயோரியா
4. பயிலேரியா

22. அது மனிதனுக்கு சிறிய அடிதான். ஆனால் மனித குலத்திற்கு மாபெரும் பாய்ச்சல் என்று கூறியவர் யார்?

1. கலிலியோ
2. நீல் ஆம்ஸ்ரோங்
3. யூரி ககாரின்
4. தோமஸ்

23. மிகிந்தலையின் வரலாற்று முக்கியத்துவம் யாது?
   1. வெள்ளரசுக் கிளையுடன் வந்த சங்கமித்தை தேரி வந்திறங்கிய இடம்.
   2. காசியப்பனின் கோட்டை
   3. தேவநம்பியதீசன் மகிந்த தேரரைச் சந்தித்த இடம்
   4. எல்லாளனுக்கும் துட்டகைமுனுவுக்கும் இறுதி யுத்தம் நிகழ்ந்த இடம்.

24. கொழும்பு, காலி, கண்டி, யாழ்ப்பாணம் என நான்கு நிர்வாகப் பிரிவுகளாக இலங்கையைப் பிரித்து ஆண்ட மேலைத்தேசவர் யார்?
   1. போத்துக்கேசர் 2. பிரான்சியர்
   3. ஒல்லாந்தர் 4. ஆங்கிலேயர்

25. லிறா (Lira) என்பது எந்த நாட்டின் நாணயம்?
   1. துருக்கி 2. லெபனான்
   3. பேரு 4. ஈரான்

26. டென்டார்க்கின் பாராளுமன்றப் பெயர் யாது?
   1. டயல் 2. றிக்ஸ்டாக்
   3. சோறா 4. போகெற்றிங்

27. Drop, Let, Love all, Duce, Samash என்னும் வார்த்தைகள் பயன்படுத்தப்படும் விளையாட்டு எது?
   1. பிலியட் 2. சதுரங்கம்
   3. கிரிக்கெட் 4. பாட்மின்ரன்

28. கால்பந்தாட்டத்திற்குப் புகழ்பெற்ற இடம் எது?
   1. புருக்லின் 2. புரூக்லண்ட்
   3. விம்பில்டன் 4. மெல்போன்

29. 12 ஆவது ஆசிய விளையாட்டு எங்கு நிகழ்கின்றது?
   1. ஹாரோசிமா 2. மணிலா
   3. டோக்கியோ 4. புதுடில்லி

30. கடைசியாக நிகழ்ந்த ஒலிம்பிக் போட்டி எங்கு நிகழ்ந்தது?
   1. ஜேர்மனி 2. அவுஸ்திரேலியா
   3. இத்தாலி 4. சுவீடன்

31. செவ்வாயில் இறங்கிய விண்கலம் யாது?
1. கொலம்பியா 2. மாரினர்
3. பாத்பைண்டர் 4. மாரிஸ்

32. 20 ஆம் நூற்றாண்டின அற்புதங்களில் ஒன்றாகக் கருதப்படும் கண்டுபிடிப்பு யாது?
1. டிஎன்ஏ (DNA) 2. கணனி (Computer)
3. பலபடியாக்கல் (Cloning) 4. எய்ட்ஸ் (Aids)

33. பல்வேறு கம்பியூட்டர் நெட்வேர்க்ஸ் அமைப்புக்கள் ஒன்றிணைக் கப்பட்டு தகவல் பரிமாற்றம் செய்துகொள்ள உதவும் அமைப்பு?
1. கம்பியூட்டர் நெற்வேக்ஸ் 2. இன்றர் நெற்வேக்
3. மாநகர நெற்வேக் 4. வைட் ஏரியா நெற்வேக்(WAN)

34. எந்தவொரு தனிநபரோ, குழுவோ, நிறுவனமோ, அரசாங்கமோ உரிமை கொண்டாட முடியாத தகவல் தொழில்நுட்பம் யாது?
1. பேஜர் 2. தொலைபேசி
3. செலூலர்போன் 4. இன்ரநெற்

35. சிறுவர் உரிமைகள் தொடர்பான நான்கு முக்கிய பிரிவுகள் எவை?
1. உணவு, உடை, கல்வி, பாதுகாப்பு
2. வாழ்க்கை, அபிவிருத்தி, பாதுகாப்பு, பங்குபற்றல்
3. வாழ்க்கை, விளையாட்டு, உணவு, கல்வி
4. சுதந்திரம், பாதுகாப்பு, போசாக்கு, கல்வி

36. வறுமை ஒழிப்புக்கு ஒரு புதிய வழியாக இலங்கைஅரசு அறிமுகப்படுத்தியிருக்கும் நிகழ்ச்சித் திட்டம் யாது?
1. சமுர்த்தி 2. சனசவிய
3. சனசக்தி 4. உணவு முத்திரை

37. எயிட்ஸ் நோய் பரவாத நிலைகள் எவை?
1. ஆண், பெண் உடலுறவு
2. முத்தமிடல், கோப்பைகள், தட்டுகள் முதலிய பாவனைப் பொருட்களை உபயோகித்தல்
3. நுளம்பு மூட்டைப்பூச்சி போன்றவை கடித்தல்
4. இவை அனைத்தும்

38. வை - நதி உடன்படிக்கை எது?

1. அரபாத்திற்கும் நெதன்பாகுவிற்குமிடையில் பிலி கிளிங்ரனால் செய்து வைக்கப்பட்ட சமாதான உடன்படிக்கை
2. பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரோலுக்குமிடையிலான ஒப்பந்தம்
3. அயர்லாந்துக்கும் பிரித்தானியாவிற்குமிடையிலான உடன்படிக்கை
4. PLO விற்கும் IRO விற்கும் இடையிலான உடன்படிக்கை

39. இரண்டிற்கு மேற்பட்டோர் தொலைபேசித் தொடர்பு மூலம் உரையாடிக்கொள்வதோடு இரு முறைகளிலும் குரல் கேட்பதுடன் உருவமும் தெரிதல் எவ்வாறு அழைக்கப்படும்?

1. இ-மெயில்
2. இன்ரநெற்
3. வீடியோ கான்பிரான்ஸிங்
4. வாய்ஸ் மெயில்

40. தொழில் வாய்ப்புகளை உருவாக்கவும் வறியோரின் வருமானத்தை விருத்தி செய்யவும் உதவும் அரசாங்க சேமநல நிகழ்ச்சித் திட்டம் யாது?

1. மக்கள் வங்கிக் கடன் திட்டம்
2. சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம்
3. சனத்தொகை நிதியம்
4. சனசக்தி நிகழ்ச்சித் திட்டம்

41. எயிட்ஸ் நோயை ஏற்படுத்தும் வைரஸ் எது?

1. DNA
2. RNA
3. HIV
4. VCG

42. சோவியத் சம உடமைக்குடியரசின் உடைவிற்குக் காரணமாக அமைந்த பெரஸ்ரோபிக்கா கோட்பாட்டினை வைத்தவர் யார்?

1. லெனின்
2. குசேவ்
3. கோப்பச்சேவ்
4. பிரெசனேவ்

43. குளிரூட்டப்பட்ட உயிரணு (விந்து)விலிருந்து முதலாவது குழந்தை பிறந்த நாடு எது? இந்த நாட்டிலேயே முதலாவது டெஸ்ரியூப் குழந்தையும் பிறந்தது?

1. கனடா
2. ஐக்கிய அமெரிக்கா
3. சுவீடன்
4. அவுஸ்திரேலியா

44. இலங்கையில் குடிசனமதிப்பு ஒதுக்கப்படும் காலஅளவு எத்தனை ஆண்டுகள்?

1. 12 வருடங்கள்
2. 15 வருடங்கள்
3. 10 வருடங்கள்
4. 20 வருடங்கள்

45. குவாங்யூ (Kuvangju) மனித உரிமைகள் விருது இவ்வாண்டு எவருக்கு வழங்கப்பட்டது?

1. மைக்கல் கபெசெரா
2. பசில் பெர்ணான்டோ
3. ராபர்ட் ஜி. முகாபே
4. நெல்சன் மண்டேலா

46. DPT, OPV என்னும் மருந்துகள் எவர்களுக்குரியவை?

1. 15 வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு
2. 3 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு
3. 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கு
4. வயோதிபருக்கு

47. ஷார்ஜா கிரிக்கெட் போட்டியில் இவ்வாண்டு தங்கக்கிண்ணத்தை (வெற்றிக்கிண்ணத்தை) சுவீகரித்துக்கொண்ட நாட்டின் காப்டன் யார்?

1. சயீட்அ.்.ப்ரிதி
2. கபில் தேவ்
3. சனத் ஜெயசூரிய
4. களுவிதாரண

48. எரிக் சொல்ஹெய்ம் என்பவர் யார்?

1. நோர்வே நாட்டவர்
2. பாலஸ்தீனம் - இஸ்ரேல் பேச்சுவார்த்தையில் தூதுவராகக் கடமை புரிந்தவர்
3. இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தோற்றுவிக்க முயல்பவர்
4. இவை அனைத்தும்

49. ஓசோன் படையைப் பாதுகாப்பதற்காக மொன்ரியல் கட்டமைப்பின் 13 ஆவது அமர்வு எங்கு நடைபெறவுள்ளது?

1. இலங்கை
2. இந்தியா
3. அமெரிக்கா
4. சுவீடன்

50. சிறுவர்களின் உரிமைகளையும் தேவைகளையும் பாதுகாக்கும் நிறுவனம் எது?

1. CARE 2. SCF 3. UNICEF 4. WHO

51. ஏரியல் சரோன் எந்த நாட்டின் பிரதமர்?
    1. போலாந்து    2. நோர்வே
    3. ஜோர்டான்    4. இஸ்ரேல்

52. $E = Mc^2$ என்ற தலைசிறந்த சமன்பாட்டினைத் தந்த அறிஞர் யார்?
    1. கெப்லர்    2. இயான் ஸ்டீவர்ட்
    3. ஐன்ஸ்டின்    4. நியூட்டன்

53. Das Kapta என்ற புகழ்பூத்த நூலின் ஆசிரியர் யார்?
    1. கார்ள் மார்க்ஸ்    2. ஏஞ்சல்
    3. எடிசன்    4. லெனின்

54. ஹிட்லரின் ஜேர்மனியை வெற்றிகொள்வதற்கான திட்டம் வகுக்கப்பட யால்ரா மாநாட்டில் (Yaltra Conference) கலந்துகொண்ட சர்வதேசத் தலைவர்கள் யார்?
    1. சேர்ச்சில், றூமன், லெனின்
    2. ரூஸ்வெல்ட், சேர்ச்சில், ஸ்ராலின்
    3. ஸ்ராலின், சேர்ச்சில், பிராங்ளின்
    4. சேர்ச்சில், லெனின், ரூஸ்வெல்ட்

55. நடனம், சங்கீதம், ஓவியம், நாடகம் ஆகிய நான்கு கலைகளையும் இணைக்கும் உலகப்புகழ் பெற்ற நடனம் எது?
    1. பரதம்    2. கதகளி
    3. சிம்பொனி    4. பாலட் (Ballet)

56. கணனியைக் கண்டுபிடித்தவர் யார்?
    1. எம். ரோஸ்    2. சாள்ஸ் பாபோஜ்
    3. ஐன்ஸ்டீன்    4. மக்டொனாட்

57. இன்ரநெற் இணையத்திற்கு - சேவைக்கு ஓரிடத்தில் இருக்க வேண்டியவை எவை?
    1. கம்பியூட்டர்    2. மோடம்
    3. தொலைபேசி    4. இவையனைத்தும்

58. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
    1. இரவீந்திரநாத் தாகூர்    2. அனக்காரிக்க தர்மபாலா
    3. ஆனந்த சமரக்கோன்    4. சோமபால குணதீர

59. நோபல் பரிசு பெற்ற ஒல்லாந்துப் பெண்மணி யார்?
1. அன்னை தெரேசா
2. மேரிகியூரி
3. இந்திரா
4. அகஸ்தாகிறிஸ்தி

60. 100 அவது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி எவ்வாண்டு எங்கு நடைபெற்றது?
1. 2000, சிட்னி
2. 1996, அட்லாண்டா
3. 1998, சியோல்
4. 1984, லொஸ்ஏஞ்சல்

61. பவளவிழா எத்தனை ஆண்டு நிறைவைக் குறிக்கும்?
1. 50 ஆண்டுகள்
2. 80 ஆண்டுகள்
3. 75 ஆண்டுகள்
4. 60 ஆண்டுகள்

62. விண்வெளியில் பயணம் செய்த ஒல்லாந்துப் பெண்மணி யார்?
1. கல்பனா சௌளதலா
2. வலாண்டினா டெவஸ்கோவா
3. ஜிங் கோட் பேய்
4. மார்டீனா நவரத்திலோவா

63. Titanic படத்தின் இயக்குனர் யார்?
1. ஸ்பிள் பேர்க்
2. சிசில் டிமெல்
3. ஜேம்ஸ் கமரான்
4. ஹிக்சொக்

64. கடைசி ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்று இலங்கைக்குப் புகழ் தேடித்தந்தவர் யார்?
1. தமயந்தி தர்ஷா
2. சுசந்திகா ஜெயசிங்க
3. திலகரத்ன
4. காமினி சுசங்கா

65. UNESCO வினால் சமாதான நகரம் என 1999 அம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட நகரம் எது?
1. கண்டி
2. கொழும்பு
3. திருகோணமலை
4. மட்டக்களப்பு

66. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் என்பவர் யார்?
1. இலங்கையின் நாடகக் கலைஞர்
2. இலங்கையின் புகழ்பூத்த திரைப்பட இயக்குனர்
3. இலங்கையின் கல்வியாளன்
4. இவை அனைத்தும்

67. 1994 இல் வியாழனுடன் மோதிய வால்நட்சத்திரம் எது?

1. ஹலி
2. லெவி
3. சூமேக்கர்லெவி
4.

68. இருதய மாற்று சிகிச்சையை முதலில் வெற்றிகரமாகச் செய்தவர் யார்?

1. கிறிஸ்டியன் பேர்னாட்
2. ஸ்ரெப்ரோ
3. எட்வேட்ஸ்
4. லூசியா பிறவுன்

69. புராதன மருத்துவமுறை அல்லாதது?

1. அக்குபஞ்சர்
2. ஆயுள்வேதம்
3. அலோபதி
4. சித்த மருத்துவம்

70. CIA, KGP, IIS, RAW என்பன எவை?

1. தினசரிகள்
2. விமானங்கள்
3. உளவு ஸ்தாபனங்கள்
4. மருந்துவகைகள்

71. இலங்கையின் தேசிய மரம் யாது?

1. அரசமரம்
2. நாகமரம்
3. வேம்பு
4. ஆலமரம்

72. மும்மதஸ்மகால் இலங்கையில் யாருடைய வாசஸ்தலம்?

1. ஜனாதிபதி
2. பிரதமந்திரி
3. சபாநாயகர்
4. பிரதம நீதியரசர்

73. இலவசக் கல்வியை இலங்கைக்கு வழங்கிய பெருமகன் யார்?

1. டி.எஸ்.சேனனாயக்க
2. கன்னங்கர
3. அநகாரிக்க தர்மபாலா
4. பொன்னம்பலம்

74. கட்டுநாயக்க, பியகம, கொக்கல ஆகிய இடங்களில் அமைந்துள்ளவை யாவை?

1. விமானத்தளங்கள்
2. விலங்குகள் சரணாலயம்
3. சுதந்திர வர்த்தக வலயங்கள்.
4. மிக்சக்தி நிலையங்கள்

75. இலங்கையின் புகழ்பூத்த நாவலாசிரியர் யார்?

1. செங்கை ஆழியான்
2. மார்டின் விக்கிரமசிங்க
3. கருணசேன ஜயலத்
4. மானியல்

76. பெரஸ்ரேயிக்கா என்ற கருத்தியலை வழங்கியவர் யார்?
   1. குருச்சேவ்
   2. கொப்பசேவ்
   3. றீகன்
   4. ஸ்டாலின்

77. 1984 இல் ரெஸ்ற்ரியூப் மூலம் உரே தடவையில் மூன்று குழந்தைகளைப் பெற்ற பெண்மணி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   1. அவஸ்திரேலியா
   2. பிரான்ஸ்
   3. அமெரிக்கா
   4. நோர்வே

78. எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத், இஜ்ரேலியப் பிரதமர் மெனாசெம் பெஜின் ஆகியோருக்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி காட்டரால் உருவாக்கப்பட்ட மத்திய கிழக்குச் சமாதான ஒப்பந்தம் எது?
   1. யாழ்ரா ஒப்பந்தம்
   2. வை நதி ஒப்பந்தம்
   3. காம்.ஃப் டேவிட் ஒப்பந்தம்
   4. பாலஸ்தீனிய - இஸ்ரேல் ஒப்பந்தம்

79. ருஷ்டி என்ற எழுத்தாளன் எழுதிய சாத்தானின் வாசகங்கள் என்ற நாவலுக்காக ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்தவர் யார்?
   1. அலி அப்துல்லாசலே
   2. பிடல் காஸ்ரோ
   3. அயத்துல்லா கொமெய்னி
   4. நைஸ்போர் சோக்லோ

80. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முதலாவது செயலாளர் யார்?
   1. கோபி அனன்
   2. டிரைக்வேலே
   3. மர்ஸ்க்ஜோல்ட்
   4. உ தாண்ட்

81. உலகில் அதிக குடித்தொகை கொண்ட நகரம் எது?
   1. நியூயோர்க்
   2. டோக்கியோ
   3. மெக்சிக்கோ சிற்றி
   4. சாவோபாங்லே

82. உலகின் மிகப்பெரிய செல்வந்தன் யார்?
   1. அமெரிக்க வால்டன் குடும்பம்
   2. அமெரிக்க மார்ஸ் குடும்பம்
   3. சவுதி அரேபிய மன்னர் .பாஹாத்
   4. புருனே சுல்தான் ஹசனல் வார்வ்லா

83. ஷிண்டோ சமயம் (Shintosm) எந்த நாட்டிற்குரிய மதம்?
1. சீனா
2. யப்பான்
3. கொரியா
4. தாய்லாந்து

84. தனிமனித உரிமைகள் கழகத்தை (Amnesty International) முதன்முதல் ஆரம்பித்த பிரித்தானியர் யார்?
1. பியர்ரேசானே
2. பீட்டர் பெரன்சன்
3. டூடாண்ட்
4. சேர்ச்சில்

85. SAARC நிறுவனத்தில் அடங்காத நாடு எது?
1. இந்தியா
2. மாலைதீவு
3. தாய்லாந்து
4. பூட்டான்

86. நோபல் பரிசு பெற்ற முதலாவது இந்தியா யார்?
1. அன்னை தெரேசா
2. ரவீந்திரநாத் தாகூர்
3. சி. வி. இராமன்
4. ஹர்க்கோபிந் கொரானா

87. 'சக்கரைக் கிண்ணம்' என்று எந்த நாட்டை அழைப்பர்?
1. துருக்கி
2. கியூபா
3. யாவா
4. பர்மா

88. ஹெலிக்கொப்டரை உருவாக்கிய பிரான்சியர் யார்?
1. எலிசதாம்சன்
2. எர்னோ ரூபிக்
3. எதியன் ஒக்மிச்சென்
4. ஜார்ஜ் காய்லி

89. புராதன உலக அதிசயங்களுள் அடங்காதது எது?
1. ஜுயுஸ் சிலை
2. கா∴பூவில் பிரமிட்
3. சீனப் பெருஞ்சுவர்
4. பாபிலேனிய தொங்குதோட்டம்

90. உலகின் மிகவுயர்ந்த கட்டிடமாகக் கருதப்படுவது யாது?
1. சி.என். கோபுரம்
2. சியர்ஸ் கட்டடம்
3. எம்பயர்ஸ்ரேட் கட்டிடம்
4. ஈபிள்

91. மகாநாம தேரர் யாத்த வரலாற்றுப் பனுவல் யாது?
1. சூளவம்சம்
2. மகாவம்சம்
3. கோகல சந்தேஷி
4. மகாபாரதம்

92. ‘நுவான்வெலிசாயா’ வைக் கட்டுவித்த மன்னன் யார்?

1. மகாசேனன்
2. சாந்தாதீசன்
3. துட்டகைமுனு
4. வசபன்

93. மின்னேரியாக் குளத்தை நிறுவியதன் மூலம் நிலையான புகழையும் பெருமையையும் பெற்ற மன்னன் யார்?

1. துட்டகாமினி
2. மகாசேனன்
3. தாதுசேனன்
4. பராக்கிரமபாகு 1

94. தென்கிழக்காசிய உடன்படிக்கைத் தாபனம் என்பதன் சுருக்கம் பின்வருவனவற்றுள் எது?

1. SEATO
2. SAARC
3. SATO
4. OPEC

95. யூரோ நாணயத்தை ஏற்றுக்கொள்ளாத நாடுகள் எவை?

1. ஜேர்மனி, பிரான்ஸ், இந்தியா
2. போத்துக்கல், ஸ்பெயின், ஆஸ்திரியா
3. போலாந்து, யூகோசிலாவியா, லத்வியா
4. டென்மார்க், சுவீடன், கிரீஸ்

96. 1998 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் ஒன்றையும் வெண்கலப்பதக்கம் ஒன்றையும் ஈட்டிக்கொண்ட இலங்கை வீரர் - வீராங்கனை யார்?

1. சுகத்திலகரத்ன
2. சிறிபாணி ருலவன்ச
3. தமயந்தி தர்சா
4. ரிஸ்வி

97. ஆதர் சி. கிளார்க் என்பவர் பின்வருவனவற்றுள் எது சம்பந்தமாகப் புகழ்பெற்றவர்?

1. மொறட்டுவ பல்கலைக்கழகத் துணைவேந்தர்
2. ஒரு எதிர்வுகூறலறிஞர்
3. விஞ்ஞானக் கட்டுக்கதை எழுத்தாளர்
4. 2001 ஒடிசி என்ற திரைப்படக் கதாசிரியர்

98. காட்ஸ் ஒப் சிமோல் திங்ஸ் (God of small things) என்ற நூலை எழுதி பூக்கர் பரிசு பெற்ற பெண் எழுத்தாளர் யார்?

1. அகதாவிறிஸ்டி
2. ராஜம் விருல்ணன்
3. அருந்ததிராய்
4. கல்பனா சௌளா

99. இலங்கையின் இனங்களுக்கிடையிலான உறவினைப் பலப்படுத்தும் சிங்கள சினிமா ஒன்று அண்மையில் வெளிவந்தது. அது யாது?

1. அல்லப்பு கெதற
2. கம்பெரலிய
3. சாரவிற்ற
4. சரேஜா


100. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?

1. கிரிக்கெட்
2. எல்லே
3. பட்மின்ரன்
4. கரம்

விடைகள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. - 3 | 2. - 3 | 3. - 1 | 4. - 2 | 5. - 4 |
| 6. - 2 | 7. - 4 | 8. - 3 | 9. - 1 | 10.- 2 |
| 11.- 3 | 12.- 2 | 13.- 4 | 14.- 2 | 15.- 3 |
| 16.- 2 | 17.- 3 | 18.- 2 | 19.- 3 | 20.- 2 |
| 21.- 3 | 22.- 2 | 23.- 3 | 24.- 3 | 25.- 1 |
| 26.- 4 | 27.- 4 | 28.- 3 | 29.- 1 | 30.- 2 |
| 31.- 4 | 32.- 3 | 33.- 2 | 34.- 4 | 35.- 2 |
| 36.- 1 | 37.- 4 | 38.- 1 | 39.- 2 | 40.- 2 |
| 41.- 3 | 42.- 3 | 43.- 4 | 44.- 3 | 45.- 2 |
| 46.- 2 | 47.- 3 | 48.- 4 | 49.- 1 | 50.- 3 |
| 51.- 4 | 52.- 3 | 53.- 2 | 54.- 2 | 55.- 4 |
| 56.- 2 | 57.- 4 | 58.- 3 | 59.- 1 | 60.- 2 |
| 61.- 3 | 62.- 2 | 63.- 3 | 64.- 2 | 65.- 3 |
| 66.- 2 | 67.- 3 | 68.- 1 | 69.- 3 | 70.- 3 |
| 71.- 3 | 72.- 2 | 73.- 2 | 74.- 3 | 75.- 2 |
| 76.- 2 | 77.- 1 | 78.- 3 | 79.- 3 | 80.- 2 |
| 81.- 3 | 82.- 4 | 83.- 2 | 84.- 2 | 85.- 3 |
| 56.- 2 | 87.- 2 | 88.- 3 | 89.- 2 | 90.- 3 |
| 91.- 2 | 92.- 3 | 93.- 2 | 94.- 1 | 95.- 3 |
| 96.- 1 | 97.- 3 | 98.- 3 | 99.- 4 | 100. - 2 |

உங்கள்
# பொது அறிவு
gk





கமலம் பதிப்பகம்